354

# தமிழ்நாடு

## சட்டமன்றப் பேரவை நடவடிக்கை

செயலக வெளியீடு

மார்ச் 24, 1999 தொகுதி 66
எண் 3

D
V2'l,31 N99
N99.66.3
221072

## உள்ளடக்கம்

**24-3-1999**

*பக்கங்கள்*


1. வினாக்கள்-விடைகள்---

| | |
|---|---|
| உடுகுறியிட்ட வினாக்கள் | 255-295 |

2. சிறப்புக் கவன ஈர்ப்பு—

| | |
|---|---|
| பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக உறுப்பினர் தாமரைக்கனிக்கு அளித்த 15 நாட்கள் சிறைத் தண்டனையை நிறுத்தி வைத்து உயர்நீதிமன்றத்தின் இடைக்கால ஆணை. | 295-364 |
| திரு. சி. ஞானசேகரன் | 296-302 |
| திரு. சி. வேலாயுதன் | 302-303 |
| திரு. டி. மணி | 303-304 |
| திரு. கே. சுப்பராயன் | 304-307 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 307 |
| திரு. ஆ. இராசேந்தரன் என்கிற தீரன் | 307-308 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 308-315 |
| *திரு. அ. லெ. சுப்பிரமணியன் | 315-319 |
| *திரு. லா. சந்தானம் | 319-320 |
| *திரு. ப. ரங்கநாதன் | 320-322 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 323-324 |

பக்கங்கள்

சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

*டாக்டர் க. கிருஷ்ணசாமி 324-327
*திரு. ச. அழகிரி 327-330
திரு. ஜி. நிஜாமுதீன் 330-333
திரு. ஜி. கே. மணி 334-335
திரு. பி. வெங்கடசாமி 335-336
திரு. ம. அப்துல் லத்தீப் 336-340
திரு. ஜி. பழனிசாமி 340-343
திரு. சோ. பாலகிருஷ்ணன் 343-344
*மாண்புமிகு பேராசியர் க. அன்பழகன் 345-352
*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 352-359
மாண்புமிகு பேரவைத் தலைவர் 359-364

3. அறிவிப்பு

பேரவை அலுவல் 364

4. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 365-366

221672

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### பங்குனி 10, வெகுதான்ய—திருவள்ளுவர் ஆண்டு 2030

### 1999 மார்ச் 24, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** *அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்"

ஆதாரங்களைக் காட்டி இதுதான் உண்மை என்று தெளிவாகக் கூறப்படுகிற ஒன்றை, வேண்டுமென்றே இல்லை என மறுத்துரைப்பவரைப் பேய்களின் பட்டியலில்தான் வைக்க வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். *வினா எண் 161, திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**161—**

**கல்லூரிகளில் முறைமாற்றம் முறையினைச் செயல்படுத்துதல்**

***11332—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு கலைக் கல்லூரிகளில் முறைமாற்றம் முறையைச் செயல்படுத்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1999 மார்ச் 24

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பொதுவாக அரசுக் கல்லூரிகளில் எல்லாம் shift முறையைச் செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசுக் கல்லூரிகளின் வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை பரவலாக மிக அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. எனவே, மாநில அரசு நடைமுறையில் இருக்கிற சிக்கல்களை உணர்ந்து shift முறையைக் கையாள்வதற்கு மறுபரிசீலனை செய்து அதற்குரிய நடைமுறைகளை உருவாக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் எல்லா வகுப்புகளிலும் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் இருக்கிறார்கள் என்பது இன்றைய நிலைமை அல்ல. ஒரு வகுப்பில் எவ்வளவு மாணவர்கள் இருக்கலாமோ, அந்த அளவுக்குத்தான் மாணவர்கள் சேர்க்கப்பட்டு, அவர்கள்தான் பயில்கிறார்கள். மொத்தமாக, சில கல்லூரிகளில் இட வசதிக் குறைவு காரணமாக, எல்லா வகுப்புகளையும் ஒரே நேரத்தில் நடத்த முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. அப்படியுள்ள கல்லூரிகளில், அங்கேயுள்ள மாணவர்களுடைய இசைவோடு, பெற்றோர்—ஆசிரியர் கழகம் இருக்குமானால், அவர்களையும் கலந்துகொண்டு, முதல்வர் தீர்மானித்து, shift முறையை அமல்படுத்த அனுமதிக்கப்படுகிறது. அப்படி விழுப்புரத்தில் உள்ள ஒரு கல்லூரியில் காலை நேரத்தில் கலை பாடப் பிரிவுகளும், மாலை நேரத்தில் அறிவியல் பாடப் பிரிவுகளும் நடத்தப்படுகின்றன. இப்படி நடத்தக்கூடாது என்று தடையில்லை. ஆனால் நடத்த வேண்டிய அவசியம் உள்ளபோது, தேவைக்கேற்பத் தெரிவித்து, அவர்கள் அதை மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு இப்போது அரசுக் கலைக் கல்லூரிகளைத் தொடங்குவது இல்லை என்ற ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கிற



1999 மார்ச் 24]

காரணத்தினாலே புதிதாக வரக்கூடிய தேவைக்கேற்ப நாம் மற்ற இடங்களிலே கல்லூரிகளை உருவாக்க முடியாமல், இருக்கிறோம். ஆனால், ஏற்கெனவே இருக்கக்கூடிய கல்லூரிகளில் சேர்வதற்காக நிறைய மாணவர்கள் மனுக்களைப் போடுகிறார்கள். ஆனால் நம்மால் எவ்வளவு அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அனுமதிக்கப்பட்ட அளவிற்குத்தான் மாணவர்களைக் கல்லூரிகளிலே எடுத்துக்கொள்ள முடிகிறது. ஆனால் தேவையோ மிக அதிகமாக இருக்கிற காரணத்தினாலேதான், அந்தத் தேவைக்கு ஈடு கொடுக்கிற வகையிலே shift முறையை நடைமுறைப்படுத்தினால் ஏராளமான அளவிற்கு நம்மால் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். தனியார் கல்லூரிகளிலே இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், ஒருசில கல்லூரிகளில் மட்டுமல்ல, எல்லா கல்லூரிகளிலும், எங்கெங்கெல்லாம் தேவை ஏற்படுகிறதோ அங்கெங்கெல்லாம் இந்த shift முறையை அமல்படுத்துவதற்கு உரிய கருத்துருவை ஏற்று, உடனடி நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிக ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லாத அளவிற்கு, இருக்கிற ஆசிரியர்களைக் கொண்டு, shift முறையை நடத்தக்கூடிய வாய்ப்பு இருக்குமானால், எந்தக் கல்லூரியும் இதை அமல்படுத்துவதை அரசு ஏற்றுக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இலவச bus pass பெற்றுக்கொண்டு, பள்ளிகளுக்குச் செல்கின்ற மாணவர்கள், பள்ளி ஒரே நேரத்தில் ஆரம்பிப்பதால் மிகுந்த அவதிக்குள்ளாகிறார்கள். குறிப்பாக, எங்கள் பகுதியை எடுத்துக்கொண்டால், திருத்தணியில் இருக்கின்ற அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் செல்கின்ற மாணவர்கள், எங்களுடைய பகுதியிலேயிருந்து செல்கின்றபோது, ஒரே நேரத்திலே செல்லுகின்றபோது பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகிறார்கள். கிராமப்புறங்களில் இருக்கிற பள்ளிகளில், குறிப்பாக ஒரு வகைப்படுத்தப்பட்ட shift முறையை அமல்படுத்துவோமானால், நிச்சயமாக இந்த அவதி குறையும். இதை அரசு ஆலோசிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[1999 மார்ச் 24

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தப் பள்ளிக்கூடமாக இருந்தாலும், மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி எதுவாக இருந்தாலும், அந்தப் பள்ளிகளிலே சேர்ந்திருக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்தும், பணியாற்றுகிற ஆசிரியர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்தும், வகுப்புப் பிரிவுகளைப் பொறுத்தும், அந்தப் பள்ளிக்கூடத்தின் கட்டட வசதியைப் பொறுத்தும் shift முறை நடத்துவது பயன் உள்ளது என்று அவர்கள் தீர்மானிப்பார்களானால், பெற்றோர்-ஆசிரியர் கழகத்தினுடைய இசைவோடு மாணவர்களுக்கும் மாறுபாடு இல்லாமல் தீர்மானிக்கப்படுமானால், அது அரசால் ஏற்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 162, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**162—**

### நாகப்பட்டினத்தில் தேர்வு மையம்

***12936—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருத்துவம், சட்டம், Engineering, Polytechnic போன்ற பிரிவுகளுக்கு நடத்தப்படும் நுழைவுத் தேர்வுக்கான தேர்வு மையத்தை நாகப்பட்டினத்திலும் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் இருக்கையில் இல்லை.

வினா எண் 163, திரு. கோ. நயினா முகம்மது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



1999 மார்ச் 24]

**163—**

### அமரர் ஊர்தி வழங்குதல்

***16666—திரு. கோ. நயினா முகம்மது:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. கோ. நயினா முகம்மது:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் 52 படுக்கைகள் உள்ளன. மேலும், 25 இலட்சம் ரூபாய செலவில், 25 படுக்கை வசதிகள் ஏற்படுத்த கட்டடம் கட்டும் பணி நடைபெறுகிறது. ஆக மொத்தம் 77 படுக்கை வசதிகளைக் கொண்டு ஓரிரு மாதங்களில் அந்த மருத்துவமனை செயல்படத் தொடங்கும். அதில் மகப்பேறு வசதியும் உள்ளது. சுமார் 50 கி.மீ. தொலைவில் உள்ள சிவகிரி மற்றும் சுற்றுப்புற கிராமங்களிலுள்ள நோயாளிகள் அனைவரும் இந்த மருத்துவமனைக்கே வருகின்றனர். அப்படி வரும் நோயாளிகளில் சிலர் மருத்துவமனையில் இறக்க நேரிட்டாலோ, அல்லது விபத்தில் இறக்க நேரிட்டாலோ அவர்களின் பிரேதத்தை எடுத்துச் செல்ல அமரர் ஊர்தி கடையநல்லூரில் கிடையாது. அதனால் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, இதைக் கருத்தில்கொண்டு கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி ஒன்று வழங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்சமயம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மட்டுமே அமரர் ஊர்தி வழங்கப்படுகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்துக்களையெல்லாம் அடிப்படையாக வைத்து, இந்த ஆட்சி

[1999 மார்ச் 24

பொறுப்பு ஏற்றுக்கொண்ட உடனே, தாலுகா அளவிலே இருக்கக்கூடிய மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முதல்கட்டமாக, 4.46 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 127 ஆம்புலன்ஸ் வாகனங்கள் வாங்கி அனைத்து தாலுகா மருத்துவமனைகளுக்கும் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. மேலும், 8.01 கோடி ரூபாய் இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்து, D.M.S. அவர்களுக்கு இன்னும் 100 ஆம்புலன்ஸ் வாகனங்களும், D.P.H.-க்கு 124 வாகனங்களும் மற்றும் D.M.E.-க்கு 46 வாகனங்களும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. மேலும், தரம் மேம்படுத்தப்பட்ட Block P.H.C. அனைத்துக்குமே ஆம்புலன்ஸ் வாகனங்கள் வழங்குவது என்றும் அரசு முடிவு செய்து இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டுக்காகவும் 50 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டுக்கு நிதி ஒதுக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருமை சேர்த்து, இந்தியாவிலேயே வரலாற்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் மேம்பாட்டு நிதியிலிருந்து மருத்துவமனைகளுக்குத் தேவையான ஆம்புலன்ஸ் அல்லது அமரர் ஊர்தி வாங்கித் தரலாமா? அப்படி வாங்கிக் கொடுத்தால் அதற்கான ஓட்டுநர்களை அரசு உடனடியாக நியமிக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, மாண்புமிகு உறுப்பினர்கள் ஆம்புலன்ஸ் வாகனங்கள் வாங்கித் தருவார்களானால் இரு கரம் கூப்பி அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஓட்டுநர்களை நியமிப்பார்களா என்று கேட்டிருக்கிறார். நிச்சயமாக ஓட்டுநர்களை நியமிக்க அரசு வகை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு தாலுகா மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வழங்கி இருப்பதற்கு அரசுக்குப் பாராட்டுகளைத் தெரிவிப்பதோடு, மேலும் இவ்வாண்டு வழங்கப்பட இருக்கிற ஆம்புலன்ஸ் வண்டிகளிலே



1999 மார்ச் 24]

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா? அதோடு நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் தொடர்ந்து சொல்லி வருகின்ற கோரிக்கை, மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டவேண்டுமென்பதுதான். ஏற்கெனவே, 500 படுக்கைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு அது நிலுவையில் இருக்கிறது என்ற கோரிக்கை சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நிதி ஒதுக்கி அந்த மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆம்புலன்ஸ் வாகனம் ஒதுக்கீடு செய்வது குறித்து அரசு பரிசீலித்து ஏற்கெனவே மன்னார்குடி மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் வந்து சேரவில்லை என்றால் உடனடியாக அது நிச்சயமாக அனுப்பி வைக்கப்படும். மன்னார்குடி அரசு மருத்துவமனையில் 500 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்டுவது குறித்துக் கேட்டார்கள். இந்த அரசுக்கு உண்மையிலேயே அதைக் கட்டித்தரவேண்டும் என்ற ஆசை இருந்தாலும் நிதிநிலைமை அதற்கு இடம் தரவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு வரும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்து ஏதாவது செய்ய முடியுமா என்று அவசியம் நான் முயற்சிக்கிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் எல்லா தாலுக்கா மருத்துவமனைகளுக்கும் ஆம்புலன்ஸ் வாங்கிக் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மை. அதற்காகப் பாராட்டுகிறோம். ஆனால் இந்த ஆம்புலன்ஸ் வண்டிகளுக்கு இன்னும் ஓட்டுநர்கள் நியமிக்கவில்லை என்கின்ற நிலையினால் அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியில்கூட வாடிப்பட்டி தாலுக்கா மருத்துவமனையிலே ஆம்புலன்ஸ் வண்டி இருந்தும் ஓட்டுநர் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, உடனடியாக ஓட்டுநர்களை நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் ஓட்டுநர்கள் இல்லை என்ற தகவல் அரசுக்கு வந்தது. உடனடியாக நிதி இலாகாவிற்கு ஓட்டுநர்களை நியமிப்பதற்காக ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று மக்கள் நல்வாழ்வுத் துறை கடிதம் எழுதியிருக்கிறது. விரைவிலே நிதித் துறையினுடைய அனுமதி பெற்று அந்த ஓட்டுநர்கள் எல்லாம் நியமிக்கப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான் அனைத்து வட்ட தலைநகரங்களிலும் இருக்கின்ற மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வாகனங்கள் அமரர் ஊர்திகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த வாகனங்களை நிறுத்துவதற்கு இடவசதி இல்லை. எனவே, அதற்கான shed கட்டுவதற்கு அரசு ஆணையிடுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கின்ற 50 இலட்ச ரூபாயில், 50 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு shed கட்டித் தந்தால் அரசு அதற்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளத் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல மருத்துவமனைகளில் ஆம்புலன்ஸ், அமரர் ஊர்தி இருந்தாலும்கூட, அவசரக் காலங்களில் வண்டி பழுதுபட்டுவிட்டது, இயங்க வழியில்லை என்று சொல்கிறார்கள். அந்தச் சமயத்தில் சாதாரண ஏழைகள் வெளியிலே வாகனங்கள் பிடிக்கும்போது ஏராளமான தொகை செலவாகிறது. எனவே, இதுபோன்ற வண்டிகள் பழுதுபடும்போது அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்ய அரசு என்ன ஏற்பாடு செய்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாகனங்கள் பழுதடைந்தால் உடனடியாக பழுது பார்ப்பதற்கான உத்தரவுகள் ஏற்கெனவே



இருக்கின்றன. அதுமட்டுமல்ல, ஏற்கெனவே workshops மாவட்டத் தலைநகரங்களில், தமிழகத்தில் 5, 6 இடங்களில் தொடங்கப் பட்டிருக்கின்றன. எனவே, இப்படிப்பட்ட குறைகள் இருக்குமானால் உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர், குறிப்பிட்டு ஏதாவது, ஒரு சில இடங்களிலே இப்படிப் பழுதடைந்து, உடனடியாக வாகனங்கள் கிடைக்கவில்லை என்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வீ. தமிழ்மணி.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கும்போது மாவட்ட மருத்துவமனைகளில் எல்லாம் அமரர் ஊர்திகள் இருப்பதாகச் சொன்னார்கள். செங்கற்பட்டில் இருக்கின்ற மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள அமரர் ஊர்தி நீண்டகாலமாகப் பழுதடைந்து பயனற்று இருக்கிறது. மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக அமைந்து இருக்கின்ற காரணத்தால், செங்கற்பட்டு மருத்துவமனைக்கு உடனடியாக அமரர் ஊர்தி வழங்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடனடியாக அரசு அவசியம் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 164, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**164—**

### காசநோய் மருத்துவமனை கட்டுதல்

***16775—திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மாதேவி தொகுதி, முக்கூடலில் பீடித் தொழிலாளர்களுக்கான காசநோய் மருத்துவமனை கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) சேரன்மாதேவி தொகுதி, முக்கூடலில் பீடித் தொழிலாளர்களுக்கான காசநோய் மருத்துவமனை கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முந்தைய காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மத்திய தொழிலாளர் நலத் துறை அமைச்சராக திரு. பி.ஏ. சங்மா அவர்கள் இருந்தபோது முக்கூடலிலே காசநோய் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அந்தத் திட்டம் அப்படியே அந்த ஆட்சிக் காலத்தில் வலியுறுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டுவது அந்தத் திட்டத்தின் நோக்கமாகும். அந்தப் பகுதியிலே 2 இலட்சம் மக்கள் பலவகையிலே காசநோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள். பீடி சுற்றும் தொழில் செய்யும் எல்லோருக்குமே இந்தக் காசநோய் இருக்கிறது. ஆரம்பத்திலேயே பார்த்துவிட்டால் அந்த நோய் தீர்ந்துவிடும். அதிலே செஸ் என்று சொல்லி ஆயிரம் பீடிக்கு ஒரு ரூபாய் வீதம் ஒவ்வொரு பீடி சுற்றுபவரிடத்திலும் பெற்று கம்பெனிகாரர்கள் மத்திய அரசுக்குச் செலுத்துகிறார்கள். ஆகவே, இந்தமாதிரி அடிப்படை வசதிகளுக்கு, ஆஸ்பத்திரி போன்ற மற்ற அடிப்படைத் தேவைகளுக்குச் செலுத்தப்படுகின்ற கட்டணம், அந்த நிதி, மத்திய அரசிடத்திலேயே தேங்கிக் கிடக்கிறது. எனவே, நமது அரசு, கட்டாயப்படுத்தி, வலியுறுத்தி இந்த ஆஸ்பத்திரியைக் கொண்டு வர வேண்டும்; நீங்கள் அதற்கு ஆவன செய்வீர்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, கடந்த காலத்திலே அங்கே இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஒன்று கட்டுவதற்கு அடிக்கல் நாட்டியிருக்கலாம்.





ஆனால், உண்மையான நிலைமை என்ன என்று கேட்டால், ரூ. 4.58 கோடி செலவில் பீடித் தொழிலாளர்கள் நலனுக்காக 50 படுக்கைகள் கொண்ட பொது மருத்துவமனை ஒன்றை முக்கூடலில் ஏற்படுத்துவதற்கான திட்டம் மத்திய அரசின் தொழிலாளர் நலத் துறை, ஹைதராபாத் பிராந்திய அலுவலகத்திலேயிருந்து டெல்லியிலுள்ள தலைமையகத்திற்கு 1994 ஜனவரியில் அனுப்பப்பெற்று ஆய்விலேயே இருக்கிறது. அதன்மேல் மத்திய அரசின் ஆணைகள் இதுநாள்வரையிலே வெளியிடப்படவில்லை. எனவேதான், ஐந்து தினங்களுக்கு முன்னாலே நானும், நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு இரகுமான்கான் அவர்களும் மற்றும் அதிகாரிகளெல்லாம் ஒரு கூட்டத்தைக் கூட்டி, இப்படிப்பட்ட இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளுக்காக மத்திய அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தோம். அதிலே, பல திட்டங்கள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு அவையெல்லாம் அமல்படுத்தப்படாமல் இருப்பதை நாங்கள் பரிசீலித்து, மறுபடியும் மத்திய அரசுக்கு நினைவூட்டுக் கடிதம் அனுப்பியும், உடனடியாக சில இடங்களிலே மருத்துவமனைகள் கட்ட வேண்டியதனுடைய அவசியத்தை வற்புறுத்தியும் அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறோம். இந்த அரசு தொடர்ந்து முக்கூடலிலே 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டுவதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களிலுள்ள தாலுகா மருத்துவமனைகளை அனைத்து வசதிகளையும் கொண்ட மருத்துவ மனைகளாக (Full-fledged Hospitals) மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா? அதுபோன்று, திருவண்ணாமலை மாவட்டத்தில் எந்த தாலுகா மருத்துவமனையும் இல்லை. போதிய இடவசதி இருக்கின்ற ஆரணி தாலுகா மருத்துவமனை இந்தத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 156 தாலுகா மருத்துவமனைகள் இருக்கின்றன. அதிலே full-fledged மருத்துவமனைகள் என்று எடுத்துக்கொண்டால், 30 மருத்துவமனைகள்தான் இருக்கும். மீதமுள்ள மருத்துவமனைகள் அனைத்து வசதிகளையும் கொண்ட மருத்துவமனைகளாக இல்லை. இருந்தாலும்கூட, கலைஞர் அவர்கள்

[1999 மார்ச் 24

நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட உடன், அனைத்து தாலுகா மருத்துவமனைகளையும் அனைத்து வசதிகளையும் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கருதி, அதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டி, மத்திய அமைச்சர், மாண்புமிகு தலித் எழில்மலை அவர்களை சென்னையிலுள்ள கோட்டைக்கு வரவழைத்து, அவர்களோடும் கலந்துபேசி, உலக வங்கித் திட்டத்தோடு இந்தத் திட்டத்தையும் அமல்படுத்தமுடியுமா என்பது குறித்து கலந்தாலோசித்து முடிவு செய்து மத்திய அரசுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறோம். உலக வங்கி மூலம் 850 கோடி ரூபாய் நிதி வழங்குவதற்கு மத்திய அரசு ஏற்பாடு செய்யுமானால், இந்தப் பிரச்சினைகளை உடனடியாக ஓரிரு ஆண்டுகளிலே தீர்க்க முடியும். இதற்காக நாங்கள் கடிதம் அனுப்பிய உடனே, மத்திய நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு தலித் எழில்மலை அவர்களும் உலக வங்கிக்கு உடனடியாகக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இந்த ஆண்டு நடக்கு உலக வங்கியிலிருந்து கணிசமான தொகை கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். அந்தத் தொகை வந்தால் அனைத்து தாலுகா மருத்துவமனைகளும் அடிப்படை வசதிகள் நோயாளிகளுக்குக் கிடைக்கக்கூடிய வகையிலே, நிச்சயமாக மேம்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே மிகச் சிறந்த முறையில் இயங்குகின்ற காசநோய் மருத்துவமனை, தாம்பரம் தொகுதி சானடோரியத்தில் இருக்கிறது. அங்குதான் நாட்டிலே உள்ள தேய்வு நோயாளிகளை, —Aids Patients—வைத்து, , மனித நேயத்தோடு கவனிக்கிறோம். அவர்களைப் பரிசோதிப்பதற்கான கருவிகள் அங்கே இல்லாத காரணத்தால் சிறந்தமுறையில் கவனிக்க முடியவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கருவிகளை வாங்கித்தர ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்து உண்மையானதுதான். ஏனென்றால், காசநோய்க்கு மிகச்சிறந்த மருத்துவமனையாக தாம்பரம் T.B:. Sanatorium-தான் விளங்கிக் கொண்டிருக்கிறது. அங்குதான் Aids நோயாளிகளும் சிகிச்சை



1999 மார்ச் 24]

பெற்று வருகிறார்கள். Aids நோயாளிகளைப் பரிசோதனை செய்வதற்கான கருவிகள் இல்லை என்ற குறை கடந்த ஆண்டு என்னிடத்திலே எடுத்துச் சொல்லப்பட்டது. உடனடியாக Aids Project Director இடத்திலே இதுபற்றிக் கலந்து பேசி, ஐம்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அந்த Aids நோயாளிகளைப் பரிசோதிக்கின்ற கருவிகளையெல்லாம் வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

*முற்பகல் 9-50*

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காச நோய் மருத்துவமனைகளில் போதுமான ஊட்டச்சத்துக்கள் வழங்கப்படுவதில்லை என்று பொதுவான ஒரு புகார் உள்ளது. குறிப்பாக நாகர்கோவில் ஆசாரிப்பள்ளம் காச நோய் மருத்துவமனையில் இந்தக் குறைபாடு உள்ளதாகக் கூறப்படுகிறது. இதைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இ.எஸ்.ஐ. திட்டம்பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் 30,000-க்கும் அதிகமான முந்திரித் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டத்தை அமல்படுத்துவதற்கு மாநில அரசு ஒப்புதல் தந்தும், மத்திய சர்க்கார் அதற்குப் போதுமான நிதியோ, போதுமான உதவியோ செய்யாத காரணத்தால் இரண்டு ஆண்டு காலமாக அதற்காக எடுக்கப்பட்ட கட்டடங்களுக்கு வாடகை கொடுக்கமுடியாத ஒரு சூழ்நிலை உள்ளது. எனவே, இதை மத்திய சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு சென்று அந்த முந்திரித் தொழிலாளர்களுக்கும் இ.எஸ்.ஐ. திட்டத்தின் பலன் கிடைக்கின்ற வகையில், அந்தத் திட்டத்தை அமல்படுத்த பரிந்துரை செய்து அந்த வசதியைப் பெற்றுத்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காச நோயாளிகளுக்கு நல்ல ஊட்டச்சத்து வழங்க வேண்டுமென்பது உண்மையிலேயே ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று. அதைத் தாம்பரம் T.B. Sanatorium Superintendent அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, அவர்

[1999 மார்ச் 24

என்ன பரிந்துரை செய்தார் என்றால் காச நோயாளிகளுக்கு நல்ல ஊட்டச்சத்து வழங்க வேண்டுமென்பதால் தினந்தோறும் முட்டை வழங்கினால் அவர்கள் விரைவாகக் குணமடைவார்கள், எனவே முட்டை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அவருடைய பரிந்துரையை ஏற்று தாம்பரத்தில் சிகிச்சை பெறுகிற எல்லா நோயாளிகளுக்கும் தினந்தோறும் ஒரு முட்டை வழங்க வேண்டும் என்று நிதி ஒதுக்கீடு செய்து வழங்கிக் கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் இங்கே தெரிவித்ததைப் போல கன்னியாகுமரியிலே இருக்கக்கூடிய காச நோயாளிகளுக்கு அப்படி கொடுக்கப்படவில்லை என்றால் அவர்களுக்கும் தினந்தோறும் முட்டை வழங்குவதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். இரண்டாவதாக முந்திரித் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய 30,000 தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவமனை வேண்டும் என்பதுபற்றி இங்கே சொன்னார்கள். நான் ஏற்கெனவே இங்கே குறிப்பிட்டதைப்போல 5 தினங்களுக்கு முன்னால் நானும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் தமிழ்நாட்டிலே எங்கெல்லாம் இ.எஸ்.ஐ. மருத்துவமனை தொடங்கப்பட வேண்டும் என்பது குறித்து விரிவாக மத்திய அரசினுடைய அதிகாரிகளைக் கலந்து கொண்டு விவாதித்தோம். அதிலே கன்னியாகுமரியிலே முந்திரித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கும் இ.எஸ்.ஐ. மருத்துவமனை வசதிகள் செய்து தர வேண்டும் என்பதுபற்றி கலந்து பேசியிருக்கிறோம். இந்த அரசு தொடர்ந்து தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவமனை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு எல்லா விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 165, திரு. பா. பரணிகுமார், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**165—**

**மேம்பாலம் கட்டுதல்**

***10880—திரு. பா. பரணிகுமார்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மார்ச் 24]

திருச்சி, காந்தி மார்க்கெட்டிலிருந்து மேலப்புதூர் சுரங்கப்பாதை வரை மேம்பாலம் கட்டும் பணி அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. பரணிகுமார், இருக்கையில் இல்லை. திரு. அன்பில் பொய்யாமொழி.

**திரு. அன்பில் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் காலத்திலேதான் அண்ணா மேம்பாலம் தொடங்கி கோவையிலே ஒரு மேம்பாலம், சேலத்திலே ஒரு மேம்பாலம், திருநெல்வேலியிலே ஒரு மேம்பாலம், மதுரையிலே ஒரு மேம்பாலம் என பல்வேறு மேம்பாலங்களைக் கட்டி முடித்திருக்கிறார்கள். தமிழகத்தின் மையப்பகுதியாக இருக்கின்ற திருச்சிக்கு ஒரு மேம்பாலத்தைக் கட்டுவதற்கு நெடுஞ்சாலைத் துறையோடு கலந்து பேசி இந்த ஆண்டாவது அதை நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட மேம்பாலங்கள் அமைப்பதில் இரண்டு சங்கடங்கள் உள்ளன. ஒன்று, தற்சமயம் இருக்கின்ற நிதிநிலைமையைப் பொறுத்தது. இன்னொன்று பெரிய மாநகராட்சி, நல்ல நகராட்சிகளின் மையத்திலே, நகரத்தின் மையத்திலே அவற்றை அமைக்கின்றபோது நிலஎடுப்புச் சங்கடங்கள் ஏற்படுகின்றன. அவற்றை எல்லாம் மனதில் கொண்டு வேண்டுமானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி பிறகு அரசு அதற்கான முடிவை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 166, திரு. ச. இராஜ ரெட்டி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1999 மார்ச் 24

**166—**

**ஒன்றியம் அமைத்தல்**

***14094—திரு. ச. இராஜ ரெட்டி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, ஐம்பது ஊராட்சிகள் கொண்ட தளி ஒன்றியத்தையும், கெலமங்கலம் ஒன்றியத்தையும் பிரித்து அஞ்செட்டி ஒன்றியத்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தளி தொகுதி, 50 ஊராட்சிகள் கொண்ட தளி ஒன்றியத்தையும் கெலமங்கலம் ஒன்றியத்தையும் பிரித்து அஞ்செட்டி ஒன்றியத்தை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. இராஜ ரெட்டி இருக்கையில் இல்லை. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தளி ஒன்றியத்தில் 50 ஊராட்சிகள் இருக்கின்றன. அவை Forest area-ல் வருகின்றன. அந்த ஊராட்சிகளில் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊர் 15 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அதனால் அந்த ஒன்றியத்தில் ஊராட்சிகளுக்குக் கொடுக்கின்ற பணம் போதவில்லை. அஞ்சட்டி, வனப் பகுதியில் அமைந்துள்ளது. ஆகவே அரசு தளி ஒன்றியத்தையும், கெலமங்கலம் ஒன்றியத்தையும் பிரித்து அஞ்செட்டி ஒன்றியத்தை அமைக்க மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளில், நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மாவட்ட ஊராட்சிகள் என இவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டால்,



1999 மார்ச் 24]

சிலவற்றை—சில வார்டுகளைப்—பிரித்து, அதோடு சேர்ப்பது, இதோடு சேர்ப்பது என்ற பிரச்சினைகள் ஒரு சில இடங்களில் வந்து கொண்டுதான் இருக்கின்றன. நேற்றையதினம், மாண்புமிகு உறுப்பினர் திரு. வைதியலிங்கம் அவர்கள் கேட்ட ஒரு துணைக் கேள்விக்குக்கூட நான் பதில் அளித்திருக்கிறேன் குறிப்பாக, நமது அரசு வந்தவுடன் இப்படி வருகிற புகார்களைத் தொகுத்து, அவற்றை வைத்து, ஒரு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, முக்கியமானவை எவையெவை என்பதைப் பரிசீலித்து, உள்ளாட்சிகளுக்கான பொதுத் தேர்தல் வருகிற நேரத்தில், நிச்சயம் கவனித்து பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேர்தல் காலங்களில் அவ்வாறு செய்வதாகச் சொன்னார். இப்போது, ஊராட்சி மன்றத் தலைவர்களால் ஆளப்பட்டு வருகிறது. மேலும், கேள்வி கேட்கப்பட்டிருக்கிற கெலமங்கலம் ஒன்றியத்தைப் பிரித்துக் கொடுப்பதைவிட, தர்மபுரி மாவட்டத்தில் தளி ஒன்றியம் 50 ஊராட்சிகளைக் கொண்ட பெரிய ஒன்றியமாகும், அங்கே ஓர் ஊருக்கு, Block Development Officer வரவேண்டும் என்று சொன்னால், ஒரு நாள் பூராவும் ஆகிறது. அது பெரிய காட்டுப் பகுதி. பின்தங்கிய பகுதி. தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய 3 மொழிகளையும் பேசுகின்ற மக்கள் அதிகமாக அங்கு வாழ்கின்ற காரணத்தினால், தளி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, அஞ்செட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு அங்கே புதிய ஊராட்சி ஒன்றியத்தை விரைவில் தொடங்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே இதைத்தான் குறிப்பிட்டிருக்கிறேன். பொதுத் தேர்தல் நடைபெற்று முடிந்து, அதற்குரிய உறுப்பினர்கள், தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் பொறுப்பிலே இருக்கிறார்கள். அந்த வார்டைப் பிரித்து, இந்த வார்டிலே சேர்ப்பதால், அந்த உறுப்பினர்கள் எங்கு பொறுப்பேற்பது; அது எப்படி சட்டப்படி செல்லும் என்பதுதான் இன்றைக்கு இருக்கிற பிரச்சினை. கூடவே கூடாது. முடியவே முடியாது என்று இந்த அரசு

[1999 மார்ச் 24

சொல்லவில்லை. குறிப்பாக, நான்கூட இதிலே அனுபவித்தவன்தான். நான் பிறந்த சிற்றூரில் ஏறத்தாழ 13 வருட காலம், 16 கிராமங்களை உள்ளடக்கிய, ஏறத்தாழ 12 கிலோமீட்டர் பரப்பளவுள்ள அந்த சிற்றூரைப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, ஏற்கெனவே இருந்த அரசாங்கங்களுக்கு இரண்டு முறை நடைபெற்ற தேர்தல்களில் மக்கள் கலந்து கொள்ளாமல், தேர்தல்களைப் புறக்கணித்தார்கள். அதற்காக மனு கொடுத்த நானே பொறுப்புக்கு வந்து, அதைப் பிரிக்க வேண்டுமென்று யாரிடத்தில் முதலில் சிபாரிசு கேட்டேனோ, அந்தத் தலைவரே முதலமைச்சராக வந்து, அவருடைய கருணையால் எங்களுடைய ஊராட்சி மன்றம் இந்த ஆண்டுதான் பிரிக்கப்பட்டு, இப்போது நடைபெற்று வருகிறது. எனவே, பிரிக்கக்கூடாது என்பன போன்ற நடவடிக்கைகளில் இந்த அரசு நிச்சயம் ஈடுபடாது. குறிப்பாக, அதற்கெனவே தனியாக ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இரண்டாண்டு காலத்தில் அந்த நடவடிக்கையைத் துரிதப்படுத்தி, சரிப்படுத்தப்பட்டு, தேர்தல் வருகிற நேரத்தில், பொதுத் தேர்தலில் அவை நிச்சயமாக அறிவிக்கப்படும் என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், மீண்டும் உள்ளாட்சித் தேர்தல்கள் வருவதற்கு முன்பாக, அந்தப் பகுதிகளை எல்லாம் பிரித்து, நிர்வாக வசதிக்காக அவை சரிப்படுத்தப்படும் என்று சொன்னார்கள். இருந்தாலும்கூட, இன்றைய நிலையிலே, 12 ஊராட்சிகளை அல்லது 14 ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் இருக்கிறபோது, 35, 40 அல்லது 50 ஊராட்சிகள் என்று பரந்த பகுதியாக இருக்கிற காரணத்தினாலே, மீண்டும் ஒரு பொதுத் தேர்தலைச் சந்தித்து, அடுத்த உள்ளாட்சித் தேர்தல் வருகிற நேரத்திலே செய்வதைவிட, இப்போது இருக்கக்கூடிய இந்த நல்ல காலத்திலே, மிக விரைவிலே, நிர்வாக வசதிக்காக—அதுவும் மாவட்டங்கள் எல்லாம் நிர்வாக வசதிக்காகப் பிரிக்கப்படுகிற இந்தக் காலகட்டத்திலேயே—உடனடியாகப் பிரித்து கொள்கையளவிலே, 15 அல்லது 20 ஊராட்சிகளைக் கொண்டது ஒரு ஊராட்சி ஒன்றியம் என்ற அளவிலே உடனடியாக நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்



1999 மார்ச் 24]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இரண்டாவது துணைக் கேள்வியில் ஒரு திருத்தம். நான் அதற்கு இடையிலே அதைப் பிரித்து, நிர்வாக வசதிக்காக ஏற்பாடு செய்வதாகச் சொன்னதாக உறுப்பினர் சொல்கிறார். அது அல்ல. அப்படிச் செய்ய முடியாது. செய்ய முடியாது என்பதுதான் என்னுடைய பதிலே. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு, அவர்களுடைய உரிமையை மாற்றச் செய்கின்ற ஒரு சட்டம் இப்போது இல்லை. அது தேவையும் இல்லை. அதனாலேதான் இருக்கிற கஷ்டத்தோடு, ஓரளவுக்கு நிர்வாகத்தை நடத்திவந்து, அதற்குப் பிறகு பொதுத் தேர்தல்களின்போது இவற்றைப் பற்றிச் சிந்திக்கலாம் என்றும், நியாயமான கோரிக்கை எது இருந்தாலும் அது ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 167, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

முற்பகல் 10-00

**167—**

### மழை நீரைச் சேமித்தல்

***6331—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், தாமிரபரணி ஆற்றில் திருவைகுண்டம் அணைக்கட்டில் மழைக்காலங்களில் வீணாகக் கடலில் கலக்கும் தண்ணீரைச் சேமிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தாமிரபரணி ஆற்றுப் படுகையில் தாமிரபரணி மற்றும் அதன் கிளை நதிகளில் சில நீர்த்தேக்கத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தற்போது செயலாக்கப்பட்டு வருகின்றன. தவிர, சில திட்டங்கள் தற்போது ஆய்வில் உள்ளன. இத்திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது கிட்டத்தட்ட 2969 மி.கன அடி அல்லது 2.969 டி.எம்.சி. வெள்ளநீர் சேமிக்கப்பட்டு, பாசனத்திற்குப் பயன்படுத்தப்படும்.

[1999 மார்ச் 24

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டிலிருந்து வீணாகக் கடலுக்குச் செல்கின்ற தண்ணீரைப் பற்றி அப்பகுதி மக்கள் ஒரு சர்ச்சையாக எடுத்துப் பேசுகின்ற காரணத்தால் அடிக்கடி நாங்களும் இது பற்றிப் பேச வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அங்குள்ள கால்வாயை அகலப்படுத்தி புத்தன்துறைக்கு மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் எங்களுக்கு 12 கோடியே 33 இலட்ச ரூபாயில் திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். ஆனாலும் கூட கீழே முழுவதுமாக போகின்ற தண்ணீரில் 5% தண்ணீரைக் கூட தடுத்து நிறுத்திவிட முடியாது. நீங்கள் அந்தத் தண்ணீரையும் முறையோடு பெற்றுத் தரவேண்டுமென்றுதான் நாங்கள் கேட்கிறோம். குறிப்பாக சாத்தான்குளம் தொகுதி, ராதாபுரம் தொகுதி மற்றும் நாங்குநேரி தொகுதி இந்த மூன்று தொகுதிகளும் மிகவும் வறண்ட பகுதிகளாக இருக்கின்றன. முன்னாலே இருந்த ஆட்சியாளர்கள் 1991-1996-க்குள்ளாக அங்கே இருக்கின்ற நிலங்களை சின்னம்மா, பெரியம்மா பெயரிலே அதிகமான அளவிலே ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அவையெல்லாம் நீங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டுகள் கூடாது என்பது மரபு. கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நிலங்கள் எல்லாம் தண்ணீர் கிடைக்கின்ற நிலங்களாக இருக்கின்ற காரணத்தால், அவற்றையெல்லாம் விடுவித்து, நீங்கள் எங்கேயிருந்து தண்ணீரை எப்படித் தரமுடியுமோ அதற்கு ஆவன செய்து தென்பகுதிக்கு கொடுத்தால் அது பொன் விளையும் பூமியாக மட்டுமல்லாமல் அதில் நெல் விளைந்து தமிழகத்திற்கு உணவு தானியங்களைத் தருவதற்கு ஏதுவாக இருக்கும் என்று தங்கள் மூலமாகச் சொல்லி பதிலை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே கேள்வியைத்தான் நேற்று டேவிட் செல்வின் அவர்களும் கேட்டிருந்தார்கள். இதில் பல கேள்விகளுக்கு நான் விளக்கமான பதிலை அளித்திருந்தேன். அதனால, இந்தக் கேள்விக்கு பதிலை சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். தாமிரபரணியிலே மழைக்காலங்களில் அதிகமான தண்ணீர் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுக்குக் கீழே வீணாகி கடலில் கலக்கிறது, அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பது கேள்வியினுடைய முக்கிய நோக்கம்.



1999 மார்ச் 24]

பெருமழைக்காலங்களில் கிட்டத்தட்ட இரண்டு T.M.C.-யிலிருந்து மூன்று T.M.C. வரை தண்ணீர் கடலில் கலக்கலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு பல முயற்சிகளை எடுத்து இருக்கிறது. ஒன்று, ஸ்ரீவைகுண்டம் பகுதியிலே இருக்கின்ற அணைக்கட்டுகளிலிருந்து ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு வரையிலே இருக்கிற 8 அணைக்கட்டுகளும் அணைகட்டுக்களாகத்தான் இருந்தவை. அவை பாண்டிய மன்னர்கள் காலத்திலே கட்டப்பட்டவை. மருதூரும், ஸ்ரீவைகுண்டமும் ஆங்கிலேயர் காலத்திலே கட்டப்பட்டவை. அந்த அணைகள் எல்லாம் உடைந்து கெனடியன் அணைக்கட்டு இருக்கிறதா, இல்லையா என்கிற அளவில் நிலைமையிருக்கிறது. எனவே, இந்த 8 அணைக்கட்டுகளிலும் கிட்டத்தட்ட ஆறு, ஏழு அணைகளைப் புதுப்பித்துக் கட்டுவதற்காக அரசு பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அந்தப் பணிகளைச் செய்வதன் மூலம் தண்ணீர் பல நிலைகளிலே தடுத்து நிறுத்தப்படும்.

இரண்டாவது, தாமிரபரணியிலே மட்டும் தண்ணீர் ஓடுவதில்லை. அதனுடைய உபநதிகளிலிருந்தும் தண்ணீர் தாமிரபரணிக்கு வருகிறது. எனவே, ஆங்காங்கு உபநதிகளிலே அணைகளைக் கட்டினால், தண்ணீர் தாமிரபரணியிலே மழைக்காலத்திலே பெருக்கெடுத்து ஓடுவது தடுக்கப்படும் என்பதற்காக வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத்தைக் கட்டுகிறோம். அதைக் கட்டி முடித்த பிறகு 882 மில்லியன் கன அடி நீர் தேக்கிவைக்கலாம். அடவிநயினார் அணையைக் கட்டிக் கொண்டு இருக்கிறோம். அதைக் கட்டி முடித்த பிறகு 340 மில்லியன் கன அடி தண்ணீரைத் தேக்கிவைக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியில் சடையநேரி விரிவாக்கத் திட்டத்தின் மூலமாகவும் 500 மில்லியன் கன அடி தண்ணீரை எடுத்துக்கொள்ளலாம். கடானா விஸ்தரிப்பு மூலம் கிட்டத்தட்ட 250 மில்லியன் கன அடி தண்ணீரைத் தேக்கி வைக்கலாம். இலுப்பையூர் நீர்த் தேக்கத் திட்டத்தின் மூலம் 270 மில்லியன் கன அடி தண்ணீரைத் தேக்கி வைக்கலாம். ஜம்பு நதி நீர்த் தேக்கத் திட்டத்தின் மூலமாக 324 மில்லியன் கன அடி தண்ணீரைத் தேக்கலாம். மருதூர் அணைக்கட்டுக்குக் கீழே ஒரு regulator கட்டுவதற்கு உத்தேசித்து இருக்கிறோம். அதன்மூலம் 500 மில்லியன் கன அடி தண்ணீர் தேக்கலாம். மொத்தம் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் கிட்டத்தட்ட மூன்று T.M.C. தண்ணீரை சேமித்து வைக்க முடியும். இந்த அணைகளைக் கட்டி முடித்த பிறகு பார்த்தால் மழைக்காலங்களில் பெருக்கெடுத்து ஓடுகிற தண்ணீரை ஆங்காங்கு சேமித்து வைக்கலாம். எனவே, இதுமட்டுமல்லாமல் மூன்றாவதாக

இதையும் மீறி ஏதாவது தண்ணீர் இருக்கிறதா என்று பார்த்து, அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமானாலும், ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுக்கு மேலேதான் சாத்தியக்கூறே தவிர, ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுக்குக் கீழே அல்ல. இரட்டை திருப்பதியிலேகூட நான் சென்று பார்த்தேன். அந்த இடம் பள்ளத்திலே இருக்கிறது. பக்கத்திலே கரையும் மேடாக இருக்கிறது. எனவே, இந்தத் தண்ணீர் அதற்குப் போக வேண்டுமானால், pump வைத்து வேலை செய்ய வேண்டும். அதற்கு பல கோடி ரூபாய் நட்டமாகும். எனவே, இந்த ஆட்சியில் தொடர்ந்து இப்படி வீணாகும் நீரைத் தடுத்து நிறுத்துவதற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சுருக்கமாகப் பதில் சொல்லிவிடுகிறேன் என்று சொன்னீர்கள். உங்களைப் பொறுத்த வரையில் இதுதான் சுருக்கம் என்று கருதுகிறேன். (சிரிப்பு)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாமிரபரணியில் வீணாக தண்ணீர் வருவதைத் தடுப்பதற்கு முதல்கட்டமாக பாபநாசம் அணைக்கும், மணிமுத்தாறு அணைக்கும் இடையே சுரங்கக் கால்வாய் (tunnel canal) ஒன்று 3 கிலோ மீட்டர் தூரத்தில் அமைத்தால் நிச்சயமாகத் தண்ணீரை மேலே நிறுத்தி வைக்கலாம். மணிமுத்தாறு பாசனத்திற்கு இந்த ஆண்டு 90 அடிக்கு மேல் நீர் உயரவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட காலங்களில் மணிமுத்தாறு அணையின் மூலம் பாசன வசதி பெறுகின்ற பகுதிகள் சிறப்பாகப் பயன்பெறுவதோடு ராதாபுரம் பகுதியிலுள்ள சுவிசேஷபுரம் கால்வாய்ப் பாசனத்திற்கும் புத்தன்தருவை குளத்திற்கும் தண்ணீர் கொண்டு செல்வதற்கு ஏதுவாக இருக்கும். இது ஒரு வகை. அல்லது விக்கிரமசிங்கபுரத்திற்கு, அம்பாசமுத்திரத்திற்கு கிழக்கு, தாமிரபரணி எல்லைக்கு மேற்கு, இதற்கிடையில் வலதுபுறத்தில் ஒரு regulator அமைத்தால், தண்ணீர் காலங்களில் வலதுபுறத்தில் 2,000 கியூசெக்ஸ் அல்லது 1,000 கியூசெக்ஸ் தண்ணீர் செல்கின்ற அளவிற்கு ஒரு கால்வாய் வெட்டினால் நாங்குனேரி, ராதாபுரம் ஆகிய இரு பகுதிகளுக்கும் தண்ணீர் கொண்டு செல்கின்ற—அங்கே காய்ந்து கிடக்கின்ற மரங்கள், குளங்களுக்கு இந்தத் தண்ணீர் கொண்டு செல்கின்ற—வாய்ப்பை ஏற்படுத்தித் தரலாம். ஆகவே, இந்த இரண்டு திட்டங்களையும் . . . . .





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** இந்த இரண்டு கருத்துகளையும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து—அந்தப் பகுதியில் அவருடைய கால்படாத இடமே இல்லை, ஆகவே இதைத் தெரிந்தவர் அவர்—இந்த இரண்டு திட்டங்களையும் செயல்படுத்தித்தர வேண்டும். தருவார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மழைக்காலங்களில் பெருகியோடும் மிகைத் தண்ணீரை எப்படித் தடுத்து நிறுத்துவது என்பதற்குத்தான் நான் இப்போது சொல்லிக் கொண்டு வந்தேன். ஆனால் அவர் seepage water-ஐ எப்படி arrest பண்ணுவது என்று சொல்லியிருக்கிறார். அதுவும் தேவையான ஒன்றுதான். எனவே, அதை ஆய்வில் வைத்து, அவருடைய யோசனையும் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 168, திரு. ச. அழகிரி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**168—**

## வெள்ளாற்றின் குறுக்கே அணை

***13868—திரு. ச. அழகிரி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் வட்டத்திலுள்ள வெள்ளாற்றில் கடல்நீர் புகுந்து புவனகிரி வரை வருவதால் நிலப் பகுதிகள் மற்றும் நிலத்தடி நீர் உவர்ப்புத் தன்மை அடைவதைத் தடுக்க முகத்துவாரம் அருகே வெள்ளாற்றின் குறுக்கே இரண்டடி உயர அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சிதம்பரம் வட்டத்திலுள்ள வெள்ளாற்றில் சுமார் 12 கி.மீ. வரை உட்புகும் கடல் நீரானது பாசிமுத்தான் ஓடையிலும் உட்புகுந்து ஓடை நீரை விவசாயத்திற்குப் பயனற்றதாக்குகிறது. எனவே, கடல்நீர்

உட்புகுவதைத் தடுப்பதற்கு ஒரு தடுப்பணை கட்டுவதற்கு மதிப்பீடு ரூ. 32 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. இதன்மூலம் கடல்நீர் உட்புகுவது தடுக்கப்படுகிறது. ஆனால், வெள்ளாற்றின் குறுக்கே 2 அடி உயரத்திற்கு அணை கட்டினால் வெள்ளக் காலங்களில் தண்ணீர் வடிந்து செல்வது தடைபட்டு பாசன நிலங்களில் வெள்ளம் புகுந்து சேதம் விளைவிக்கும். உணவு உற்பத்தியும் வெகுவாகக் குறைவதற்கு வழிவகை உள்ளது. எனவே, ஆற்றின் முகத்துவாரமருகே தடுப்பணை கட்டும் திட்டம் பயனுடையதாக இருக்காது எனக் கருதப்படுகிறது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசிமுத்தான் ஓடை என்பது ஒரு சிறு பகுதிதான். ஆனால், புவனகிரி, சிதம்பரம் இரண்டு பகுதிகளிலும் வெள்ளாற்றில் இருந்து வருகிற தண்ணீர்—காவிரிப் பிரச்சினைக்குப் பிறகு கோடைக் காலங்களிலே, வெள்ளாற்றிலே தண்ணீர் வருவது கிடையாது. அப்போது கடல் நீர் பெருமளவிற்கு சேத்தியாதோப்பு வரை வந்து கடல் நீர் வெள்ளாற்றிலே புகுந்து விடுகிறது. இதனால், புவனகிரி, சிதம்பரம் இரண்டு பகுதிகளிலும் கரைகளிலே இருக்கிற விளை நிலங்கள் மற்றும குடிநீர் அமைப்புகள் உவர்ப்பு நீராக மாறிவிடுகின்றன. எனவே, ஒரு சிறிய சுவர் கட்டினால் கடல் நீர் உள்ளே வராமல் தடுக்க முடியுமா, அப்படித தடுத்தால் உவர்ப்பு நீராக மாறுவதைக் குறைக்க முடியுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. எனவே அதனைப் பரிசீலிக்க அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பதைபோல காவிரிக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. காரணம், வெள்ளாறு என்பது மேலே கல்வராயன்மலை, கொல்லிமலை, பச்சைமலையிலே இருந்து வருகிற தண்ணீரை எடுத்துக்கொண்டு வருகிறது. அது ஆனைமடு, கரியகோயில், மணிமுத்தாறு, கோமுகி நதியினுடைய உபநதிகளாகக் கொண்டு வருகிறது. இந்தத் தண்ணீரை எல்லாம் கொண்டு வருகிற காரணத்தினால், இது வெள்ளாறு என்றே பெயர் பெற்றது. இந்த



மலைகளிலிருந்து வருகிற தண்ணீர் இது. இதை ஒரு பாசனக் கால்வாய் என்பதைவிட ஒரு வடிகால் என்பதே சரி. ஆனால் பாசிமுத்தான் ஓடையிலேதான் பாசனப் பகுதி இருக்கிறது. எனவே 12 கிலோ மீட்டர் உள்ளே, முன்னாலே, இருக்கிற காரணத்தால் பாசிமுத்தான் ஓடைக்கு மட்டும் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கே அந்தக் கடல் முகத்துவாரத்திலே ஓர் அணை கட்ட வேண்டுமானால் கிட்டத்தட்ட 1½ மீட்டர் உயரத்திற்கு மேல் கட்ட வேண்டும். அப்படி 1½ மீட்டர் உயரத்திற்கு கட்டினால், அந்தத் தடுப்புச் சுவரினால் இந்த வெள்ளக் காலங்களில் பெருக்கெடுத்து வருகிற தண்ணீர் கடலுக்குப் போகாது. அது மீண்டும் தேங்கி நின்று பக்கத்தில் இருக்கிற வயல்களை அழிக்கும். அப்படியானால் இருபுறமும் உயரமாகச் சுவர் கட்ட வேண்டும். ஆகையினாலே அது அவ்வளவு சாத்தியமாக இருக்காது. வடிகாலாக இந்த ஆறு இருக்கிற காரணத்தால் குறுக்கே அணை கட்டுவது அவ்வளவு பயன்படாது என்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 169, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**169—**

## கூடுதல் பேருந்து இயக்குதல்

***22535—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், பட்டுக்கோட்டையிலிருந்து கறம்பக்குடிக்குக் கூடுதலாக ஒரு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பட்டுக்கோட்டை - கறம்பக்குடி வழித் தடங்களில் மக்கள் பயன்பாட்டிற்குப் போதிய அளவு நடைகள் இயக்கப்படுவதால் குறிப்பிட்ட தடத்தில் தற்போது கூடுதலாக பேருந்து இயக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

[1999 மார்ச் 24

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறம்பக்குடி-பட்டுக்கோட்டை பேருந்து வசதி என்பது பல்வேறு நிலைகளில் இருக்கிற கிராமங்களைத் தொட்டுப் போகிற வழியாக இருக்கிறது. நான் சொல்லுகின்ற பேருந்து வசதி, அதம்பை, பாதரங்கோட்டை, அனந்தகோபாலபுரம், கொள்ளுக்காடு, வெட்டுவாகோட்டை, கொழுந்தரான்பட்டி, பிள்ளங்குறிச்சி, கறம்பக்குடி, ஆகிய பகுதிகள் வழியாகச் செல்ல வேண்டுமென்பதற்காக நான் இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தேன். இந்த வழியிலே பேருந்தே செல்லவில்லை என்பதனாலே இந்த வழியில் பேருந்து செல்வதற்கான வழிவகையை இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளே இல்லாத வழித் தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கான சிறிய பேருந்து திட்டம் அரசினால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தஞ்சை மாவட்டத்திற்கான கேள்வியா?

**திரு. ப. மோகன் கந்தசாமி:** இல்லை, கோவை மாவட்டம். அவசியமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே அந்தத் துணைக் கேள்வி எப்படி வரும்?

**திரு. ப. மோகன் கந்தசாமி:** போக்குவரத்து ரொம்ப தேவையாக இருக்கிறது. என்னுடைய தொகுதி, முழுவதும் கிராமங்கள் நிறைந்த பகுதி. தொழிலாளர்கள் நகரத்திற்கு வந்து செல்ல வேண்டும். விவசாயிகளின் விளைபொருள்கள் நகரத்திற்கு வர வேண்டும். ஏராளமான குழந்தைகள் பொங்கலூருக்கும், பல்லடத்திற்கும் வர வேண்டியிருக்கிறது. எனவே காலையிலே மட்டும் விவசாயிகளுக்கு என்று ஒரு தனிப் பேருந்தும், தொழிலாளர்களுக்கு என்று ஒரு சிறப்புப் பேருந்தும் விட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



1999 மார்ச் 24]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்தினால் சமத்துவம் உயர்ந்தால்தான் மிகவும் நன்றாக இருக்கும். அதிலே விவசாயிகள், தொழிலாளிகள் என்றெல்லாம் பல்வேறு வகையில் பிரிக்காமல் இருந்தால் நல்லது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 170, திரு. ப. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**170—**

## பயணியர் மாளிகைக்குப் புதிய கட்டடம்

***15715—திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிராம்பட்டினத்தில் உள்ள பயணியர் மாளிகை இடிந்த நிலையில் உள்ளதால் புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நெடுஞ்சாலைத் துறைக்குக் கட்டடங்களுக்கான நிதி ஒதுக்கீடு மிகக் குறைந்த அளவே உள்ளதால் அதிராம்பட்டினத்தில் உள்ள பயணிகள் மாளிகையைப் புதிதாகக் கட்டுவதற்கு அண்மைக் காலத்தில் வாய்ப்புகள் இல்லை.

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிராம்பட்டினம் என்பது பட்டுக்கோட்டை தொகுதியிலே உள்ள ஒரு பேரூராட்சிப் பகுதியாகும். பல அமைச்சர்கள் எல்லாம் அங்கே வருவதற்கான சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும்கூட, உப்பு உற்பத்தி செய்கின்ற ஒரு பெரிய நகரம் அந்த நகரம். ஆகவே அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து, இந்த ஆண்டு பயணிகள் விடுதி கட்டித் தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1999 மார்ச் 24

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கே இரண்டு அறைகளைக் கொண்ட ஒரு பயணியர் விடுதி இருக்கிறது. அது மிகவும் பழமையானது. புதிதாகக் கட்ட வேண்டுமென்பதுதான் மாண்புமிகு உறுப்பினருடைய விருப்பமாக இருக்கிறது. புதிதாக ஒரு பயணியர் விடுதி கட்டுவதற்கு ஏறத்தாழ ரூ. 8.50 லட்சம் தேவைப்படுகிறது. இந்த அரசுக்கு இருக்கிற நிதி நெருக்கடி காரணமாகவும், துறைக்கு இருக்கிற நிதி நெருக்கடி காரணமாகவும், புதிதாக பயணியர் விடுதி கட்டுவதற்குப் பதிலாக புதிய சாலைகள் அமைப்பதிலே அக்கறை காட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கை மனதிலே வைக்கப்பட்டு, பரிசீலிக்கப்படும். உரிய நேரத்தில் அவருடைய விருப்பம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 171, திரு. ஏ. கோதண்டம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**171—**

**கால்வாயின் குறுக்கே மேம்பாலம்**

***16813—திரு. ஏ. கோதண்டம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-திருப்பெரும்புதூர் நெடுஞ்சாலையிலிருந்து காட்டரம்பாக்கம், இருங்காட்டுக்கோட்டை செல்லும் சாலையில் சௌத்திரி கால்வாயின் குறுக்கே மேம்பாலம் அமைத்திடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(அ) மற்றும் (ஆ) சென்னை-திருப்பெரும்புதூர் நெடுஞ்சாலையிலிருந்து காட்டரம்பாக்கம், இருங்காட்டுக்கோட்டை செல்லும்



1999 மார்ச் 24]

சாலையில் சௌத்திரி கால்வாயின் குறுக்கே மேம்பாலம் அமைத்திடும் செயற்குறிப்பும், அதைப்போல அந்தச் சாலையை மேம்படுத்தும் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 10-15

**திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை-திருப்பெரும்புதூர் நெடுஞ்சாலை, காட்டரம்பாக்கம், இருங்காட்டுக்கோட்டை செல்லும் சாலையில் சௌத்திரி கால்வாய்க்கு அடுத்துள்ளது காட்டரம்பாக்கம், திருப்பெரும்புதூர் சாலை. இது மாவட்டச் சாலையாகும். இந்தச் சாலையைச் செப்பனிடுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்ட கோரிக்கை பரிசீலனையிலே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைச் சீக்கிரமாக எடுத்துச் செய்யுங்கள் என்று சொல்லுங்கள்.

**திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 172, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**172—**

**தமிழ்நாட்டில் வீட்டு வேலைப் பணியாட்கள்**

***19451—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வீட்டு வேலைப் பணியாட்கள் குறித்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பணியில் எவ்வளவு பேர் ஈடுபட்டுள்ளனர்?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 6 மாநகராட்சிகளில், நூற்றுக்கும் மேற்பட்ட நகராட்சிகளில் மிக முக்கியமான பணியாக இன்று வீட்டு வேலையாட்கள் பணி நடைபெற்று வருகிறது. இதிலே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், குறிப்பாக, பெண் தொழிலாளர்கள்தான் வீட்டு வேலைகளுக்காகப் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் பற்றிய கணக்கெடுப்பு இதுவரை நடத்தாமல் இருப்பது மிகவும் வருத்தத்திற்கு உரியது. இந்த நிலையை மாநில அரசு கருத்திலே கொண்டு உடனடியாக கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டு அவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல வீட்டு வேலையாற்றுகின்ற பெண்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் குறித்து கணக்கெடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். இலட்சக்கணக்கான ஸ்தாபன ரீதியற்ற தொழிலாளர்கள் அத்தனைபேருக்கும் இப்போது ஒரு வாரியம் அமைத்து சட்டத்தின் பலன் அவர்களுக்குப் போய்ச் சேருகின்ற விதத்திலே செய்கிறோம். இவர்களும் அந்த இலட்சக்கணக்கான தொழிலாளர்களாகிய unorganised sector-லே வருகிறார்கள். இருந்தாலும் அதுகுறித்துக் கணக்கெடுக்க முடியுமா என்று அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே வீடுகளிலே வேலை செய்யக்கூடியவர்களில் பெரும் பகுதியினர் பெண் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் எந்தவிதமான சட்ட எல்லைக்குள்ளும் வருவதில்லை. அவர்களுக்கு எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும் இல்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அமைந்திருக்கிற இந்த அரசு, அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு என்று ஒரு நல வாரியத்தை அமைத்திருக்கிறது. வரவேற்கத்தக்கது. அந்த நல வாரியத்தில் சேர்க்கப்பட வேண்டிய இந்த வீட்டு வேலைத் தொழிலாளர்கள்



விடுபட்டுப் போய்விட்டார்கள். எனவே நான் அருள்கூர்ந்து கேட்டுக்கொள்ள விரும்புவது, உடலுழைப்புத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியத்தில் ஐம்பத்து நான்கோடு இந்த ஒன்றையும் 55-வது தொழிலாளராக இணைத்துக்கொள்ள அரசு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வேலை செய்கிற பெண்களுக்காக ஒரு சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கமும் இதுகுறித்து ஒரு மனு கொடுத்திருக்கிறது. இதைப்போலவே, சைக்கிள்களைப் பழுதுபார்ப்பவர்களுக்காக ஒரு சங்கம் இருக்கிறது. அவர்களும் ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள். இவர்கள் அத்தனைபேர்களும் கலைஞர் தலைமையிலேயுள்ள இந்த ஆட்சியிலே, உருவாக்கப்பட்ட ஸ்தாபன ரீதியற்ற தொழிலாளர்களுக்கான வாரியத்திலே 54 தொழில்களை எடுத்துக் கொண்டதைப்போல எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதை எடுத்துச்சென்று ஆலோசித்து உரிய நேரத்தில் உரிய அறிவிப்பு சொல்லப்படும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 54 அமைப்புசாராத் தொழிலாளர்கள் இதுவரையிலே இதிலே இணைக்கப்பட்டு இருக்கின்றார்கள். இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்ன வீட்டு வேலை செய்கின்றவர்கள், அதைப்போல மாண்புமிகு அமைச்சர் சொன்ன சைக்கிள் ரிப்பேர் பார்க்கின்றவர்கள் இவர்களையும் சேர்த்து 56 தேசத்து இராஜாக்களும் (சிரிப்பு) இதிலே இடம் பெறுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் ஆட்சிப் பொறுப்பேற்றதும் 1992, 1993, 1994, 1995 ஆகிய வருடங்களில் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து புதுப்பிக்காதவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. அதேபோன்று இப்போதும் அதைப் புதுப்பிப்பதற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கப்படுமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1999 மார்ச் 24

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்புடையது அல்ல. தனியாகக் கேள்வி போடவும். ஆனாலும் முதலமைச்சர் அறிவித்ததற்குப் பிறகு,—உறுப்பினர் நன்றி சொல்வதுதான் முறையாகும்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 173, திரு. கு. மனோகரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**173—**

**மாணவர் விடுதி அமைத்தல்**

***11604—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகர், அதியமான் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் புதிய விடுதி அமைத்துத்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், தருமபுரி நகரில் பிற்படுத்தப்பட்ட நல மாணவர்கள் விடுதி தொடங்க ஆணையிடப்பட்டு தற்போது இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகர், அதியமான் மேல்நிலைப்பள்ளிக்குக் கடந்த ஆண்டு பிற்படுத்தப்படடோர் நல மாணவர் விடுதி வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தருமபுரி தலைநகரில் ஓர் அரசு கலைக் கல்லூரி இயங்கி வருகிறது. பொருளாதாரத் துறையில் நலிந்த மிக மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அதிகம் படிக்கும் அந்தக் கலைக் கல்லூரிக்கு இதுவரை பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி இல்லையென்ற நிலையில், 96 சதவீதம் கிராமப்புறப் பகுதிகளை உள்ளடக்கிய மாவட்டம் தருமபுரி



1999 மார்ச் 24]

மாவட்டம், நிலப்பரப்பில் அதிக பரப்பளவைக் கொண்ட மாவட்டம் தருமபுரி மாவட்டம், ஆகவே, மாண்புமிகு......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன துணை வினா? உட்காருங்கள்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நன்றி சொன்னதோடு சரி, உட்காருங்கள்.

வினா எண் 174, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**174—**

**தோல் வணிக வளாகம் கட்டுதல்**

***13030—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூரில் நடைபெற்று வந்த கால்நடை தோல் சந்தை நடைபெறாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தோல் சந்தையை மீண்டும் நடத்த இடம் தேர்வு செய்து நவீன தோல் வணிக வளாகம் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையைப் படிக்கின்றேன்.

(அ) ஆம். ஆனால் உயர்நீதிமன்ற ஆணையை நிறைவேற்றுவதற்காக ஓமலூர் ஊராட்சித் தலைவர் 15 நாட்களுக்கு முன்னால் மேற்படி சந்தையை நிறுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

(ஆ) 7-1-1998 ஆம் நாளிட்ட உயர்நீதிமன்ற ஆணைக்கொப்ப இத்தோல் சந்தையால் ஏற்படும் மாசினைத் தடுப்பதற்கு உரிய கருத்துருவினை வாரியத்திற்கு அனுப்பும்படியும் அல்லது இச்சந்தையை வேறு இடத்திற்கு மாற்றுமாறும் ஓமலூர் சிறு தோல் வியாபாரிகள்

[1999 மார்ச் 24

மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் இருக்கையில் இல்லை. வினா எண் 175, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**175—**

**காடுகள் மேம்பாட்டுத் திட்டம்**

***14706—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் வட்டம், விக்கிரவாண்டியிலுள்ள காடுகளை ஜப்பான் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். விழுப்புரம் வட்டம், விக்கிரவாண்டி தொகுதியில் 20 எக்டேர் காப்புக் காடுகளில் 1999-2000-ல் தமிழ்நாடு வனவளர்ப்புத் திட்டத்தின்கீழ் நீர்வள மேம்பாடு செய்து (Water Augmentation), மரங்கள் நட்டு பசுமையான பகுதியாக ஆக்கப்படும்.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேம்பாட்டிற்காக அரசு எடுத்த முயற்சிக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்தக் காட்டில் சந்தன மரங்களை வளர்க்க வாய்ப்பு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு இருக்கின்ற சில மாவட்டங்களில், வாய்ப்பு இருக்கின்ற இடங்களில் எல்லாம் சந்தன மரங்களைச் சேர்த்து நடுவதற்காக இந்த ஆண்டு ஆணையிட்டுள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. சிங்காரவேலு.



1999 மார்ச் 24]

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் நம்முடைய நெஞ்சம் எல்லாம் நிறைந்திருக்கக்கூடிய மாண்புமிகு தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஜப்பான் நாட்டு உதவியோடு 464 கோடி ரூபாய்க்கு இங்கே காடுகள் வளர்க்கின்ற ஒரு திட்டத்தினை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால், இந்தக் காடுகள் வளர்க்கின்ற திட்டம் உண்மையிலேயே வளர்க்கப்பட வேண்டிய என்னுடைய வால்பாறை தொகுதி மற்றும் இருக்கக்கூடிய மலைசூழ்ந்த பகுதிகளிலே வளர்க்கப்படாமல் இருக்கிறது. கடந்த ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் என்னுடைய வால்பாறை தொகுதி இத்திட்டத்திலே எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய வால்பாறை தொகுதியையும் இந்தத் திட்டத்திலே எடுத்துக்கொண்டு ஈட்டி, தேக்கு, சந்தன மரம் போன்ற விலை உயர்ந்த மரங்களை அங்கே வளர்ப்பதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரம் குன்றிய மலையும் மலை சார்ந்த ஆயிரம் கிராமங்களைத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மேம்படுத்த முடியும். ஆனால், வால்பாறையும் அதனைச் சார்ந்த காடுகளும் மிகவும் நன்றாக இருக்கின்றன. அழிந்துவிட்ட காடுகள் என்றால், 30 சதவீதத்திற்குக் குறைவான மரங்கள் இருக்க வேண்டும். ஆனால், வால்பாறை பகுதியில் நூற்றுக்கு நூறு சதவீதம் மரங்கள் நல்லமுறையில் இருக்கின்ற காரணத்தாலே மேற்படி பகுதிகளை இந்த வனவளர்ப்புத் திட்டத்தின்கீழ் எடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 176, திரு. ஜி.பி. வெங்கிடு, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**176—**

**தாட்கோ மூலம் வீடுகள்**

***4250—திரு. ஜி.பி. வெங்கிடு:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மார்ச் 24

கோபிச்செட்டிப்பாளையம் தொகுதியில் ஆதிதிராவிட மக்களுக்கு தாட்கோ மூலம் எரியாத வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கேள்வி எழாது.

முற்பகல் 10-25

**திரு. ஜி.பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆதிதிராவிட மக்களுக்கு அரசின் சார்பில் இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம். ஒரு கிராமத்தில் 50 ஆதிதிராவிடக் குடும்பங்கள் இருந்தால் அங்கே தற்போது இருக்கிற சூழ்நிலையில் 10, 15 குடும்பங்களுக்குத்தான் வீடு கட்டிக் கொடுக்க முடிகிறது. மீதம் உள்ளவர்கள் உரிய வகையில் அந்த நிலத்திற்குரிய பட்டா மற்றும் ஆவணங்களை வைத்திருப்பவர்கள் விரும்பிக் கேட்கிறபொழுது தாட்கோ கேட்கின்ற நிபந்தனைகளுக்குட்பட்டு வருகிறவர்களுக்கு நெருப்புப் பிடிக்காத வீடுகள் அந்தப் பகுதியிலே கட்டிக் கொடுக்கப்படுமா, அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாட்கோ மூலம் தற்போது எரியாத வீடுகள் கட்டும் திட்டம் இல்லை. ஆனால், குடிசைப் பகுதியில் கொடூரமான, கோரமான காட்சிகள் அடிக்கடி ஏற்பட்டு அதனால் மக்கள் பாதிக்கப்பட்டு, அவதியுற்று அல்லல்பட்டிருக்கின்ற அந்த மக்களுடைய கண்ணீர்க் காட்சிகளைப் பார்த்த மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் இந்தியாவிலேயே முதன்முதலாகக் குடிசைமாற்று வாரியத்தைத் தந்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குடிசை மாற்று வாரியத்தை அணுகினால் எரியாத வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 177, திரு. ஏ. ராசேந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.



1999 மார்ச் 24]

**177—**

**மாணவர் இல்லத்திற்குக் கட்டடம்**

***15812—திரு. ஏ. ராசேந்திரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம் போளூரில் ஆதிதிராவிடர் நல மாணவர் இல்லத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை. வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 178, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**178—**

**பெரியகுளம்-கும்பக்கரை அருவியைச் சுற்றுலா மையமாக்குதல்**

***7959—திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியகுளம்-கும்பக்கரை அருவியைச் சுற்றுலா மையமாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியகுளம் மாவட்டம், பெரியகுளம் தொகுதி கும்பக்கரை ஏற்கெனவே மாவட்ட உலாத்தலமாக அறிவிக்கப்பட்டு ரூ. 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் தேக்கடி, வைகை அணை, சுருளி அருவி போன்ற இடங்களுக்கெல்லாம் சென்றுவிட்டு இறுதியாகக் கும்பக்கரை அருவிக்கு வந்து குளித்துவிட்டுத்தான் பிற பகுதிகளுக்குச் செல்கிறார்கள். குறிப்பாக, கோடைக் காலங்களில் கும்பக்கரை அருவிக்குக் குளிப்பதற்காகப் பல்வேறு பகுதிகளிலிருந்து மாணவ மாணவிகள் ஏராளமாக வந்து அங்கே குளித்துவிட்டுச் செல்கின்றனர். அந்தக் குளிக்கின்ற இடத்தில் பாதுகாப்பில்லாத நிலையிருக்கின்ற காரணத்தால் பல நேரங்களில் அந்த இடத்தில் வழுக்கி விழுந்து பலர் இறந்து விடுகின்றனர். எனவே, குளிப்பதற்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளெல்லாம் செய்கின்ற வகையிலும், அதைப்போல உடைகள் மாற்றுவதற்கு, உணவு விடுதி, தங்கும் விடுதி, வாகனங்கள் நிறுத்துவதற்குரிய வசதி, இப்படிப்பட்ட வசதிகளெல்லாம் அந்தக் கும்பக்கரை அருவிப் பகுதியில் செய்வதற்கும் போதுமான நிதியை ஒதுக்கி ஒரே தடவையில் அனைத்து வசதிகளையும் செய்துதர அரசு நடவடிக்கையெடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கும்பக்கரை அருவிப் பகுதிகளில் ரூபாய் 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடைபாதை, வாகனம் நிறுத்துமிடம், அதுபோன்று குளிப்பதற்காக நீர்வீழ்ச்சிப் பகுதிகளில் கைப்பிடிக் கம்பி நிறுவப்பட்டுள்ளது என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பக்கரைக்குச் செல்கின்ற பாதையில் ஒரு கிலோமீட்டர் அளவிற்கு உட்பட்ட இடம் வனத்துறையினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கிறது. ஆனால் அந்த வனத்துறையிலே இருக்கக்கூடிய அந்தப் பாதையின் வழியாகத்தான் கும்பக்கரையினுடைய அருவிக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலையிருக்கிறது. அந்தப் பாதை மிகவும் சீரழிந்த நிலையிலே இருக்கின்ற காரணத்தினால் அங்கே வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு இருக்கிறது. ஆகவே, அந்தப் பாதையைச் சரி



செய்வதற்கு சுற்றுலாத் துறை முயற்சி செய்யுமா அல்லது வனத் துறை முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சுற்றுலாத் துறையின் மூலமாகப் பணத்தை வனத் துறைக்குக் கட்டினால் வனத் துறை அதிகாரிகள் அந்தப் பாதையைச் சரி செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 179, திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**179—**

**மலையடிப்பட்டியை சுற்றுலாத் தலமாக்குதல்**

***11350—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, குண்டலூர் கோவில் ஒன்றியம், மலையடிப்பட்டியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

சுற்றுலாத்தலம் என்று எந்தவோர் இடத்தையும் அரசு அறிவிப்பதில்லை. சுற்றுலா இடங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான சாலை வசதி, மின்விளக்குகள், குடிநீர் மற்றும் சிறுநீர் கழிப்பிட வசதிகள் ஆகியவற்றை உள்ளாட்சி நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது சுற்றுலாத் துறை மூலமோ செய்து தருகிறது. எனவே புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தொகுதியில் குண்டலூர் கோயில் ஒன்றியத்தில் உள்ள மலையடிப்பட்டியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 180, திரு. இரா. மதிவாணன். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

[1999 மார்ச் 24

**180—**

**மீனவர்களுக்கு டீசல் மானியத்தை உயர்த்துதல்**

***14812—திரு. இரா. மதிவாணன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைப்படகு மீனவர்களுக்கு டீசல் மானியத்தை மாநில அரசு உயர்த்தித் தர உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மத்திய அரசின் பங்கை வழங்க மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு, வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். இது சம்பந்தமாக, அரசு ஆணை எண் 273, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை, நாள் 18-12-1997-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள மொத்த கலால் வரி மானியத்தை ஒரு லிட்டருக்கு 07 பைசாவிலிருந்து 17 பைசாவாக உயர்த்தியுள்ளது.

(ஆ) இது சம்பந்தமாக தற்போதுள்ள மொத்த கலால் வரி மானியமாக ஒரு லிட்டருக்கு 87 பைசாவில் மத்திய அரசின் பங்கான 80 சதவீதமாக ஒரு லிட்டருக்கு 70 பைசா வீதம் மொத்தம் ரூ. 150.50 இலட்சம் மானியமாக வழங்குமாறு மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

**திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைப்படகு மீனவர்களுக்கு டீசல் மானியம் வழங்கியதைப்போல, நாட்டுப் படகுகள், சிறிய படகுகள் வைத்து அவற்றைப் பயன்படுத்தும் மீனவர்களுக்கு, மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றுக்கு நடப்பு ஆண்டில் சுமார் 20,000 மீனவர்கள் பயன்படுகின்ற வகையில், தாயுள்ளத்தோடு மூன்று கோடி ரூபாய் ஒதுக்கியுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மீனவர்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியம் எப்போது, எவ்வளவு, எந்த முறையில் வழங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.



1999 மார்ச் 24]

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியம் சிறு மீனவர்களுக்கு 1998-99 ஆம் ஆண்டே அறிவிக்கப்பட்டு, 7-8-1998 ஆம் நாளிட்ட அரசு ஆணைப்படி மூன்று கோடி ரூபாயை நமது அரசு வழங்கி இருக்கிறது. இதன்படி சிறு மீனவர்கள், உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் மோட்டார் பொருத்தியுள்ள விசைப்படகுகள் வைத்திருக்கும் சிறு மீனவர்கள் பயனடையும் வகையில் ஒரு லிட்டருக்கு 50 காசு வீதம் மாதத்திற்கு ரூ. 125 வீதம் வருடத்திற்கு 1500 ரூபாய் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இது மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இணை இயக்குநர்கள் மூலமாக வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

**பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக உறுப்பினர் தாமரைக்கனிக்கு அளித்த 15 நாட்கள் சிறைத் தண்டனையை நிறுத்திவைத்து உயர் நீதிமன்றம் அளித்த இடைக்கால ஆணை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே நேற்று எடுக்கப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்பில், சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முடிவுக்கு எதிராக, நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. சி. வேலாயுதன், திரு. டி. மணி, திரு. கே. சுப்பராயன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. அ.லெ. சுப்பிரமணியன், திரு. லா. சந்தானம், திரு. ப. ரங்கநாதன், திரு. வை. சிவபுண்ணியம், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. ப. மோகன் கந்தசாமி, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், திரு. ச. அழகிரி, திரு. ஜி. நிஜாமுதீன், திரு. ஜி.கே. மணி, திரு. ஐ. கணேசன், திரு. பி. வெங்கடசாமி ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இது மிக முக்கியமான பொருள் குறித்தது என்ற காரணத்தினால்,

கட்சிக்கு ஒருவர் என்று இல்லாமல், அறிவிப்புக் கொடுத்தவர்கள் அனைவரையும் பேச அழைக்கலாம் என்று கருதுகின்றேன். ஆகவே, ஏராளமான உறுப்பினர்கள் பேச இருப்பதால், பேசுகின்ற உறுப்பினர்கள் ஐந்து நிமிடத்திற்கு மேல் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இன்னொரு கருத்தையும் நான் முக்கியமாகச் சொல்ல விரும்புகின்றேன். பத்திரிகையில் வந்தமாதிரி, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் ஜாமீனில் விடப்படவில்லை. இன்று காலை நீதிமன்றத்திலே, அரசாங்கத்தின் சார்பில் சில விளக்கங்களைக் கொடுத்து, அதற்குப் பிறகு நீதிபதிகள் என்ன தீர்ப்புச் சொல்வார்கள் என்று நமக்குத் தெரியாததாகையால், பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கும் நீதிமன்றத்திற்கும் மோதல் ஏற்படுகின்ற சூழ்நிலையை உருவாக்கிவிடாமல், சற்று அடக்கமாகப் பேச வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு எல்லா உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

முதலில் உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களைப் பேச அழைக்கின்றேன். (குறுக்கீடு) நான் கட்சிக்கு ஒருவர் என்று சொல்லவில்லை. அறிவிப்புக் கொடுத்தவர்கள் எல்லோரையும் கூப்பிடலாம் என்று இருக்கிறேன். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச வேண்டுமானால் கடைசியில் அனுமதிக்கிறேன். திரு. ஞானசேகரன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு). உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பை, ரொமப தாராளமாக, நீங்கள் வேண்டாம் என்றால் அது வேறு உட்காருங்கள். (குறுக்கீடு) சரி பேசுங்கள். ஆனால் ஐந்து நிமிடத்திற்கு மேல் பேசவிடமாட்டேன்.

முற்பகல் 10-35

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம், தாங்கள் நம்முடைய மாமன்ற மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களை முதலிலே கைது செய்ய உத்தரவிட்டு, பிறகு ஏழு நாட்கள் அவரைக் காவலில் வைக்க வேண்டுமென்று ஒரு warrant-ஐயும் தாங்கள் அளித்து, பிறகு நேற்று இந்த அவை ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, இந்த மன்றத்தை அவமதித்த செயலுக்கும், அவர் மாண்புமிகு அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்களை அடித்துக் காயப்படுத்திய நிகழ்ச்சிக்கும் அவருக்கு 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை என்று இந்த அவையிலே



தீர்மானம் நிறைவேற்றி, தாங்கள் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறீர்கள். முதல் கட்டமாக அவரை இந்தக் கூட்டத் தொடர் முழுவதற்கும் நீக்கி வைக்க வேண்டுமென்ற தீர்ப்பு தங்களால் சொல்லப்பட்டது. அடுத்த கட்டமாக, அவர் கைது செய்யப்பட வேண்டுமென்கின்ற உத்தரவு உங்களால் இங்கு அளிக்கப்பட்டது. அவரைக் கைது செய்து காவலிலே வைக்க வேண்டுமென்று நீங்கள் அளித்த அந்தத் தீர்ப்பு முதல் நாள் நடந்துவிட்ட நிகழ்ச்சி. அதாவது, 22 ஆம் தேதி அவரைச் சிறையிலே வைக்க வேண்டுமென்று தாங்கள் முதலிலே ஓர் உத்தரவைக் கொடுத்தீர்கள். அந்த உத்தரவிற்கு எதிராகத்தான் இப்போது அவர்கள் நீதிமன்றம் சென்று Writ of Habeas Corpus மூலமாக, தங்களுடைய உத்தரவை சஸ்பெண்ட் செய்வதற்கான உத்தரவு இப்போது உயர்நீதிமன்ற நீதிபதிகளால் அளிக்கப்பட்டிருக்கிறது.

நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வதெல்லாம், இந்த அவையினுடைய இறையாண்மையைக் காக்க வேண்டியது தங்களுடைய தலையாய பொறுப்பு என்பதை நாங்கள் அனைவரும் இங்கே ஆமோதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தங்களுடைய இந்த இறையாண்மை எல்லைக்குள் நீதிமன்றமானாலும் சரி, அல்லது நிர்வாகமானாலும் சரி, தலையிடக்கூடாது என்கிற கருத்திற்கு யாரும் மாறுபட்ட கருத்துக் கொள்ள முடியாது. ஜனநாயகத்திலே நிர்வாகம், நீதித் துறை, மற்றும் சட்டமன்றம் இம்மூன்றுமே அதனுடைய தூண்கள். இந்த மூன்று தூண்கள் ஒவ்வொன்றுக்கும் இடையே எப்பொழுதுமே மோதல் வந்துவிடக் கூடாது என்பதிலே நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்த மோதல் இப்போது வந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. ஆனால், நேற்று தீர்ப்பு வழங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்குச் சரியான தகவல்களை அந்த writ மனுவைத் தாக்கல் செய்த வழக்கறிஞர் தரவில்லையோ என்கிற அச்சம் எனக்கு இருக்கிறது. அடுத்து, நம்முடைய அரசு வழக்கறிஞரும் அதைச் சரியாக எதிர்க்கவில்லையோ என்கிற அச்சமும் இருக்கிறது. காரணம், எப்போதுமே Writ of Habeas Corpus போடுகிறபோது Notice ஒன்றை முதலிலே கொடுப்பார்கள். அந்த Notice-ஐப் பெற்றுக்கொண்ட பிறகு, நம்முடைய அரசு வழக்கறிஞர் அதற்கான எதிர்ப்புக் கணைகளைத் தொடுத்திருக்க வேண்டும். ஆனால் இந்த விஷயத்திலே பார்க்கின்றபோது, பொதுவாக, தங்களுடைய எல்லைக்குள் விளக்கம் கேட்டுவிட்டு தாங்கள் தண்டனை வழங்க வேண்டுமென்பது நியதி. இந்த மன்றத்திற்குள் நடக்காத நிகழ்ச்சிக்கு, ஏதோ ஒரு பத்திரிகையாளர் Breach of Privilege-ஆக ஒரு செய்தியை வெளியிடுகிறார் என்று

வைத்துக்கொள்வோம், வெளியில் நடக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சிக்கு. அந்த நிகழ்ச்சிக்கு நாம் ஒருவரை அழைத்துவந்து விளக்கம் கேட்டு தண்டனை அளிப்பது என்பது நாம் மற்ற மன்றங்களிலே பார்க்கக்கூடிய ஒரு முறை. நீதிமன்றங்களும் தங்களுடைய கண்ணெதிரே நடக்காத நிகழ்ச்சிக்கு வேண்டுமானால் விளக்கம் கோரலாம். ஆனால், உங்களுடைய கண்ணெதிரே நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, அதாவது உங்களுடைய கண் பார்வையிலே நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, ஆங்கிலத்திலே under your nose என்று சொல்வார்கள். உங்களுடைய மூக்கின் கீழ் என்று சொல்வதைவிட உங்கள் கண் பார்வையிலே நடந்த நிகழ்ச்சியைப் பார்க்கின்றபோது, ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்கின்ற நிகழ்ச்சியை நீங்கள் பார்க்கின்றீர்கள் என்றால் அதற்கு ஒரு விளக்கம் தேவையில்லை. விளங்காத ஒன்றுக்கு வேண்டுமானால் நீங்கள் விளக்கம் கோரலாம். ஆனால், உங்களுடைய கண்ணால் பார்த்து, இங்கே அறிந்து கொண்ட ஒரு நிகழ்ச்சிக்கு விளக்கம் தேவையில்லை என்பதையும், அதேபோல, இந்த மாமன்றத்தில் ஒட்டுமொத்தமாக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, அந்தத் தீர்மானத்தின் வாயிலாக ஒருவருக்கு நீங்கள் தண்டனை வழங்கிவிட்ட பிறகு, அதுவும் இரண்டாவது தீர்ப்பு வழங்கிவிட்ட பிறகு அந்தத் தீர்ப்பின் மேலே இப்போது உயர்நீதிமன்றத்திலே எந்தவிதமான வழக்கும் இல்லை. தாங்கள் அவரைச் சிறையிலே வைக்க வேண்டுமென்று முதல் நாள் அளித்த தீர்ப்புக்குத்தான் இப்போது உத்தரவு வந்திருக்கிறது. தாங்கள் மறுநாள் சொல்லிய தீர்ப்பு வந்ததற்குப் பின்னால் உயர்நீதிமன்றம் அளித்திருக்கிற, உங்களுடைய உத்தரவை suspend செய்திருக்கக்கூடிய உத்தரவும், அவரை விடுதலை செய்ய வேண்டுமென்ற உத்தரவும் automatic-ஆக—ஆங்கிலத்தில் Infructuous என்று சொல்வார்கள்—செயல் இழந்துவிடக்கூடிய தன்மை பெற்றுவிடுகின்றன. ஆகவே, உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு, அதாவது உத்தரவு, தாங்கள் இந்த அவையினுடைய தீர்மானத்தைப் பெற்று, அவரை 15 நாட்கள் சிறையில் வைக்க வேண்டுமென்று சொன்ன பின்னால் Automatic-ஆக Infructuous ஆகிவிடுகிறது. ஆகவே, உயர்நீதிமன்ற நீதிபதிகளின் தீர்ப்பு என்பது பயனற்ற ஒன்றாகப் போய்விட்டதுடன், தாங்கள் மறுநாள் அளித்த தீர்ப்பு, அவையினுடைய ஒட்டுமொத்தத் தீர்மானத்தைப் பெற்று, அளித்த தீர்ப்பு அப்படியே நிலுவையில் இருக்கிறது. அதை எதிர்த்து எந்த வழக்கும் இல்லை.

பொதுவாக, இதற்குப் பல முன்னுதாரணங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. KAUL & SHAKDHER எழுதிய புத்தகத்தை



எடுத்துக் கொண்டால் 1954-லே உச்சநீதிமன்றம், பிறகு ஓரிஸ்ஸா நீதிமன்றம் போன்றவை எல்லாம் நமக்குச் சாதகமாகவே சில தீர்ப்புகளைக் கொடுத்திருக்கின்றன என்பதையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

AIR 1958 Page 168—

"Parliament is sovereign within the limits assigned to it by the Constitution. There is an inherent right in the House to conduct its affairs without any interference from an outside body. The Constitution specifically bars the jurisdiction of Courts of Law in respect of anything said or any vote given by a Member in the House. In the matter of judging the validity of its proceedings, the House has exclusive jurisdiction"

**HON. SPEAKER:** Are you reading short-notes or are you reading fully?

**THIRU C. GNANASEKARAN:** I am reading a part of the operative portion.

**HON. SPEAKER:** You just read the portion. Otherwise that will be too claborate.

*முற்பகல் 10-40*

**திரு. சி. ஞானசேகரன்:** எப்போதுமே, Parliament-க்கு அதனுடைய இறையாண்மையைக் காப்பதற்கு முழு உரிமை இருக்கிறது என்பதைப் பற்றி 1958-ல், ஓரிஸ்ஸாவிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல 1954 அலகாபாத்திலே—A.I.R. Page 319—சொல்கிறபோது, "This Court is not in any sense whatever a court of appeal or revision against the Legislature or against the ruling of the Speaker who as the holder of an office of the highest distinction has the sole responsibility cast upon him of maintaining the prestige and dignity of the House. This court (that means Allahabad High Court) has no jurisdiction to issue a writ or direction or order relating to a matter which affected the internal affairs of the House".

ஆகவே, இந்த மாமன்றத்தினுடைய வளாகத்திற்குள்ளே நடக்கக்கூடிய நிகழ்வுகளுக்கு அதாவது, internal affairs-ஐப் பொறுத்தவரையில், எந்தவொரு உயர்நீதிமன்றமும் ஒரு writ-டையோ அல்லது எந்தவிதமான உத்தரவையோ வழங்க முடியாது என்று 1954-லே அலகாபாத்

[திரு. சி. ஞானசேகரன்] [1999 மார்ச் 24

உயர்நீதிமன்றத் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல, I.L.R. Kerala 1983. Page 661 upto 700.

**HON. SPEAKER:** Just read the decision. Citation...

**THIRU C. GNANASEKARAN:** "The immunity envisaged in Article 212 (1) of the Constitution is restricted to a case where the complaint is no more than that the procedure was irregular, if the impugned proceedings are challenged as illegal or unconstitutional such proceedings would be open to scrutiny in a court of law".

அதாவது, procedure தப்பு என்று சொன்னால் மட்டும்தான் போக முடியுமே ஒழிய, உள்ளே நடக்கின்ற நிகழ்ச்சிகளுக்கு அவர்களால் போகவே முடியாது.

அடுத்து, A.I.R. 1954, அலகாபாத் நீதிமன்றம், அதிலேயும் அதைத்தான் சொல்கிறார்கள்.

**HON. SPEAKER:** How many rulings you are going to cite? That is enough. You just cite the citation. I have said only 5 minutes for each Member.

**திரு. சி. ஞானசேகரன்:** இன்னும் இரண்டு இருக்கின்றன.

A.I.R. 1958 Orissa, page 168-ல் உள்ள தீர்ப்புகளில் இதையே சொல்லியிருக்கிறார்கள்.

"The High Court held that anything said or done in the House is a matter to be dealt with by the House itself and that the Legislature or Speaker has the power to take suitable action against the Member".

என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது.

KAUL & SHAKDHER—பொதுவாக, சபாநாயகர்களுடைய உரிமையைப் பற்றிச் சொல்கிறபோது, "If contempt is committed in the immediate presence of the House, the contemner may not be heard. He is taken into custody immediately by the Director"

**HON. SPEAKER:** That portion is not relevant. Earlier portion is relevant.



1999 மார்ச் 24]

**திரு. சி. ஞானசேகரன்:** ஆம். பொதுவாக, தங்களுடைய பார்வைக்குள்ளே இந்த இடத்தில் நடந்த நிகழ்ச்சிபற்றி எடுக்கும் நடவடிக்கையில் யாரும், எந்த நீதிமன்றமும் தலையிட முடியாது என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த அவையினுடைய இறையாண்மையைக் காக்கும் முகத்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதேநேரத்தில் நீதிமன்றத்தோடு எந்தவிதமான மோதலையும் நாம் ஏற்படுத்திக்கொள்ள விரும்பவில்லை, அது வேண்டவும் வேண்டாம். அவர்களுக்கு என்று உரிமை இருக்கிறது. ஆனால் இந்த மாமன்றத்தினுடைய இறையாண்மையைக் கட்டிக் காப்பது தங்களுடைய கடமை. (மேசையைத் தட்டும் ஒலி) இது House of Commons காலத்திலேயிருந்து தொடர்ந்து வந்திருக்கக்கூடிய முறை. ஆங்கில நாட்டிலே இருந்து வந்திருக்கக்கூடிய பாராளுமன்ற முறையை எடுத்துப் பார்த்தோமேயானால் இந்த அவையினுடைய இறையாண்மையை, தங்களைப்போன்ற சபாநாயகர்கள்—நீங்களும் பல ஆண்டுகளாக வழக்கறிஞராகப் பணியாற்றியவர்கள், நானும் வழக்கறிஞராக பல ஆண்டுகள் பணியாற்றியவன் என்ற வகையிலேதான் நீதிமன்றத்தோடு மோத வேண்டும் என்ற எண்ணம் நமக்கு இல்லை. நாம் பதவி முடிந்த பின்னர் திரும்ப நீதிமன்றத்திற்குப் போகப் போகிறோம். அப்படிப் போனால்கூட....

**HON. SPEAKER:** I have retired.

**திரு. சி. ஞானசேகரன்:** இந்த அவையினுடைய இறையாண்மையைக் காக்க வேண்டி, பொதுவாக நீதிமன்றத்திற்கு, அதே நீதிபதிகள்கூட, உண்மையைச் சொல்லியிருந்தால் இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்க மாட்டார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து. அதாவது interim order தான் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உண்மையைச் சொல்லவில்லை என்று சொல்லாதீர்கள், விவரங்களைச் சொல்லவில்லை என்று சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சரி, நடந்த நிகழ்ச்சிகளைச் சரியாக சொல்லவில்லை. ஆகவே தங்களுடைய இறையாண்மையைக் காக்கும் பொருட்டு தாங்கள் நடவடிக்கை எடுத்து இப்போது வைத்து இருக்கக்கூடிய அந்த உத்தர[illegible] வரையில், எந்தக் காலகட்டத்திலும், நீதிமன்ற[illegible] நீங்கள் வாங்க



221072

வேண்டிய அவசியம் இல்லை. அதிலே யாருமே தலையிட வேண்டிய அவசியம் இல்லை. இந்த உண்மையைப் புரிந்துகொண்டு நிச்சயமாக நீதிமன்றம் உண்மையை அறிந்து, பிறகு அந்த interim order-ஐ அவர்களாகவே வாபஸ் வாங்கிக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது என்பதைத் தெரிவித்து நான் விடைபெறுகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு சிக்கலான பிரச்சினை, அதிலும் என்னைப் பொறுத்தமட்டிலும் இது சட்டத் துறைக்கும் நம்முடைய பேரவைக்கும் இடையிலேயுள்ள ஒரு பிரச்சினை. சாதாரணமாக கிராமங்களில் சொல்வார்கள், 'ஆடை முள் மேல் விழுந்தாலும், முள் ஆடை மேல் விழுந்தாலும் சேதம் முள்ளுக்கு (சிரிப்பு) சேதம் ஆடைக்குத்தான். எனவே, அந்த ஆடையிலிருந்து முள்ளை எடுப்பதாக இருந்தாலும் சரி, முள்ளிலிருந்து ஆடையை எடுப்பதாக இருந்தாலும் சரி, மிகக் கவனமாக எடுக்க வேண்டும்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்கள் இந்த நீதிமன்ற, சட்டமன்ற பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறாரா அல்லது அவருடைய கூட்டணி அரசியலைப்பற்றிப் பேசுகிறாரா? (சிரிப்பு)

**திரு. சி. வேலாயுதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரவையினுடைய இந்த தார்மீக உரிமையை நாம் காப்பாற்றியாக வேண்டும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது. ஆனால் நீதித் துறையும், நம்முடைய சட்டமன்றமும் இரண்டு கண்களைப் போன்றது. இடது கண் வேண்டுமா அல்லது வலது கண் வேண்டுமா என்று கேட்டால் இரண்டும் வேண்டும். அதேபோன்று இரண்டும் ஒரு தராசின் இரு தட்டுகளைப் போன்றது. ஆகவே, நம்முடைய இந்த வழக்கைப் பொறுத்தமட்டில், நீதித் துறை, சபாநாயகருடைய தீர்ப்பின் ஒரு பகுதியாகிய, அதாவது இந்த அவைத் தொடர் முடியும்வரை சம்பந்தப்பட்ட உறுப்பினர் அவைக்கு வரக்கூடாது என்று அறிவித்திருக்கக்கூடிய தீர்ப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதைச் சொல்ல விரும்பவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேசமயத்தில் மறுபுறம் அந்தச் சிறை தண்டனைக்கு இப்படி ஒரு



மாறுபாடான தீர்ப்பை அளித்திருக்கிறது. எனவே, நான் என்ன கருதுகிறேன் என்றால், சாதாரணமாக, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று சில வழக்குகளில் அரசு வழக்கறிஞர்கள் அரசுத் தரப்பிலுள்ள வாதங்களைச் சரிவர எடுத்து வைக்காமல் இருந்தால் அல்லது சரிவர சமயத்தில் சென்று ஆஜராகாமல் இருந்தால் இதுபோன்ற நிலை வரக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. அப்படி ஏதாவது நடந்திருக்குமோ என்று அறிந்து அதை எப்படி நிவர்த்தி செய்யலாம் என்பதையும் ஆலோசித்து நம்முடைய அவையினுடைய மரபை, அவையினுடைய கௌரவத்தைக் காப்பாற்றக்கூடிய வகையில் தாங்கள் ஒரு தகுந்த முடிவெடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நடந்த ஒரு நிகழ்ச்சியையொட்டி, ஏற்கெனவே பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. இன்றைய பத்திரிகைகளிலும் பல்வேறுவிதமான செய்திகள் வந்திருக்கின்றன. இந்த மாமன்றத்திற்கும், நீதிமன்றத்திற்கும் இடையே ஏதோ ஒரு மோதல் உருவாக்கப்படுவது போன்ற பல்வேறு செய்திகள் வந்திருக்கின்றன. என்னைப் பொறுத்தமட்டில் இந்த மாமன்றம் என்பது கோடிக்கணக்கான வாக்காளப் பெருமக்களுடைய வாக்குகளைப் பெற்ற உரிமையுள்ள ஒரு மாமன்றம். இதைத் தெளிவாகச் சொன்னால், நீதிபதிகள் இதைத் தடுப்பது என்பது எந்த அளவுக்கு நியாயம் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், நம்முடைய மாமன்றமும் அதேபோன்று நீதிமன்றமும் ஜனநாயக மரபில் முக்கியமான பாத்திரங்களை வகிக்கின்ற காரணத்தால், இவை இரண்டும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற தூண்களாகச் செயல்படுகின்ற காரணத்தால், இதிலே மோதல் என்ற பேச்சிற்கு இடமில்லை. இருந்தாலும் நம்முடைய மாமன்றத்திலே ஓர் உறுப்பினர் நடந்துகொண்ட விதம், நாம் எல்லோரும் நம்முடைய கண்களுக்கு முன்னால், நேரடியாகப் பார்த்த ஒரு நிகழ்ச்சியாகும். அந்த நிகழ்ச்சி இல்லை என்று சொல்ல முடியாது. அந்த நிகழ்ச்சியின்போது நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பை வழங்கி இருக்கிறார்கள். அந்தத் தீர்ப்புதான் முழுமையாக, நியாயமாக இருக்கும். அந்தத் தீர்ப்பை மறுப்பதற்கு இல்லை. அந்தவகையிலே நம்முடைய மாமன்றத்தினுடைய இறையாண்மையைப் பாதுகாக்க

வேண்டிய முழுப் பொறுப்பும் நம்முடைய மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களைச் சாரும் என்பதைச் சொல்லி, இந்த இரண்டுக்கும், அதாவது இந்த மாமன்றத்திற்கும், நீதிமன்றத்திற்கும் இடையே ஒரு மோதல் உருவாகாத வகையில் இந்தப் பிரச்சினையில் நம்முடைய உரிமையைப் பாதுகாக்கின்ற வகையில் ஒரு நல்ல முடிவுக்கு நாம் வரவேண்டுமென்று கேட்டு, என் உரையை முடிக்கிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரவையிலே இப்படிப்பட்ட ஒரு விவாதம் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது துரதிருஷ்டவசமானது. நம்முடைய அரசமைப்பு, ஜனநாயக அரசமைப்பு. ஜனநாயக அரசமைப்பின் மிக மையமான தலையாக இருப்பது நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்கள்தான. நீதிமன்றங்களிலே நீதி வழங்குவதற்கு ஆதாரமாக முன்வைக்கப்படுகின்ற சட்டங்கள் இயற்றப்படுகிற மிக உயர்ந்த அமைப்புகள்தான் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்கள் ஆகும். நீதிபதிகளின் செயல்பாடுகளுக்கான அடிப்படைகளை உருவாக்குவது மட்டுமல்ல; சமூக வாழ்வில் ஜனநாயக மரபை நியாயமாக உருவாக்குவதற்காகச் செயல்பட்டு வருகிற இந்த இடத்தில் இதனுடைய செயல்பாட்டில் ஒரு பலவீனமான. வன்முறையை வெளிப்படுத்துகிறபோது அவறறைத் தடுக்கிற கடமை, பொறுப்பு இந்தச் சட்டமன்றத்திற்கு உண்டு. சமூகத்தை ஜனநாயக ரீதியாகப் பண்படுத்துவதற்காக தார்மீகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய இந்தச் சட்டமன்றத்தின் நடவடிக்கைகளில், அதனுடைய ஜனநாயக இயக்கத்திற்கே ஒரு வன்முறை தடையாக வருகிறபோது, அந்த வன்முறை அம்சத்தை மிகக் கடினமான, கடுமையான விஷயமாகக் கருத வேண்டிய அவசியம் சட்டமன்றத்திற்கு உண்டு.

சில பிரச்சினைகள் வெளியிலேயும் எழுப்பப்படுகின்றன. ஒரு விஷயம் என்னவென்றால், ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு முன்னால், விளக்கம் பெற வேண்டும்; விசாரிக்கப்பட வேண்டும் என்ற ஒரு கருத்து பரவலாகச் சொல்லப்படுகிறது. நான் இங்கே எழுப்ப விரும்புவது, ஒரு விஷயத்தில் விளக்கம் பெற வேண்டும் அல்லது விசாரணை வேண்டும் என்றால் அதற்கு என்ன நோக்கம்? நடைபெற்ற விஷயங்களில் எது உண்மை என்பதைக் கண்டறிவதற்காகத்தான்



ிளக்கமே தவிர, விசாரணையே தவிர, விசாரணை செய்ய வேண்டும் ன்பதற்காக விசாரணை செய்வது அல்ல, அல்லது விளக்கம் பெற வண்டும் என்பதற்காக விளக்கம் பெறுவது அல்ல. உண்மை வர வண்டும் என்பதற்காகத்தான் விளக்கம். உண்மை தெரிய வேண்டும் ன்பதற்காகத்தான் விசாரணை. உண்மை தெரிய வேண்டும் ன்பதற்காகத்தான் விசாரணை என்றால் தங்களின் நேரடிப் ார்வையில் நிகழ்ந்தவற்றை, தாங்கள், தாங்களாக மட்டும் ார்ப்பதில்லை. சட்டமன்ற மரபின்படி, இந்தச் சபையின் கண்களின் ழியாக, இந்தச் சபையின் காதுகளாக இருந்து. சபையின் நாவாக ிருந்து நீங்கள் செயல்பட்டிருக்கிறீர்கள். அப்படித் தாங்கள் செயல்படுகிற இந்த நிலையில் சட்டமன்றத்தில் என்ன நிகழ்ந்தது ன்பதை இந்த முழுச் சட்டமன்றமும் கண்டு உணர்ந்ததை நீங்கள் ணர்த்தியிருக்கிறீர்கள். ஆகவே, பேரவைத் தலைவர் என்ற முறையில் ங்கள் செய்யப்பட்டது என்பது—சட்டமன்றத்தின் செயல்பாடுகளின் ர் முனையாக, மையமாக நீங்கள் செயல்பட்டிருக்கிறீர்கள் என்பதாகும். அப்படிச் செயல்பட்டதில், கண்ணுக்கு முன்னால் நடந்த விஷயம். இந்த அவை முழுவதும் கண்டறிந்த ஒரு விஷயம். இந்த விஷயத்திற்கு விசாரணை என்பது தேவையில்லை. அந்தச் சடங்குபூர்வமான டவடிக்கை அவசியமில்லை. வெறும் நுட்ப வாதங்களால் மட்டுமே பிரச்சினையை ஆராய்வது ஜனநாயகத்தில் நீதியை மேலும் நாமதப்படுத்தக் காரணமாக அமைந்துவிடும் என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல நீதிமன்றத்தைப் பொறுத்தவரையிலும் Habeas Corpus மனு எதற்காகப் போடுகிறார்கள்? சம்பந்தப்பட்ட 'X' எங்கே இருக்கிறார் என்றே தெரியவில்லை என்கிறபோது அவரை நீதிமன்றத்திற்கு முன்னால் ஆஜர்படுத்த வேண்டும் என்பதுதான் அதனுடைய மைய அம்சம். ஆனால், சம்பந்தப்பட்ட உறுப்பினர் தாமரைக்கனி எங்கேயிருக்கிறார் என்பது எல்லோருக்கும், மாநிலம் முழுவதும் தெரியும். இந்த நிலையில் Habeas Corpus மனு என்பது அதன் மீது நடந்த விசாரணை என்பது, சரிதானா என்கிற ஒரு கேள்வியும் எழுந்திருக்கிறது. அத்தகைய விசாரணையில் ஒரு தீர்ப்புக்கு வரலாமா? நீதிமன்றம்கூட தீர்ப்பு அளிப்பதற்கு முன்னால் இடைக்கால, அதாவது இடைக்காலத் தடை விதித்திருக்கிறது. நம்முடைய பேரவையின் முடிவை suspend செய்திருக்கிறது என்றால் பேரவைச் தலைவரின் உத்தரவின் மீது நீதிமன்றம் என்ன கருத்துக்கு வந்திருக்கிறது என்பது வெளிப்படுத்தப்படவில்லை. நீதிமன்றம் செயல்பட்டிருக்கிறது.

நீதிமன்றம் செயல்பட்டு விடுதலை செய்ய வேண்டுமென்ற நிலையை மேற்கொள்வதற்கு முன்னால் அவரைச் சிறையில் அடைத்த நிலை பற்றி விசாரித்து என்ன கருதுகிறது என்பதை நீதிமன்றம் தெரிவிக்கவில்லை. ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு முன்னாலேயே தீர்ப்பு அளித்துவிட்ட மாதிரியிருக்கிறது நீதிமன்றத்தினுடைய செயல். இதுவும் சரியான ஒரு விஷயமாகத் தெரியவில்லை.

*முற்பகல் 10-55*

அதேபோல, இன்னொரு விஷயத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தீர்ப்புகள் என்ன இருக்கின்றன என்று நாம் பார்க்க வேண்டிய அவசியமில்லை. எந்தெந்த High Court-லே என்னென்ன தீர்ப்புகள் இந்தப் பேரவை நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருக்கின்றன என்று பார்ப்பதுகூட பலவீனம் என்று நான் கருதுகிறேன். நான் மிகத் தெளிவாக உறுதிபட தெரிவிக்க விரும்புவது—நம்முடைய மரபு, நம்முடைய நடைமுறை, நம்முடைய அரசியல் அமைப்பு என்பதன் அடிப்படையில் இருப்பது உறுதியான நாடாளுமன்ற ஜனநாயக அமைப்புதான். (மேசையைத் தட்டும் ஒலி). நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பில் மிக உயர்ந்த வடிவம் நாடாளுமன்றம்தான். மக்கள் பிரதிநிதிகள்தான். மக்கள் பிரதிநிதிகளின் தீர்ப்புக்கு எதிராக விரல் விட்டு எண்ணுகிற சில நபர்களின் பேனா முனைகள் அத்தீர்ப்பை மாற்றி அமைக்க அனுமதிக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி). அது யாருடைய பேனா முனை என்பதல்ல. இது ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்குவதாகும். ஜனநாயகத்தின் மெய்யான சாரத்தையே காயப்படுத்துவதாகும். எனவே, நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, ஜனநாயக மரபுகளில் சபையினுடைய தீர்ப்புக்கு எதிராக எத்தகைய நிலையும் இல்லை, அதுவும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இது purely inner matter; internal matter தான். இந்த அவைக்கு உள்ளே நடந்த விஷயம்; சபைக்குள்ளே நடந்த விஷயத்தைப் பற்றி சபை தீர்மானிப்பதைத் தடுக்க முடியாது என்ற முறையில் நம்முடைய நீதிமன்ற நீதிபதிகளுக்கு முன்னால் இந்த விஷயம் கொண்டு செல்லப்படுவதில், ஒரே ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புவது, நம்முடைய அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் உரியபடி இந்த நிலைகளை வெளிப்படுத்தவில்லை என்கிற ஒரு பலவீனம் இருக்கிறது. இன்னொரு பலவீனம், ஒரு வாரம் தாமரைக்கனி அவர்களைச் சிறைக்கு அனுப்பியபோது, இந்தப் பேரவை ஒரு தீர்மானத்திற்கு வந்திருக்க



வேண்டும்; அப்படி ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தால், தற்போது உயர்நீதிமன்றம் இத்தகைய நிலையை மேற்கொள்ளாமல் இருந்திருக்கக்கூடும் என்ற கருத்தையும் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவை 1996 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு இந்தக் கூட்டத்தொடர் நிகழ்ச்சிவரை இந்தப் பேரவையினுடைய நடவடிக்கைகள் எவ்வளவு கண்ணியமாக—சென்ற ஆட்சியில், சட்டமன்றத்தில், முரணானவை நடந்துள்ளன—மிக்க நேர்த்தியான முறையில் நடைபெற்றன என்பதை எல்லோரும் அறிவார்கள். எல்லோரும் தலை குனியக்கூடிய வகையிலே நடந்த ஒரு நிகழ்வு குறித்து இந்த சட்டப் பேரவை எடுத்த முடிவினை, நீதிமன்றம் குறுக்கிட்டு null and void, அதாவது இல்லை என்று ஆக்குவது, உண்மையிலேயே மிகவும் வருத்தத்திற்குரியது, கண்டனத்திற்குரியது என்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாநில மக்கள் முழுமைக்கும் பொறுப்பேற்று இருக்கின்ற இந்த சட்டப் பேரவையின் இறையாண்மை கண்ணியமான முறையில் காப்பாற்றப்பட வேண்டும். தீர்ப்பு அளிக்கின்றபோதுகூட, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் மிகுந்த சிந்தனையோடு, கவலையோடு, கவனத்தோடு அளித்தார்கள் என்பதை சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவருமே அறிவார்கள். ஆகவே, Sovereignty என்று சொல்லப்படுகின்ற, எல்லா இறையாண்மையையும் கொண்ட இந்த சட்டப் பேரவையினுடைய தீர்ப்பிற்கு நீதிமன்றம் உட்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, நீதிமன்றத்தினுடைய ஆணையை தாங்கள் புறக்கணிக்க வேண்டும் என்று கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையினை ஒரு சிக்கலான பிரச்சினையாகக் கருத முடியாது. சில சிக்கலான மனிதர்களாலே, சிக்கலை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே உருவான பிரச்சினையாகத்தான் இது இருக்க முடியும். இந்த மாமன்றத்திற்கென்று ஒரு இறையாண்மை இருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட

பிரதிநிதிகள் அடங்கிய இந்த மாமன்றம், இங்கிலாந்து பாராளுமன்ற நடைமுறைகளைப் பின்பற்றி அமைந்து இருக்கின்ற காரணத்தினாலே, இந்த மாமன்றத்தில் நடைபெறுகின்ற செயல்களுக்கு, இந்த மன்றமே ஒரு நீதிமன்றமாக இருந்து செயல்படுவதற்கும், இதற்கு முழு அதிகாரம் இருக்கிறது—என்பது வலியுறுத்தப்பட்டு இருக்கின்ற ஒரு மாபெரும் கருத்து. அந்த வகையிலே பார்க்கிறபொழுது, இந்த மாமன்றத்திலே, இதுவரையிலே இல்லாத அளவிற்கு ஓர் உறுப்பினர்—பேரவைத் தலைவர் அவர்கள் மிக உயர்ந்த இடத்திலே உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்க, அவருக்குப் பக்கங்களிலே பத்திரிகையாளர்களும் அதிகாரிகளும் பார்த்துக் கொண்டிருக்க, இவர்கள் எல்லோருக்கும் மேலே மக்களும் பார்வையாளர்களாக இருந்து பார்த்துக் கொண்டிருக்க, ஒரு வன்கொடுமையினைச் செய்து நடந்து கொண்ட முறைக்காக, நீங்கள் எடுத்த அந்த நடவடிக்கையிலே தலையிடுவதற்கு, எப்படி நீதிமன்ற விவகாரத்திலே தலையிடுவதற்கு நமக்கு உரிமை இல்லையோ, அதே உரிமை இந்த அவைக்கும் உண்டு. எனவே நம்முடைய இறையாண்மையிலே யாரும் தலையிடுவதற்கில்லை என்பதுதான் ஒரு தார்மீகக் கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீதிமன்றத்திலே நீதிபதிகள் எப்படி மதிக்கத் தகுந்தவர்களோ அதைப்போல மக்கள் மன்றத்திலே பேரவைத் தலைவர் அவர்கள், அனைவராலும், இந்த நாட்டு மக்களாலும் மதிக்கத் தகுந்தவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். எனவே, இந்த மாமன்றத்தினுடைய இறையாண்மை காப்பற்றப்பட வேண்டுமென்கிற வகையிலே, அனைத்து உறுப்பினர்கள், அனைத்து சாட்சியங்களினுடைய அடிப்படையிலே நீங்கள் எடுத்த ஒரு முடிவானது மிகமிகச் சரியானதொரு முடிவு என்பதை மீண்டும ஒரு முறை இந்த மாமன்றத்திலே வலியுறுத்தி, அங்கீகரித்து, அந்த நடவடிக்கை தொடர—மறுபடியும் நீதிமன்றத்திலேகூட ஒருவேளை சரியாக நாம் எடுத்து வைக்காமல் இருந்திருந்தால்—அந்த வாதங்களை முறையாக, சரியாக எடுத்து வைத்து, இந்த மாமன்றத்தின் இறையாண்மையைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் காவலனாகத் திகழ்ந்த பண்டித



ஜவஹர்லால் நேரு அவர்கள், The Speaker represents the House and the House represents the Nation என்று குறிப்பிட்டிருக்கிறார்.

The Speaker is all powerful within the four-walls of the House என்று ஜென்னிஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

Whatever the Speaker say as Judgment in the House, that is Law என்று சொல்லப்படுகிறது.

நம்முடைய நாடாளுமன்ற, சட்டமன்ற நடைமுறைகள் என்பது ஆங்கிலேயர்கள் பின்பற்றிய விதிமுறைகள், May's Parliamentary Practice, அதைப்போல House of Commons-ல் இருக்கிற முன்னுதாரணங்கள், விதிகள் ஆகியவற்றைப் பின்பற்றி நடைபெறுபவை ஆகும்.

இதிலே சட்டமன்றம் மேலாண்மை படைத்ததா, நீதிமன்றம் மேலாண்மை படைத்ததா என்கிற வாக்குவாதம் தேவை இல்லாதது. ஒவ்வொன்றும் அவரவர்கள் பணிகளைச் செய்வதிலே மேலாண்மை படைத்ததாகும். நீதிமன்றம் நீதிமன்றத்தினுடைய பணிகளைச் செய்கிறபோது மேலாண்மை படைத்தது, அதைப்போல சட்டமன்றத்தினுடைய தனித் தன்மையை, அவர்களுடைய Sovereignty-ஐக் காப்பாற்றுகிற விதத்திலே செயல்படுவதற்கு அனைத்து அதிகாரமும் நிச்சயமாக சட்டமன்றத்திற்கு உண்டு.

இந்திய அரசமைப்புச் சட்டத்திலே, Article 212 - Courts not to inquire into the proceedings of the Legislature என்பது தலைப்பு. அந்த Article 212 (1)-ன் கீழ், "The validity of any proceedings in the Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure என்று தெளிவாக உள்ளது.

Article 212 (2)-இலே "No Officer or Member of the Legislature of a State in whom powers are vested by or under this Constitution for regulating procedure or the conduct of business, or for maintaining order; ....." என்று இருக்கிறது. நான் மீண்டும் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன், "for maintaining order, in the Legislature shall be subject to the jurisdiction of any Court in respect of the exercise by him of those powers"

அதைப்போல "Article 194 - Powers, privileges, etc. of the Houses of Legislatures and of the Members and Committees thereof" என்று அதிலேயும் தெளிவாக, சட்டமன்றத்திற்கு இருக்கிற Immunity குறித்து Privileges குறித்து கூறப்பட்டிருக்கிறது.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 மார்ச் 24

முற்பகல் 11-05

சட்டமன்றத்தினுடைய விதிகள் என்று எடுத்துக்கொண்டால், சட்டமன்றம் ஏதோ தன் மனம் போன போக்கிலே நடத்தப்படுவதல்ல. அரசமைப்புச் சட்டத்தின் Article 208-ன்படி, ஒவ்வொரு சட்டமன்றமும் விதிகளை—Rules of Procedure-நிறைவேற்றி, அந்த விதிகளுக்கு உட்பட்டு நடத்தப்படுகிறது. இந்தச் சட்டமன்றத்திலே வன்முறைச் சம்பவம் நடந்து, அதனாலே சட்டமன்ற நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு, சட்டமன்றத்தினுடைய மரபும், ஒழுக்கமும் தடைபட்டன; ஒரு பக்கத்திலே Criminal Offence என்பதையும் தாண்டி, சட்டமன்றத்தின் நடவடிக்கைகள் நடக்கிறபோது, சட்டமன்ற ஒழுக்கம் தடுக்கப்படுகிறது. சட்டமன்றத்தினுடைய கண்ணியம் பாதிக்கப்படுகிறது. எனவே, சட்டமன்றத்தை ஒழுங்குபடுத்துகிற அதிகாரம் சபாநாயகருக்கு விதிகள் மூலமாக வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி வழங்கப்படுகிறபோது, இதிலே சட்டமன்றத்திற்குள்ளே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதன் மூலமாக ஒரு தண்டனை தருவது சரிதானா அல்லது Privilege Committee மூலமாக ஏதாவது தண்டனை அளிக்கப்படவேண்டுமா என்று கேட்கிற போது ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். Privilege Committee உங்களாலே, சட்டமன்றத்தினுடைய அனுமதியோடு நியமிக்கப்படுகிற ஒரு Sub-Committee தான் சட்டமன்றத்திலே பல துணைக் குழுக்கள் இருக்கின்றன House Committee, Privilege Committee, Rules Committee என்று இப்படி இந்த Committees சபாநாயகராலே சட்டமன்றத்தினுடைய அனுமதியோடு ஏற்படுத்தப்படுகின்றன. அதிலே ஒரு Committee தான் இந்த Privilege Committee இது ஒரு Sub-Committee தான், நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி. எனவே இந்த Sub-Committee-க்கே அந்த அதிகாரம் இருக்கிறபோது, ஒட்டுமொத்த சட்டமன்றத்திற்கு அந்த அதிகாரம் எப்படி இல்லாமல் போகும் என்று நம்மாலே புரிந்துகொள்ள முடியவில்லை. அதுவும் உங்களாலே, தனித்து சபாநாயகர் என்ற அளவிலே மட்டுமே தரப்பட்ட தீர்ப்பு அல்ல, ஏகமனதாக, இங்கே இருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டு, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களாலேயும், நிறைவேற்றப்பட்டிருக்கிற ஒரு தீர்மானம். அப்படி ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றுகிறபோது, அந்தத் தீர்மானத்திற்கு இருக்கிற மரியாதை என்பது அல்லது அங்கீகாரம் என்பது இந்த Sub-Committee-யிலே Privilege Committee-யிலே எடுக்கப்படுகிற முடிவைக் காட்டிலும் கூடுதல் அதிகாரம் படைத்தது, வலிமை படைத்தது என்பதிலே நிச்சயமாக இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது.



1999 மார்ச் 24] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

Privilege Committee-க்கு ஏன் அனுப்பவில்லை என்று சொன்னால், Privilege Committee-க்கு அனுப்புகிறபோது, வெளியே நடந்த ஒரு சம்பவம் அல்லது நடந்த அந்தச் சம்பவத்தின்மீது மேலும் கூடுதல் ஆதாரங்கள் தேவைப்படுகின்றன அல்லது கூடுதல் விளக்கங்கள் தேவைப்படுகின்றன அல்லது சாட்சியங்கள் தேவைப்படுகின்றன என்கிறபோது, அவற்றை சட்டசபைக்குள்ளே கொண்டு வந்து விசாரிக்க முடியாது என்ற காரணத்தால்தான், Sub-Committee மூலாக, Privilege Committee மூலமாக வாய்ப்புத் தரப்பட்டு, அங்கே அதற்கான சான்றுகளையோ அல்லது அவர்களுடைய விளக்கங்களையோ கேட்பதற்கு அந்த Sub-Committee-ஐப் பயன்படுத்துகிறோம். அந்த முறையிலே Sub-Committee-க்கு அந்த அதிகாரம் வழங்கப்படுகிறது. ஆனால் இங்கே 'கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை' என்பதைப்போல, உங்கள் கண் முன்னாலேயே இந்தச் சம்பவம் நடந்தது. சட்டமன்றத்திற்குள்ளேயே நடந்தது. எல்லோரும் இருக்கிறபோது நடந்தது. அந்த வன்முறை சம்பவம் நடந்ததென்பது எல்லோராலேயும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனக்குத் தெரியும். எந்தப் பத்திரிகையிலும் மாற்றுக் கருத்து, அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்பதைப் போலவோ அல்லது அந்தக் கட்சியினுடைய தலைவர் ஜெயலலிதா குறிப்பிட்டதைப் போலவோ, அதை ஆதரித்தோ எந்தப் பத்திரிகையிலேயும் எந்தத் தகவலும், செய்தியும் வரவில்லை. ஆகவே எந்த அரசியல் தலைவரும் மாற்றுக் கருத்தை வெளியே சொல்லவுமில்லை. ஆகவே, எல்லோராலேயும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு சம்பவத்தின்மீது ஏகமனதாக இங்கே தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம். இப்படியெல்லாம் நடந்து இருக்கிறதா என்று சொன்னால், இந்தத் தண்டனைகளிலே பலவிதம் உண்டு. தண்டனைகளிலே, இதைவிடக் கூடுதல் தண்டனையெல்லாம் வழங்கப்பட்டு, உச்ச நீதிமன்றத்திலே, உயர் நீதிமன்றத்திலே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னாலே—உதாரணத்திற்கு பலவற்றைச் சொல்ல முடியும். இங்கே உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல—ஜனாதிபதியினுடைய பரிசீலனைக்கு, President Opinion என்கிற தலைப்பிலே 1965 AIR Page No. 745-லே குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது Supreme Court-வரை கேசவ்சிங் வழக்கு சென்றது. அந்த வழக்கிலே ஒரு வாரம் ஜெயில் தண்டனை தரப்பட்டது. இது Privilege Committee-யிலே தரப்பட்ட தண்டனை.

[திரு. எஸ் திருநாவுக்கரசு] [1999 மார்ச் 24
முற்பகல் 11-10

அதுமாதிரி Yashvant Rao Vs. Madhya Pradesh Legislative Assembly அதிலே என்ன நடந்தது என்று சொன்னால், சட்டமன்றம நடந்து கொண்டிருந்தபோது சட்டமன்ற உறுப்பினரால் Deputy Speaker அடிக்கப்பட்டார். எனவே, அந்தச் சட்டமன்ற உறுப்பினருடைய பதவி பறிக்கப்பட்டது. அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உச்ச நீதிமன்றம் வரை போய் அவருடைய பதவி—அப்போது Disqualification Act கிடையாது—Expel செய்யப்பட்டது. for rest of the period. அது வரை சென்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

அதேபோல, இங்கேகூட, இந்தச் சட்டமன்றத்திலேயே A.M. Balraj Vs. Speaker of Tamil Nadu என்ற வழக்கில் அவருக்கு இரண்டு வார காலம் தண்டனை கொடுக்கப்பட்டபோது அதுவும் நீதிமன்றத்திற்குப் போய், உயர் நீதிமன்றத்திற்குப் போய், உச்ச நீதிமன்றத்திற்குப் போய், தண்டனை கொடுத்தது, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதுமாதிரி, சட்டமன்றத்தினுடைய மேலாண்மையை நிலை நாட்டும் வகையில், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, சி. சுப்பிரமணியம் அவர்கள் சட்ட அமைச்சராக இருந்தபோது Lazer Case என்கின்ற வழக்கில் நீதிமன்றம் கேட்பதற்கு விளக்கம் தரவேண்டியது இல்லை என்கிற முடிவு இந்தச் சட்டமன்றத்திலேயே எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி பலவற்றைச் சொல்லலாம்.

இன்னொன்று, Doctrine of Indoor Management என்பார்கள். அந்தத் தத்துவம் இதற்குப் பொருந்தும். இந்த அவைக்குள்ளே ஒரு சம்பவம் நடக்கின்றபோது, கண் முன்னாலே நடக்கின்றபோது, Doctrine of Indoor Managment தத்துவத்தின்படி இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் கூடி முடிவு செய்து தீரப்பு வழங்க உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். Supreme Court-ல் தலைமை நீதிபதி முன்னாலே, அவர் மேலேயே ஒரு வழக்கறிஞர் செருப்புவிட்டு வீசினார். அதற்காக பின்னாலே, பக்கத்தில் nearest Police Station எதுவோ அங்கே சென்று ஒரு F.I.R. போட்டு, வக்கீல் வைத்து வாதாடி, அதற்குப் பின்னாலே அவருக்கு தண்டனை தரப்படவில்லை. அப்போதே, அங்கேயே நீதிபதி அவருக்கு 3 மாத ஜெயில் தண்டனை என்று சொன்னார். Court-லே அந்தச் சம்பவம்



1999 மார்ச் 24] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

நடந்து முடிந்த உடனேயே, 3 மாதம் அவருக்கு சிறைத் தண்டனை அங்கேயே வழங்கப்பட்டது. எனவே, உங்கள் கண் முன்னாலே நடந்த இந்த நிகழ்ச்சிக்கு — நீங்கள் சபாநாயகர் மட்டுமல்ல, இந்தச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் உங்களுக்கு நீதிபதிக்கு உள்ள அதிகாரமும் இருக்கிறது. நீங்கள் ஒரு நீதிபதியும் ஆவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்த வகையிலே—நீங்கள் தீர்ப்பளித்திருக்கிறீர்கள்.

நீதிபதியினுடைய தீர்ப்பு இரண்டு வகையாக இருக்கிறது. ஒன்று நீங்கள் கொடுத்த warrant stay செய்யப்பட்டிருக்கிறது. இன்னொன்று விடுதலை செய்ய உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இதிலே, already the warrant has been executed. நீங்கள் கொடுத்த உத்தரவுப்படி கைது செய்யப்பட்டு அவர் சிறையிலே அடைக்கப்பட்டுவிடுகிறார். அதற்குப் பின்னாலே Speaker's warrant-ஐ எப்படி நிறுத்தி வைப்பது? எனவே, அந்த ஒரு பகுதி என்பது ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Warrant-க்கு stay கிடையாது. நான் 'custody for one week' என்று கொடுத்தேன் பாருங்கள். அதற்குத்தான் stay.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இரண்டு பகுதியாக நான் பார்த்தேன். Judgement copy-ஐ நான் பார்க்கவில்லை. பத்திரிகைகளில் வந்துள்ளபடி இரண்டு பகுதிகளாக இருக்கின்றன. ஒன்று the order of the Speaker has been stayed.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** That is, keeping the M.L.A. in custody for a week. That order has been stayed. The warrant for the arrest has been executed.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்கிறேன். அப்படியென்றால் இரண்டாவது தீர்ப்பு வேண்டியதில்லையே. The entire order has been stayed. Then where is the question of giving in? Operative portion-ஐ இரண்டாக நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படித்தான் நான் எடுத்துக்கொள்கிறேன். Judgement-ல் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று நீங்கள் கொடுத்த உத்தரவு நிறுத்தப்பட்டிருக்கிறது. இரண்டாவது அவர் Bail-ல் விடப்படுகிறார். அதற்கு முன்னால், warrant has already been executed. He has already been arrested. எனவே, இவற்றையும் நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். எனவே, இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எந்த முடிவையும், சுயமாக, தனியாக எடுத்து, அமல்படுத்தவில்லை. இது சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கின்ற தீர்மானம். நீதிபதிகளுக்கே இந்தச் சந்தேகம் வந்திருக்கிறது. அந்த வழக்கை எடுத்த உடனேயே, இது சட்டமன்றத்திற்குள்ளே நடந்த சம்பவமாயிற்றே; இதில் நாங்கள் எப்படித் தலையிட முடியும என்றுதான் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதுவும் பத்திரிகையிலே வந்திருக்கிறது. 'இந்து' பத்திரிகையிலும், எல்லா பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. நாங்கள் இதிலே தலையிட முடியாதே என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே பல விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன.

*முற்பகல் 11-15*

என்னைக் கேட்டால், அரசாங்கத்தின் சார்பிலே அரசு வக்கீல்கள் இந்த Notice-ஐ எடுத்திருக்கக்கூடாது; எடுத்துக்கொள்ளாமல் இருந்திருக்க வேண்டும். பழைய வழக்குகளிலே நான் சொன்னது மாதிரி, ஜனாதிபதி opinion கேட்கிறபோதுகூட, கோர்ட்டிலே வந்து apprise பண்ணச் சொல்லியிருக்கிறார்களே தவிர, நீதிமன்றத்திலே போய் வழக்காடச் சொல்லவில்லை. எனவே, இதிலே இங்கே, இநத சட்டமன்றத்திலே எடுத்த முடிவின் மீது வந்த அந்த Noticc-ஐ நம்முடைய அரசு வக்கீல்கள் எடுத்திருக்கக்கூடாது; நீதிமன்றத்திலே appcar ஆகியிருக்கக் கூடாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். எனவே, இந்த நிகழ்ச்சி முடிவு பெற்றதற்குப் பின்னாலே, தீர்ப்பும் தற்காலிகமாகத் தரப்பட்டிருக்கிறது. அதிலேயும், மாண்புமிகு உறுப்பினர் சொன்னது மாதிரி, 22 ஆம் தேதி நீங்கள் வழங்கிய தீர்ப்பின் மீதுதான் இப்போது ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே, அதற்கு அடுத்த நாள், 23 ஆம் தேதி, சட்டமன்றத்தினுடைய ஏகமனதான தீர்மானத்தின்படி, 15 நாட்கள் சிறைத்தண்டனை அவருக்குத் தரப்பட்டிருக்கிறது. நான்கூடச் சொல்வேன், இதிலே எந்தத் தண்டனை பெரியது என்றால், அதாவது, ஒரு உறுப்பினருடைய பதவிக் காலம் முழுவதையும் இரத்து செய்வது பெரிய தண்டனையா, அல்லது 15 நாட்கள் சாதாரண சிறைத்தண்டனை கொடுப்பது பெரிய தண்டனையா என்றால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினருடைய பதவிக்காலம் முழுவதையும் இரத்து செய்வதுதான் நிச்சயமாக பெரிய தண்டனையாக இருக்க முடியும். எனவே, இந்தத் தண்டனையை, அது இந்திரா காந்தி வழக்காக இருந்தாலும் சரி,



இந்தச் சட்டமன்றத்திலே 10 சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி காலாவதியானபோது, அதுவும் உச்ச நீதிமன்றம்போய், அரசாங்கம் எடுத்தது சரி என்றுதான் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதுமாதிரி பல வழக்குகளிலே, அதுவும் இந்திரா காந்தி வழக்கிலேயிருந்து, சட்டமன்றத்திலே எடுக்கப்பட்ட முடிவு சரி என்று உச்ச நீதிமன்றம் போய் ஏற்கப்பட்டது. எனவே, இப்படி பல வழக்குகள் உறுப்பினர்களுடைய பதவிப் பறிப்பை ஏற்றுக்கொள்கிறபோது, அதற்கான அதிகாரம், அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற அதிகாரம் சட்டமன்றத்திற்கு இருக்கிறது என்று உச்ச நீதிமன்றம் வரை ஏற்றுக் கொள்கிறபோது, இங்கு கண் முன்னாலே நடந்த, சபையைத் தடுக்கிற, சபையிலே நடந்த ஒரு வன்முறைக்கு 15 நாட்கள் சாதாரணத் தண்டனை கொடுக்கின்ற அந்த அதிகாரம் நிச்சயமாக இந்தச் சட்டமன்றத்திற்கு இருக்கிறது என்பதிலே எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது. இது முரண்பாடு அல்ல. அவர்களோடு மோதுவது என்பதல்ல. நாம் நீதிபதிகளை மதிக்கிறோம். அது வேறு பிரச்சினை. ஆனால், சட்டமன்றத்தினுடைய தனித்தன்மை, மேலாண்மை காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலே சட்டமன்றம் பிடிவாதமாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். இதனாலே நீதிபதிகளை அவமதிக்கிறோம் என்பதல்ல. நீதிபதிகளை மதிக்கிறோம். நீதித் துறையை மதிக்கிறோம். நீதித் துறை. சட்டமன்றத் துறை, நிர்வாகத் துறை இவை மூன்றும் தனித்தனியாக இயங்க வேண்டிய துறைகளாகும். எனவே, இந்தத் துறைகளுடைய மேலாண்மையை மட்டுமல்ல, இந்தத் துறைகளுடைய—sovereignty—இறையாண்மையைக் காப்பாற்ற வேண்டும். அதற்கேற்ப நீங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

***திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினைபற்றி, சட்டரீதியாகவும், பல உச்ச நீதிமன்ற வழக்குகளை மேற்கோள்காட்டியும் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலையை நான் தவிர்த்துவிட்டு, என்னுடைய ஒருசில கருத்துகளை மட்டும் நான் இங்கே வைக்க விரும்புகிறேன். நண்பர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நானும் 35 ஆண்டு காலமாக வழக்கறிஞராகப் பணியாற்றுபவன். அதோடு, இந்தச் சட்டமன்றத்தில் மூன்று முறை உறுப்பினராக இருக்கின்ற வாய்ப்பையும் பெற்றவன். ஆகவே, வழக்கறிஞன் என்ற

முறையிலேயும், சட்டமன்றத்தினுடைய இறையாண்மை காப்பாற்றப்பட வேண்டுமென்ற பொறுப்போடும், நடுநிலைமையோடு சில கருத்துகளை நான் இங்கே வைக்க விரும்புகிறேன். அதோடு, எங்களுக்கு இருக்கின்ற ஒரு வாய்ப்பு, பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சட்டம் படித்தவர்கள். சட்டம் படிக்காதவர்களெல்லாம் சட்ட அமைச்சராக இந்தியாவில் பதவி வகிக்கின்றபோது, சட்டம் படித்திருக்கின்ற நீங்கள் இந்தப் பேரவையின் தலைவராக இருப்பது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரியது.

அதுமட்டுமல்ல, உங்களைப் பொறுத்தவரையில், உங்களுடைய தந்தையார் பி.டி. இராஜன் அவர்கள்--Bar at Law---இந்தச் சட்டமன்றத்தில் அமைச்சராக இருந்தவர். உங்களுடைய மைத்துனர், மாண்புமிகு நடராஜன அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தவர். ஆகவே, எங்களைவிட, சட்டமன்றத்திற்கும், நீதித் துறைக்கும் மோதல் வருகின்றபோது, மிக நடுநிலைமையோடு நீங்கள் தீர்ப்பு வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையும், உங்களுடைய குடும்பச் சூழ்நிலையும் இருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே பல பேர் குறிப்பிட்டதைப்போல, சட்டப்பேரவைத் தலைவர் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு ஒப்பானவர். அவருக்கு இல்லாத ஒரு பெருமையும் உங்களுக்கு இருக்கிறது. உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி, Chief Justice அவர் ஒரு தீர்ப்பு வழங்கினாலும், அந்தத் தீர்ப்பிற்கு உச்ச நீதிமன்றத்தில் நாம appeal செய்ய முடியும். ஆனால் சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தீர்ப்பு வழங்கினால் நாடாளுமன்ற Speaker இதிலே தலையிடுவதற்கோ appeal செய்வதற்கோ உரிமை கிடையாத அளவுக்கு ஒரு நிலையில் இருக்கக்கூடியவர்கள் நீங்கள்.

*முற்பகல் 11-20*

இங்கே பல நண்பர்கள் குறிப்பிட்டதைப்போல சட்டமன்றத் தலைவருக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றி Practice and Procedure of Parliament என்பதைப்பற்றி Kashyap என்பவர் குறிப்பிடுகின்றபோது ஒன்றைக் குறிப்பிடுகின்றார். "He has to impress the House generally with confidence in the soundness and the impartiality of his judgments, with the conviction that he considers himself the conscience and guardian of the House." நீங்கள்தான் இந்தச் சட்டப் பேரவையின் மனசாட்சியாகவும் பாதுகாவலராகவும் இருக்கிறீர்கள் என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.



இங்கே நடப்பதை ஏதோ Privilege Committee-க்கு அனுப்ப வேண்டும் என்றோ அல்லது விசாரணைக்கு வைக்க வேண்டும் என்றோ சொல்கிறார்கள். இது ஏதோ சபைக்கு எதிரான contempt-ஐ அல்லது privilege-ஐ ஏற்படுத்தக்கூடிய வழக்கல்ல. சபையிலே ஒரு அமைச்சரை நேரடியாகத் தாக்கிக் கொடுங்காயம் விளைவித்திருக்கிறார். அது பிரிவு 326-ன்படி கொடுங்காயம்—grievous hurt—அதற்கு 10 ஆண்டு காலம் சிறைத்தண்டனை அல்லது 7 ஆண்டு காலம் ஆயுள் தண்டனை என்று சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இது உங்கள் கண் முன்னாலே நடந்தது. அதேநேரத்தில் இதற்கான அதிகாரம் இருக்கிறதா என்பதைப் பற்றியும் அதே புத்தகத்தில் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். அதை மட்டும் நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

The power of the House to punish for 'Contempt or Breach of Privilege' has been aptly described as the "keystoae of Parliamentary Privilege and is considered necessary to enable the House to discharge its functions and safeguard its authority and privilege. This power is akin in nature and owes its origin to the powers possessed by the Courts of Law to punish for contempt. Without such a power the House" would sink into utter contempt and inefficiency. ஆகவே, நீதிமன்றத்திற்கு என்ன அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதோ தண்டனை தருவதற்கு, அதைப்போன்ற அதிகாரம் சட்டப் பேரவைத் தலைவருக்கும் இருக்கிறது. அதை நீங்கள் பயன்படுத்தவில்லை என்றால் சட்டமன்றம் பலவீனமாக ஆகிவிடும் என்று அதிலே குறிப்பிடுகின்றார்.

அது மட்டும் அல்லாமல் இன்னும் காஷ்யப் புத்தகத்திலே குறிப்பிடுகின்றபோது 'Prosecution of the offenders' என்பதைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

In the case of a 'Breach of Privilege' which is also an offence at Law, the House may, if it thinks that the punishment which it has the power to inflict, would not be adequate to the offence, or if for any other reason, the House feels that a proceeding at law is necessary, either as a substitute for, or in addition to, its own proceeding, direct the prosecution of the offender in a Court of Law. இந்தத் தண்டனை போதாது என்று இந்தப் பேரவை கருதினால் - இரண்டு வாரம் தந்திருக்கிறீர்கள் - அது போதாது என்று கருதினால்—அவர்கள்மீது criminal வழக்கு தொடருவதற்கும் உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதால் அதைச் செய்ய வேண்டுமென்றும் இந்த அவையின் சார்பாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. அ.லெ. சுப்பிரமணியன்] [1999 மார்ச் 24

இன்னொன்று இங்கே குறிப்பிட்டதைப்போல முதல் நாள் நீங்கள் ஒரு வார காலம் அவரைச் சிறையிலே அடைக்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறீர்கள். அதன்மீதுதான் Habeas Corpus Writ போடப்பட்டிருக்கிறது. ஆனால் நேற்று நீங்கள் இரண்டு வாரம் சிறைத்தண்டனை என்று அவையினுடைய தீர்மானமாக நிறைவேற்றி இருக்கிறீர்கள். ஆகவே அவர்கள சொன்னதைப்போல நீங்கள் முதல் நாள் போட்ட உத்தரவு இன்றைக்கு infructuous, இன்னும் சொல்லப் போனால் சட்டத்தில் it is non est in Law என்று சொல்லலாம். It does not exist at all. நீங்கள் முதல் நாள் போட்ட 7 நாள் தண்டனை என்பது மீண்டும் இந்த அவை கூடி 2 வாரம் என்று தீர்மானம் நிறைவேற்றியதற்குப் பிறகு உங்களுடைய முந்தைய ஆணை—நீங்கள் போட்ட தீர்மானம்—இறந்துபோய்விட்டது என்றுதான் சட்டத்திலே சொல்ல வேண்டும். ஆகவே இப்படிப்பட்ட நிலையில் உயர் நீதிமன்றம் இதில் தலையிட்டிருப்பது எந்த விதத்திலும் நியாயம் அல்ல என்பது என்னுடைய கருத்து.

*முற்பகல் 11-25*

நம்முடைய இந்த அவையின் இறையாண்மை நிச்சயமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியாது. ஒன்றே ஒன்றுதான், நீதித் துறையைப் பொறுத்தவரையில் கேட்டுக்கொள்ள விரும்புவது - ஒரு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியே ஒரு முறை சொல்லியிருக்கிறார், Judicial activism is a welcome sign but not Judicial adventurism என்று அதாவது—நீதித் துறை சுறுசுறுப்புக் காட்டலாமே தவிர, வீரதீரச் செயல்களைக் காட்டுவதாகக் கருதிக்கொண்டு, தாறுமாறான தீர்ப்பினை வழங்கக் கூடாது.

இதை நான் சொல்லவில்லை; உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியே குறிப்பிட்டிருக்கிறார்.

அதுபோல இன்னொரு முறை குறிப்பிடுகிறபோது, Courts should not think to govern the State through proxy அதாவது—ஒரு ஆட்சியாளர்களுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டதைப்போல நீதிமன்றங்கள் தீர்ப்புகளை வழங்கக்கூடாது என்றும், உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியே கூறியிருக்கிறார்கள். ஆகவே, சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நீங்கள் வழங்கியதுதான் தீர்ப்பு. நீங்கள்தான் இந்தச் சட்டமன்றத்தின் மனசாட்சி. நீங்கள்தான் இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பாதுகாவலர் என்று சட்டமே குறிப்பிடுகிறது. ஆகவே, நீங்கள் வழங்கிய தீர்ப்பு, தீர்ப்புதான்.



1999 மார்ச் 24] [திரு. அ.லெ. சுப்பிரமணியன்]

அதுமட்டுமல்ல; இன்னும் அவர்கள்மீது prosecution போடலாம் என்ற அதிகாரம் இருக்கிறது; அதையும் நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, நீதிமன்றத்திலே இருந்து summon வந்தாலும், சில சட்டப் பேரவைத் தலைவர்கள் செய்ததைப்போல, இந்தச் சட்டமன்றத்தின் சார்பாக நீங்கள் அதைப் பெற வேண்டாம் என்பது என்னுடைய கருத்து என்பதைத் தெரிவித்து நான் முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றம் மிகுந்த ஒழுக்கத்தோடும், கடமையுணர்வோடும் நடந்து கொண்டிருக்கின்ற நல்ல வேளையில், கடந்த 22-3-1999 ஆம் நாள், இங்கு நடந்த விரும்பத்தகாத சம்பவங்களை முன்னிறுத்தி, தாங்கள் இந்தச் சட்டமன்றத்திலே நடந்த அந்தச் சம்பவத்திற்காக வழங்கிய தீர்ப்பிற்கு, நீதிமன்றத்தின் தீர்ப்பு, மாறுபட்ட கருத்தோடு வழங்கப்பட்டிருக்கிறது என்கிற நிலையை, இந்தச் சட்டப் பேரவை பரிசீலனை செய்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில், தங்களைப் பொறுத்த அளவிலே, ஒரு சட்டப் பேரவைத் தலைவராக மட்டுமல்லாது, நல்ல சட்டம் படித்த வழக்கறிஞராகவும் பல்லாண்டு காலம் நீதிமன்றத்திலே சிறப்புற செயலாற்றினீர்கள் என்ற முறையிலும், மேலும் நல்ல பண்பாளர் என்று மக்கள் பாராட்டுகிற ஒரு நிலை இருக்கிறபோது, தாங்கள் வழங்கிய தீர்ப்பிற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது என்பதைத்தான் இந்தச் சட்டமன்றமும் ஏற்றுக்கொள்கிறது.

சாதாரணமாக ஒரு வழக்கு நீதிமன்றத்திற்கு வருமேயானால், அந்த வழக்கிலே பொதுவாக, கண்முன்னால் நேராகப் பார்த்த சாட்சிகள் இருக்கிறார்களா—eye witness—என்று கேட்பார்கள்; சாதாரண பாமர மக்கள்கூட, ஒரு வழக்கிலே நேரடியாகப் பார்த்த சாட்சிகள் உண்டா என்பதுதான் முக்கியம், ஒரு வழக்கு நீதிமன்றத்திற்குச் செல்கிற நேரத்திலே என்று சொல்வார்கள். ஆனால், இந்த நிகழ்ச்சியைப் பொறுத்த அளவிலே, தங்கள் கண் முன்னால், நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறபோது அமைச்சர்களும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் பார்த்துக் கொண்டிருக்கிற நிலையிலே நடந்தது இந்த நிகழ்ச்சி. குற்றங்கள் வருகிற நேரத்திலே கண் முன் பார்த்த சாட்சிகள் உண்டா என்று கேட்பதற்கு இணையாக, கண் முன்னாலே பார்த்த சாட்சியாக தாங்களே இருக்கிற காரணத்தினால், தாங்களே

அந்த நிகழ்ச்சியைப் பார்த்து, அதற்குரிய தீர்ப்பினைக் கூறியுள்ளீர்கள். இப்படிப்பட்ட நிகழ்வு நடந்துவிடக் கூடாது என்பதற்காக தாங்கள் மிக ஜாக்கிரதையாக இந்தச் சட்டப் பேரவை நிகழ்ச்சிகளைக் கடந்த 3 ஆண்டுகளாக நடத்தி வந்திருக்கிறீர்கள்; அதுவும், ஜனநாயக முறை என்பது இங்கே மிகுந்த கௌரவத்தோடு பேணப்பட்டு, காக்கப்பட்டு, ஆளுங்கட்சி உறுப்பினர்களைக் காட்டிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு, அக்கறையோடு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த இந்தச் சட்டமன்றத்தில், இப்படிப்பட்ட விரும்பக்கூடாத ஒரு நிகழ்ச்சி, அதுவும் ஒரு அமைச்சரையே தாக்குகிற நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்று சொன்னால், பண்பு நிறைந்த இந்தத் தமிழ்நாட்டிலே இந்த நிகழ்ச்சி, மக்கள் எல்லாம் வருந்துகிற அளவுக்கு ஒரு நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது. இதிலே தாங்கள் அளித்திருக்கிற தீர்ப்பு என்பதை இந்தச் சட்டமன்றமும் ஏற்றுக்கொண்டு, இந்தச் சட்டமன்றம் ஒருமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கின்றது. இந்தத் தீர்மானத்திற்கு வலிவு சேர்க்கின்றவகையிலே, இங்கு எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு உதாரணங்களை எடுத்துக் காட்டினார்கள். சட்டமன்ற வளாகத்திலுள்ளே நடக்கின்ற நிகழ்ச்சிக்கு அதனுடைய சிறந்த நீதிபதியாக சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் கொடுப்பதுதான் நீதி. அந்த நீதியை எந்த வழக்காடு மன்றங்களும், நீதிமன்றங்களும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்று எடுத்துக் காட்டினார்கள். அதற்கொப்ப தாங்கள் வழங்கிய நீதி நிலைத்திட வேண்டும். இந்தச் சட்டமன்றத்தினுடைய இறையாண்மை காக்கப்பட வேண்டும் என்று என்னுடைய இயக்கத்தின் சார்பிலே கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22-ந் தேதி நடந்த சம்பவத்தை ஒட்டியும், தாங்கள் அளித்த தீர்ப்பினை ஒட்டியும், நீதிமன்றத்திலே வழங்கிய தீர்ப்பினை ஒட்டியும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஞானசேகரன் முதற்கொண்டு பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை இங்கே வெளிப்படுத்தியுள்ளார்கள். குறிப்பாக, நீதிமன்றத்தினுடைய செயல்பாட்டிற்கான சட்டமுறைமைகளையும், விதிமுறைகளையும் வகுத்து வழி காட்டுவது சட்டமன்றமும், நாடாளுமன்றமும்தான்.



இதன்படி நாடாளுமன்றத்திலேயும், சட்டமன்றத்திலேயும் இந்த இறையாண்மை என்பது மேலும் முக்கியத்துவம் பெறுகிறது. இதற்கு எந்த ஒரு சிறு பாதகமும் வராமல் பார்த்துக்கொள்வது தங்களுடைய கடமையும் ஆகும்.

கடந்த 22-ந் தேதி இங்கே, சட்டமன்றத்திலே உங்களுடைய கண் முன்னாலேயும், இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களின் முன்னாலேயும் மற்றும் அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், காவல் துறையைச் சேர்ந்த நண்பர்கள், காவலர்கள் என்று அனைவரும் பார்த்து கொண்டிருக்கின்ற போது, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைத் தாக்கி, கொடுஞ்செயல் புரிந்தார் என்பது இந்த அவையிலே அனைவரும் அறிந்த உண்மை. அந்த அடிப்படையிலேதான் தாங்கள் 22-ந் தேதி ஒரு இடைக்காலத் தீர்ப்பை வழங்கினீர்கள். அந்த 22-ந் தேதிய தீர்ப்பினையொட்டி நேற்றைக்கு, அதாவது 23-ந் தேதி இங்கே ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டுள்ளது. அதாவது 22-ந் தேதியை உள்ளடக்கி 15 நாட்களுக்குச் சிறைவாசம் என்று நீங்கள் தீர்ப்பு வழங்கிவிட்டீர்கள். ஆனால், நீதிமன்றத்திலே 22-ந் தேதி வழங்கிய தீர்ப்பிற்கு. Habeas corpus மூலமாக அதைப் பாவித்து அங்கே நீதிபதிகள்—Division Bench—உங்களுடைய தீர்ப்பிற்குத் தடை விதித்து ஆணை பிறப்பித்துள்ளார்கள். நேற்றைக்கு நீங்கள் நிறைவேற்றிய தீர்மானத்தை—சரியாக ஒன்றேகால் மணிக்கு—நீங்கள் 22-ந் தேதி அளித்த தீர்ப்பை உள்ளடக்கிய 23-ந் தேதிய தீர்ப்பான 15 நாட்கள் சிறைத்தண்டனை என்பதைப் பார்க்கின்றபோது உங்களுடைய தீர்ப்புதான் இன்றைக்கு சரியான தீர்ப்பு என்று இந்த நாட்டு மக்களும், இந்த அவையினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆகவே, நீதிமன்றம் உங்களுக்கு அளித்துள்ள Notice-ஐ நீங்கள் பெறவேண்டாம் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திருநாவுக்கரசு அவர்களும், ஏ.எல். சுப்பிரமணியன் அவர்களும் பல்வேறு எடுத்துக்காட்டுகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதிலே திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொல்கிறபோது, அண்மையிலே உச்ச நீதிமன்றத்திலே ஒருவர், Court வளாகத்திலேயே, வழக்குகள் நடந்து கொண்டிருக்கும்போதே, தன்னுடைய காலில் அணிந்திருந்த செருப்பை எடுத்து, உச்ச நீதிமன்ற நீதிபதியைப் பார்த்து அடித்திருக்கின்றார் என்று சொன்னார்கள். அப்போது அங்கே இருந்த வழக்குரைஞர்களும்

[திரு. ப. ரங்கநாதன்] [1999 மார்ச் 24

பார்வையாளர்களும் அதைப் பார்த்திருக்கின்றார்கள். உடனே அங்கே காவலுக்கு நின்றிருந்த காவலர்களிடத்திலே கூறி, அவரைப் பிடித்து நான்கு மாத சிறைத்தண்டனைக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். அது நீதிமன்றம் என்ற காரணத்தினால், அவருக்குத் தண்டனை வழங்கி, இப்போது திஹார் சிறைச்சாலையிலே அவர் இருக்கிறார். இந்தச் செயலுக்காக அக்கம்பக்கத்திலே இருக்கிற காவல்நிலையத்தில் புகார் கொடுத்து, அந்த நபரைப் பிடித்து விசாரித்து, அவருக்காக வழக்கறிஞர் வாதாடி, அதன்பிறகு தீர்ப்பு வழங்கப்படவில்லை. உடனடியாக பிடித்து, அந்த நீதிமன்றத்திலே தலைமை நீதிபதி அவர்கள் 4 மாத சிறைத் தண்டனை வழங்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-35

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, நீங்கள் உங்கள் கண் முன்பாக நடந்த சம்பவத்திற்காக, அதுவும் அடித்த சம்பவத்திற்காக நீங்கள் தீர்ப்பு வழங்கவில்லை. அவர் செய்த தவறுகளைச் சுட்டிக் காண்பித்து, அதாவது கடந்த காலங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஞானசேகரன் அவர்களையும், செல்லக்குமார் அவர்களையும், மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களையும் அடித்தும், துணைச் சபாநாயகராக இருக்கின்ற தங்களைத் தகாத வார்த்தைகளால் திட்டியும் உள்ள இந்தக் காரணங்களையெல்லாம் சுட்டிக்காட்டி, கடந்த கால நிகழ்வுகளை எல்லாம் எடுத்துக்கூறி 22ஆம் தேதி உட்பட நீங்கள் 15 நாட்கள் சிறைத்தண்டனை என்று தீர்ப்பு வழங்கி இருக்கிறீர்கள். இந்தத் தீர்ப்பின் மீது உயர் நீதிமன்றத்திலே அவருக்கு ஜாமீன் வழங்கி இருக்கின்றார்கள். அந்த நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர் அரசு சார்பிலேயும், சட்டமன்றத் துறையின் சார்பிலேயும், இங்கே நீங்கள் நிறைவேற்றிய தீர்மானத்தைப்பற்றித் தெளிவாக எடுத்துவைக்காத காரணத்தினால்தான் நீதிபதிகள் இப்படித் தீர்ப்பு வழங்கினார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆகவே, இதையெல்லாம் நீங்கள் கருத்திலே கொண்டு நிதிபதிகள் உங்களுக்கு வழங்கியுள்ள Court Notice-ஐ நீங்கள் பெறக்கூடாது என்பதை இங்கே வலியுறுத்தி, சட்டமன்றத்தின் இறையாண்மையைக் காப்பதற்கு இன்று துணிவோடு நின்று, அதைக் காக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.



1999 மார்ச் 24]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்ற உத்தரவின் பின்னணியில் நம்முடைய சட்டப் பேரவையினுடைய இறையாண்மையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்ன கருத்தை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இந்த நீதிமன்ற உத்தரவையும் மற்றும் இங்கே உறுப்பினர்கள் சொன்ன கருத்துகளையும் நாம் இணைத்துப் பார்க்கிறபோது, இந்தப் பேரவையிலே நடைபெற்ற சம்பவம் என்பது சட்டப் பேரவைத் தலைவர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், அதிகாரிகள் ஆகியவர்கள் முன்னிலையில் நடைபெற்ற சம்பவம் என்ற காரணத்தினாலே இதற்கு விளக்கமோ, வேறுவிதமான காரணமோ கூற முடியாத, இயலாத நிலை இருக்கிறது. ஆகவே, இங்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தின்மீது நம்முடைய சட்டமன்றக் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி, இந்தச் சட்டமன்றம் நேற்றையதினம் ஒருமனதாக நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தின்மீது எடுக்கப்பட்ட முடிவுகள் உறுதியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

குறிப்பாக, இந்தச் சட்டமன்றத்தில் இதற்கு முன்னாலே நடைபெற்ற சம்பவங்களையெல்லாம் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்தியாவிலே பல மாநிலங்களிலே நடைபெற்ற முன்னுதாரணங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி பல முன்னுதாரணங்கள் இருந்தாலும், இந்தச் சட்டமன்றக் கூட்டத்தில் நம்முடைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் மிகச் சிறப்பாக, நிதானமாக பல்வேறு முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, எதிர்க் கட்சியினர் பேசுவதற்கு, கருத்துக்களை எடுத்துச் சொல்ல தாராளமாக வாய்ப்பினை வழங்கிய வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டமன்றம் இது. அதிலும் குறிப்பாக நம்முடைய முதல்வர் அவர்கள் இதற்குச் சிறப்பாகவே பல்வேறு அனுமதிகளை அளித்திருக்கிறார்கள். அப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்தச் சட்டமன்றத்தில் இப்படி ஒரு வருந்தத்தக்க சம்பவத்தை ஏற்படுத்தி, அதிலும் குறிப்பாக அமைச்சரே தாக்கப்பட்டு, கொடுங்காயம் ஏற்படுகிற அந்த மோசமான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டது என்பதுதான் இந்தச் சட்டமன்ற வரலாற்றிலே

ஒரு களங்கமாக இருக்கிறது. ஆகவே, இதன் மீது நீங்கள் எடுத்திருக்கிற இந்த உறுதியான நடவடிக்கை நிறைவேற்றப்பட வேண்டும்.

அதிலும், குறிப்பாக, சட்டமன்றமா, நீதிமன்றமா என்ற விவாதம் இங்கே தேவையில்லை என்ற கருத்து சிறப்பிற்குரியது என்று சொன்னாலும் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிற அந்தத் தீர்வுக்கு நமது சட்டமன்றத்தின் சார்பிலே சொல்ல வேண்டிய பதில், அதற்குரிய முயற்சிகள் சட்ட ரீதியாக அணுகப்பட்டிருக்கின்றன என்று சொன்னாலும், இங்கே எல்லோராலும் எடுக்கப்பட்டிருக்கிற முடிவுதான் சிறந்த முடிவாக இருக்கும். அதுதான் இந்தச் சட்டமன்றத்தினுடைய மரபையும், இறையாண்மையையும் பாதுகாப்பதற்குரிய முயற்சியாக இருக்குமென்ற காரணத்தினாலே அந்த முடிவுகளை நிறைவேற்றவேண்டுமென்று நான் வலியுறுத்தி அமைகிறேன். வணக்கம்.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 22ஆம் தேதியன்று இம்மாமன்றத்தினுடைய உறுப்பினர் தாமரைக்கனியின் செயல்களுக்காக, குறிப்பாக உரிமை மீறல், இந்த அவையை அவமானப்படுத்தியது மற்றும் criminal குற்றம் புரிந்தது என்ற இந்த மூன்று குற்றங்களுக்காக இந்த அவையின் ஒப்புதலோடு தாங்கள் ஒரு தீர்ப்பைக் கூறினீர்கள். அந்தத் தீர்ப்பினுடைய அடிப்படையில் அவரை 7 நாட்கள் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது. நேற்று அவருடைய சார்பாக நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனுமீது விசாரணை நடத்தி, அவர் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று ஒரு இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய கருத்து, அந்த மனு தாக்கல் செய்யப்பட்ட விதத்திலேயே தவறு இருப்பதாக நான் கருதுகிறேன். அதிலே மூன்று பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். (1) தலைமைச் செயலாளர், (2) அவைத் தலைவர், (3) அவையினுடைய செயலாளர். இந்த நிகழ்ச்சியில் அவைச் செயலாளருக்கு வேண்டுமென்றால் Notice அனுப்புவது சரியாக இருக்கலாம். ஆனால் அவைத் தலைவருக்கும், தலைமைச் செயலாளருக்கும் Notice அனுப்புவது முறைதானா என்ற கேள்வியை நான் எழுப்பக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் தனிப்பட்ட முறையிலே அந்தத் தீர்ப்பைக் கொடுக்கவில்லை. இந்த அவையின் ஒப்புதல் பெற்றுக்



கொடுத்திருக்கிறீர்கள். ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள் மன்றமே உச்சபட்ச அதிகாரம் படைத்தது. இந்த மாமன்றத்திற்குச் சட்டம் இயற்றக் கூடிய அதிகாரமும், அதேபோல நீதி வழங்கக்கூடிய அதிகாரமும் இருக்கிறது. இரண்டையும் படைத்திருக்கக் கூடிய இந்த மாமன்றம், தன்னுடைய அன்றாடப் பணிகளைச் செய்கின்றபோது நீங்கள் இந்த மாமன்றத்தினுடைய ஒப்புதலோடு அந்தத் தீர்ப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். சட்டமன்றத்திற்கு வெளியே நடந்த பிரச்சினைக்காகக்கூட இந்தச் சட்டமன்றத்திலே எந்தவிதமான விசாரணையும் இல்லாமல் தீர்ப்பு கொடுக்கப்பட்ட முன்னுதாரணங்கள் இருந்திருக்கின்றன. இதே சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய பல உறுப்பினர்கள், கல்வி அமைச்சர் உட்பட 10 சட்டமன்ற உறுப்பினர்கள் கடந்த காலத்திலே நீக்கப்பட்ட வரலாறு இருக்கிறது.

அதேபோல ஒரு நீதிமன்றத்திலே கொடுத்த தீர்ப்பைக்கூட தனக்கு வானளாவிய அதிகாரம் இருக்கிறது என்று கூறி அன்றைய அவைத் தலைவர் அந்த நீதிமன்ற உத்தரவைக்கூட ரத்து செய்த ஒரு உதாரணம்கூட இதே மன்றத்திலே இருந்ததையெல்லாம் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுக்கு ஒரு நீதிபதியினுடைய அதிகாரம் இருக்கிறது. வானளாவிய அதிகாரம் இருக்கக் கூடாது என்றாலும்கூட, அது இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும்கூட, சாதாரணமாக மக்களுக்கு வழங்க வேண்டிய நீதியினை வழங்கக்கூடிய அதிகாரம் உங்களுக்கு இருக்கிறது. கடந்த 2,3 வருடங்களுக்கு முன்பு எனக்கு ஒரு 144 தடை விதிக்கப்பட்டது. நான் அது சம்பந்தமாக உயர் நீதிமன்றத்திற்கு சென்றிருந்தேன். அப்போது நீதிபதி ஒருவரை ஒரு வழக்கிலே விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே நடந்த விவாதத்தைக் கேட்டுக்கொண்டிருக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அப்போது நீதிபதி சொன்னார்; இப்போது என்னுடைய கண் முன்னாலேயே ஒருவன் ஒருவரைக் கொலை செய்கிறான் என்றால் நான் ஒன்றும் யாரையும் கேட்டுக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் கிடையாது. நானே தீர்ப்பு வழங்க முடியும் என்று அவர் ஒரு கருத்தைச் சொன்னார். எனக்கே கைது செய்யச் சொல்ல உத்தரவு இருக்கிறது. தீர்ப்பு வழங்குவதற்கு உத்தரவு இருக்கிறது என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதேபோல, கண் முன்னாலேயே இந்தச் சட்டமன்றத்திலே நடந்த நிகழ்ச்சிகள் அத்தனையையும் கண்டு கொண்டிருந்த, கேட்டுக்கொண்டிருந்த உங்களுக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினர் தவறாக, சட்ட விதிமுறைகளுக்கு மாறாக நடக்கின்றபோது,

அதுவும் criminal குற்றம் புரிகின்றபோது நடவடிக்கை எடுப்பதற்கு, அதுவும் அவையின் ஒப்புதலோடு நடவடிக்கை எடுப்பதற்கு, உங்களுக்கு அனைத்து அதிகாரங்களும் இருக்கின்றன என்ற கருத்தை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-45*

அவையிலே இந்தச் சட்டமன்ற உறுப்பினரைப் பொறுத்தமட்டிலும், தாமரைக்கனியைப் பொறுத்தமட்டிலும் ஏதோ ஒரு புதிய, ஏதோ திடீரென்று ஒருநாள் உணர்ச்சி வசத்திலே நடந்த நிகழ்ச்சியல்ல. 10, 15 ஆண்டு காலத்தில் எத்தனை நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன உள்ளேயும், வெளியேயும்? இந்த நாட்டிலே தேர்தல் Commission ஒரு விதிமுறையை வைத்திருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றவர்கள் சட்டமன்றத்திற்கோ, நாடாளுமன்றத்திற்கோ போட்டியிட முடியாது, கூடாது என்று விதிமுறை வைத்திருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நல்ல முறையிலே நடக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பது. ஆனால், கடந்த 15 ஆண்டு காலமாக இந்தச் சட்டமன்றத்திலே எப்படிப்பட்ட நடைமுறைகளை அவர் முன்னுதாரணமாக வைத்திருக்கிறார். அவரது criminal நடவடிக்கைகள் எவ்வளவு மோசமான முன்னுதாரணங்களாக இருந்திருக்கின்றன, வெளியிலும் அவருடைய நடவடிக்கைகள் எப்படி இருந்திருக்கின்றன என்பதை நாடறியும்; இந்த மக்கள் அறிவார்கள்; இந்த மாமன்றம் அறியும்.

இங்கே எனக்கு முன்னாலே அமர்ந்திருக்கின்ற அமைச்சர் இரகுமான்கான் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினராக இருந்த பண்ருட்டியார் அவர்கள் ஏற்கெனவே தாக்கப்பட்டிருக்கிறார்கள். முன்னாள் உறுப்பினர் விசுவநாதன் தாக்கப்பட்டிருக்கிறார். ஆனால், எல்லா சமயத்திலேயும் சொல்லப்பட்டதெல்லாம், கிண்டலும் கேலியுமாக, தட்டிக்கொடுத்தோம் என்பதுதான். என்ன நடைமுறையில் இந்தச் சட்டமன்றத்திலே அவர் நடக்கிறார்? மிரட்டலாலும், உருட்டலாலுமே தான், ஒரு அதிகாரத்தைத் தன்னிச்சையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற போக்கோடு நடந்து கொள்ளக்கூடிய ஒரு criminal நடவடிக்கையைத்தான் அவர் முன்னுதாரணமாகக் கொண்டிருக்கிறார். எனவே, நீங்கள், இந்த criminal



நடவடிக்கையை அனுமதித்தால், இதைப் பேசாமல் விட்டுவிட்டால், நாளை இதேபோல் நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது என்பதுதான் என்னுடைய கேள்வி. அப்படியென்றால் யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் இந்த அவையில் நடந்து கொள்ளலாமா? முஷ்டியுள்ளவர்கள் யாரை வேண்டுமானாலும், எளியவர்களைத் தாக்கலாமா? இந்த மன்றத்தை எப்படித்தான் நடத்திச் செல்வது? எனவே, அப்படிப்பட்ட criminalகளைத் தண்டிப்பதற்கு இதுவே சரியான சந்தர்ப்பம் என்பதை நான் சுட்டிக்காட்டி—நமக்கு நீதிமன்றத்தோடு மோதல் கிடையாது, மோத வேண்டிய அவசியமும் கிடையாது. ஆனால் இந்த மாமன்றம் உங்களுக்குக் கொடுத்திருக்கிற அதிகாரம் என்பது இந்த மாமன்றத்தினுடைய அதிகாரம். எனவே, இந்த மாமன்றம் உங்களுக்குக் கொடுத்திருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி நீங்கள் என்ன தீர்ப்பு வழங்குகிறீர்களோ அந்தத் தீர்ப்பை அப்படியே அமலாக்க வேண்டுமென வலியுறுத்தி நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

***திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 22 ஆம் தேதி, பேரவையிலே ஒரு தீர்ப்பை நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். பேரவையினுடைய அந்தத் தீர்ப்பிற்கு எதிராக உயர் நீதிமன்றம் தலையிட்டு சம்பந்தப்பட்ட உறுப்பினரை விடுதலை செய்ய வேண்டுமென்று கூறியுள்ளது. பேரவையினுடைய இறையாண்மையில் உயர் நீதிமன்றம் தலையிட்டிருப்பது கண்டிக்கத்தக்கது என்று நான் கருதுகிறேன். காரணம், 22 ஆம் தேதிய பேரவையினுடைய தீர்மானம் பேரவைத் தலைவர் அவர்களுடைய தன்னிச்சையான தீர்மானம் அல்ல. உங்களுடைய தனிப்பட்ட கருத்து அல்ல. மாறாக, அன்றைக்கு இங்கே இருக்கிற ஆளும் கட்சித் தரப்பு மற்றும் எதிர்க்கட்சி என்று இருக்கிற எல்லோருடைய கருத்தையும் கேட்டு, அதன் பிறகுதான் நீங்கள் அந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறீர்கள். ஒரு சிறிய மாற்றுக் கருத்து இருந்திருந்தாலும்கூட அல்லது ஏதாவதொரு உறுப்பினருடைய எதிர்ப்பு இருந்திருந்தாலும்கூட, அப்பொழுது நீங்கள் அவையிலே தீர்மானத்தைக் கொண்டுவந்து அதன்பிறகு நிறைவேற்றி இருக்கலாம். ஆனால் அன்றைக்கு இந்தப் பேரவை முழு மனதோடு, சம்பந்தப்பட்ட உறுப்பினர் தவறு செய்திருக்கிறார்; அவையினுடைய உரிமைகளை மீறியிருக்கிறார்; அவையை நடத்துவதற்குக் குந்தகமாக இருந்திருக்கிறார் என்கின்ற ஒட்டு மொத்தக் கருத்தையும், ஏற்றுத்தான்

நீங்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறீர்கள் எனவே, அந்தத் தீர்ப்பிலே உயர் நீதிமன்றம் தலையிடுவதற்கு வழிவகை இல்லையென்றே நான் கருதுகிறேன். ஆனாலும் நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பேரவையினுடைய தலைவர் அவர்கள் ஒரு கருத்தை காலையிலேயே சொன்னார்கள். இது நீதிமன்றத்திற்கும் பேரவைக்கும் ஒரு மோதலாகப் போய் விடக்கூடாது, எனவே, நாம் நம்முடைய கருத்துகளைச் சொல்கிறபோது கொஞ்சம் நிதானமாகச் சொன்னால் நன்றாக இருக்கும் என்று அவர்கள் தன்னுடைய கருத்தைச் சொன்னார்கள். நான் அதனை உணர்கிறேன். நம்முடைய இறையாண்மை என்பது நம்மிடம் இருக்கிறது. இதிலே உயர் நீதிமன்றம் தலையிடுவது முறையல்ல. உயர் நீதிமன்றத்தினுடைய இறையாண்மையிலே நாம் தலையிடுவது முறையல்ல. எப்படி யானைக்கு நிலத்திலே அதிக பலமோ, அதேபோல முதலைக்கு நீரிலே அதிக பலம். எனவே, நம்முடைய பேரவையினுடைய இறையாண்மையை நாம் கட்டிக் காக்க வேண்டும், உயர் நீதிமன்றத்தினுடைய இறையாண்மையை அவர்கள் கட்டிக் காக்க வேண்டும். அதற்கு மாறாக உயர் நீதிமன்றம் பேரவையினுடைய இறையாண்மையிலே தலையிடுவது ஏற்கத்தக்கதல்ல என்பதனை மீண்டும் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். ஏனென்றால், இந்த ஒரு முறை அவர்கள் ஒரு நிகழ்விலே தலையிட்டு அதனை இந்தப் பேரவை ஏற்றுக்கொள்ளுமேயானால் நாளை இதேபோல வேறு ஒரு நிகழ்வு நடைபெறுகிறபோது, ஏற்கெனவே நடைபெற்ற நிகழ்விலே பேரவையே ஏற்றுக்கொண்டிருக்கிறது, எனவே நீதிமன்றம்தான் உயர்நிலை உடையது என்கிற ஒரு கருத்து நாளைக்கு வரக்கூடும். எனவே, பேரவைத் தலைவர் அவர்கள், பேரவையின் தீர்மானத்திற்கு எதிராக உயர் நீதிமன்றம் அளித்திருக்கின்ற தீர்ப்புக்கு, ஒரு கண்டனத் தீர்மானத்தை இங்கே கொண்டு வரவேண்டும் என்று நான் கருதுகிறேன். நீங்கள் அப்படிக் கொடுக்கவில்லை என்றால், அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றவில்லை என்றால் நாளைக்கு நம்முடைய பேரவையினுடைய இறையாண்மையை நாம் காப்பாற்றாமல் போய்விடுவோமோ என்ற ஒரு நிலைமை ஏற்படும் என்பதனை நான் உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



பேரவைத் தலைவர் அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் சிறந்த வழக்கறிஞராக இருந்தவர்கள். மாண்புமிகு உறுப்பினர் A.L.S. அவர்கள் கூறியதைப்போல அவருடைய குடும்பமே நீதிமன்றத்தோடு, நீதியோடு தொடர்புடைய ஒரு குடும்பம். இன்னும் சொல்லப்போனால் நீதிமன்றம்தான் அவர்களுக்குப் பிறந்த வீடு; பேரவை அவருக்கு புகுந்த வீடுதான். எனவே, பேரவைத் தலைவரைப் பொறுத்தவரை தன்னுடைய பிறந்த வீட்டிற்கு முக்கியத்துவம் அளிப்பதா, புகுந்த வீட்டிற்கு முக்கியத்துவம் அளிப்பதா என்கின்ற ஒரு சிரமத்திற்கு வராமல் நம்முடைய உரிமைகளிலே உயர் நீதிமன்றம் தலையிடுவதற்கு எந்தவகையான வழிவகையும் இல்லை எனபதனை இந்தப் பேரவை இந்த நேரத்திலே தெளிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல நீதிமன்றத்தினுடைய இறையாண்மையிலே பேரவை தலையிடுவது கிடையாது.

உதாரணமாக, 2½, 3 ஆண்டு காலமாக ஒரு ஊழல் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நிமிடம்வரை அந்த வழக்கை நடத்துவதா, வேண்டாமா, எந்த நீதிமன்றத்திலே வழக்கை நடத்துவது, யார் நீதிபதியாக இருப்பது என்பதிலே நீதிமன்றங்கள் பல்வேறு விதமான மாறுபட்ட கருத்துகளைக் கூறிவருகின்றன. ஆனால், அதற்காக சட்டப் பேரவை கூடி நீதிமன்றம் தவறு செய்திருக்கிறது, நீதிமன்றமும் முறையாகச் செயல்படவில்லை என்கின்ற தீர்மானத்தை நாம் நிறைவேற்றலாம். ஆனால், அப்படி நிறைவேற்றவில்லை. நிறைவேற்ற விரும்பவும் இல்லை. ஏனென்றால், உயர் நீதிமன்றத்தினுடைய, அவர்களுடைய இறையாண்மையிலே தலையிட இந்தப் பேரவை விரும்பவில்லை. அது அவர்களுடைய கடமை எனவே, அவர்களுடைய கடமையில் நாம் எப்படித் தலையிடவில்லையோ அதேபோல நம்முடைய இறையாண்மையிலே அவர்கள் தலையிடக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். 23ஆம் தேதிய தீர்ப்பு பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்டது. அதிலே நீதிமன்றம் எந்த மாற்றுக் கருத்தையும் சொல்ல முடியாது ஆனால், 22ஆம் தேதியைப் பொறுத்தவரை பேரவைத் தலைவர் அளித்திருக்கின்ற தீர்ப்பு பேரவையினுடைய தீர்ப்புதானேயொழிய, பேரவைத் தலைவருடைய தனிப்பட்ட தீர்ப்பு அல்ல. பேரவையிலே இருக்கிற அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு கருத்தைத்தான் அவர் சொல்லியிருக்கிறார். எனவே, அதற்கு இடையூறாக நீதிமன்றம் இருக்கக்கூடாது என்று சொல்லி பேரவையினுடைய இறையாண்மையை இந்தப் பேரவைத்

தலைவர் அவர்களும், தமிழக அரசும் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 22ஆம் தேதி சட்டமன்றம் வழங்கிய தீர்ப்பில் நீதித் துறையின் தலையீடு சம்பந்தமாக என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-55*

ஆட்சியாளர்கள் சர்வாதிகாரிகளாக மாறிவிடக்கூடாது என்பதற்காகத்தான் இறையாண்மையின் அதிகாரங்கள் மூன்றாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சட்டத் துறை, நீதித் துறை, நிர்வாகத் துறை என்று மூன்று அங்கங்களாக, மூன்றும் இந்த நாட்டின் தூண்களாகச் செயல்படுகின்ற இந்த நேரத்திலே, நாடியவர்களுக்கு மட்டும் சேவை செய்கின்ற அமைப்புதான் நீதித் துறை. ஆனால், நாடியவர்கள், நாடாதவர்கள், அனைவருக்கும் சேவை புரிகின்ற அமைப்பு சட்டத் துறையாகும். உத்தரவுகளைப் பெற்றுச் செயல்படுத்துகின்ற அமைப்பு செயல்பாட்டுத் துறையாகும். இதிலே, சட்டமன்றம் மட்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டு நடத்தப்படுவதாகும். மற்றவை அப்படியல்ல. ஏதோ பதவிக்கு வந்து விட்டோம், 35 ஆண்டுகள் நம்மை யாரும் எதுவும் செய்ய முடியாது என்ற நிலையிலே இருக்கக்கூடியதல்ல சட்டமன்றம். இதை நன்றாகக் கவனத்திற்கொள்ள வேண்டும். இதில் ஒரு துறை மற்றொரு துறையிலே தலையிடுவது என்பது ஜனநாயகத்தின் ஆரோக்கியத்திற்கு ஆபத்தான ஒன்றாகும். அது முறையும் அல்ல. ஒவ்வொரு துறையின் தலைவரும் தன் துறையின் இறையாண்மையை மட்டுமல்ல; மற்றத் துறைகளின் இறையாண்மையையும் காப்பாற்றக் கடமைப்பட்டவர்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அந்த அடிப்படையிலேதான், சிறிது காலத்திற்கு முன்பு இதே தாமரைக்கனி இந்த அவையிலே நீதிபதிகளைக் குறித்துக் குறைவாகப் பேசியபொழுது, இதே மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்கள், அப்படிப் பேசுவது முறையாகாது. இது நீதிமன்றத்தின் விசாரணையில் குறுக்கிடுவதாகும் என்று கூறி கண்டித்துத் தடுத்திருக்கின்றார்கள். அந்த வகையிலே சபாநாயகரவர்கள் இந்த மன்றத்தின்



இறையாண்மையை மட்டுமல்ல, நீதித் துறையின் இறையாண்மையையும் காப்பதற்காகத் தன்னுடைய வாதத்தை வைத்திருக்கிறார்கள். அந்த வகையிலே நீதித் துறையும் அவ்வாறுதான் செயல்பட்டிருக்க வேண்டும். மரியாதை கொடுத்து மரியாதை வாங்க வேண்டுமென்பது தமிழ்ப் பழமொழி. அந்த வகையிலே, இந்த மன்றம் என்றுமே மற்றத் துறைகளின் இறையாண்மையில் தலையிடாமல்-தலையிடாமல் மட்டுமல்ல, அந்தத் துறையின் இறையாண்மையைக் காப்பதற்காகவும்—மதிப்பாகவும், பண்பாகவும் நடந்து கொண்டிருக்கிறது. அதுபோலத்தான் இந்த நீதித் துறையும் செயல்பட்டிருக்க வேண்டும். அதை விடுத்து, 'விளக்கம் கேட்காமல்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி, இடைக்காலத் தீர்ப்புக் கூறியிருப்பது—முறையல்ல. விளங்கிய ஒன்றுக்கு விளக்கம் கேட்பது முறையல்ல. விளங்காத ஒன்றுக்கு விளக்கம் கேட்டு, விளக்கம் அளிக்க வேண்டுமென்று கூறுவதுதான் முறையாகும். ஆகவே, இது விளங்கிய ஒன்று.

அதுமட்டுமல்ல, நீதித் துறையின் தீர்ப்பு என்பது வாதி, பிரதிவாதி என்ற இருவருக்கிடையே உள்ள வாதங்களை வைத்து வழங்கப்படுவதாகும். இங்கே அப்படி அல்ல. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகள் என்றுள்ள பல்வேறு அமைப்புகளின் ஆரோக்கியமான வாதங்களை வைத்து இந்தத் தீர்ப்புகள் இங்கே வழங்கப்படுகின்றன. ஆகவே அந்த வகையிலே பார்க்கும்பொழுது சட்டமன்றத்தின் இறையாண்மையைக் காப்பது மட்டும் சபாநாயகருடைய கடமை அல்ல. நீதித் துறை தவறான வழியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அது நம்மில் குறுக்கிட்டுவிட்டது என்ற ஒரு குறை வந்துவிடக் கூடாது. அதையும் நீங்கள் சுட்டிக்காட்டி ஒன்றின் மீது ஒன்று தொடக் கூடியதாக இல்லாமல் இருக்க பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தாமரைக்கனி அவர்களின் இந்தச் சம்பவம் ஏதோ தற்செயலாகவோ, எதிர்பாராத கோபதாபங்களாலோ ஏற்பட்டது அல்ல. முன்கூட்டியே திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்ட சதி என்று நான் திட்டவட்டமாகக் கூறுகின்றேன்.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் ஒரு சாணக்கியத்தனம் என்று சொல்வார்கள். ஒரு கோடு இருக்கிறது. அந்தக் கோட்டை சின்னக் கோடாக ஆக்க வேண்டும். அதை அழிக்கக்கூடாது. அழிக்காமல் எப்படிச் சின்னது ஆக்குவது? பக்கத்தில் ஒரு பெரிய கோட்டைப் போட்டுவிட்டால் அந்தச் சின்னக்கோடு பெரிய கோட்டைப் பார்த்தவுடன் சின்னக் கோடாகத் தானாகவே மாறிவிடும். அந்த நிலைதான் இங்கே. Auditor இராஜசேகரனைத்

தாக்கிய சம்பவங்களை மக்கள் மறக்க வேண்டும். அதை மறக்க வைக்க வேண்டுமென்பதற்காக திட்டமிட்டு, பக்கத்தில் ஒரு பெரிய கோட்டைப் போடுவதுபோல் ஒரு சம்பவத்தை நிகழ்த்தி அதை மறைத்துச் செயல்படுத்தியிருக்கின்றார்கள். அந்த விளைவுதான் இது.

இதுபற்றி இன்றைய தினமணியிலே வந்த தலையங்கத்தின் சில பகுதிகளை நான் படித்துக்காட்ட விரும்புகிறேன்.

"....எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு, அவருக்கு நெருக்கமாக இருந்த ஒரே காரணத்தைக் கொண்டு அ.தி.மு.க.வில் தலைமையைக் கைப்பற்றிய ஜெயலலிதா அரசியலில் முறையாக வளர்ந்து பக்குவப்பட்டவரல்ல. திடீரென அவருக்கு வாய்த்த யோகம் அது. அ.தி.மு.க. தலைவியான பிறகு, தி.மு.க. தலைமையின் மீது பகைமையைக் காட்டுவதையே எம்.ஜி.ஆரின் வாரிசு என்பதை நிரூபிப்பதற்கான உத்தியாக ஜெயலலிதா தீர்மானித்துவிட்டார் போலும். இதன் விளைவாக தமிழக அரசியல் தரம் தாழ்ந்தது. சட்டமன்ற விவாதங்களில் தர்க்கத்துக்குப் பதில் தாக்குதலே முதலிடம் பெற்றது.

ஜெயலலிதாவின் ஐந்தாண்டு கால ஆட்சியில் சட்டப் பேரவையே 'பஜனைக்கூடமாக' மாறியது. அவைத் தலைவரே முதல்வரின் காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கி, தனது விசுவாசத்தைக் காட்டும் விபரீத கலாச்சாரம் தலைதூக்கியது. அந்தச் சட்டமன்றத்தில் ஜெயலலிதா அரசை சற்றுக் காரமாக விமர்சனம் செய்யும் எதிர் கட்சி உறுப்பினர்களைக் 'கவனிக்கும் பொறுப்பை' எந்தக் குறுக்கீடும் இல்லாமல் தாமரைக்கனி தாராளமாகச் செய்து வந்தார்.

நண்பகல் 12-00

1988-ல் அ.தி.மு.க. பிளவுபட்டபின் 'ஜெயலலிதா' அணிக்கும், ஜானகி அணிக்கும் ஏற்பட்ட பலப்பரீட்சையில் போர்க்களமாகவே சட்டப் பேரவை மாறிய அவலமும் நிகழ்ந்தது. 1996 தேர்தலுக்குப் பிறகு, சட்டசபையில் கட்டமைப்பும், சூழலும் மாறிவிட்டன. அவைத் தலைவர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களின் மேற்பார்வையில், சபையில் பழைய ஆரோக்கியச் சூழல் மீண்டது. அ.தி.மு.க. கடுகுக் கட்சியாக இப்போது சபையில் இருந்தபோதிலும், தாமரைக்கனியின் பழைய பழக்கம் மாறவில்லை. காரசாரமான விவாதம் நடந்து கொண்டிருந்தபோதே, சடாரெனப் பாய்ந்து, அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தின் முகத்தில் குத்தி, மூக்கைப் பதம் பார்த்திருக்கிறார். இதனால் ஆத்திரமடைந்த தி.மு.க.வினர் அவரையும் மற்றொரு அ.தி.மு.க.



உறுப்பினரான கருப்பசாமியையும் 'கவனித்திருக்கிறார்கள்'. இவ்வளவும் நடைபெற்ற பிறகு, அவைத் தலைவரின் ஆணைப்படி தாமரைக்கனியைக் காவல்துறை கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறது. இதையடுத்து, சட்டசபையின் பல்வேறு கட்சித் தலைமையுடன் கலந்துபேசி அவைத்தலைவர் செய்த முடிவின்படி, தாமரைக்கனிக்கு 15 நாள் சிறைத் தண்டனையைப் பேரவை வழங்கியிருக்கிறது. தண்டனை வழங்குவதில் அவைத்தலைவர் மிகுந்த பெருந்தன்மையுடன் நடந்து கொண்டிருப்பதைக் குறிப்பிட்டே தீர வேண்டும். இதை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்குச் சென்றதில், தாமரைக்கனி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். எனினும், தாமரைக்கனி தமது நடத்தையின் மூலம் தமிழர்கள் அனைவரையுமே தலைகுனியச் செய்திருக்கிறார். இதைக் கண்டுகொள்ளாத அ.தி.மு.க. தலைமை மீது மற்றும் ஒரு களங்கம் அழுத்தமாகப் பதிந்திருக்கிறது" என்று 'தினமணி' பத்திரிகை அருமையாகத் தலையங்கம் எழுதியிருக்கிறது.

இந்த நிலையில் நான் இந்த அவையில் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். சட்டமன்றத்தால் தண்டிக்கப்பட்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்ட ஒரு நபர் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராகத் தொடரமுடியுமா என்பது கேள்வி, இது ஒரு சட்டப் பிரச்சினை. ஒரு அரசு அலுவலர் இதுபோன்ற ஒரு சிறை தண்டனை பெற்றுவிட்டால் அவர் தொடர்ந்து அரசு அலுவலராகப் பணியில் தொடரமுடியாது. விதி 324 மற்றும் 326-ன் கீழ் இது குற்றம் என்று பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்த நபர், சட்டப்பேரவை உறுப்பினராகத் தொடர முடியுமா? இது தனிப்பட்ட தாமரைக்கனிக்கும், அண்ணா தி.மு.க. வுக்கும் அல்லது நமக்கும் இடையே உள்ள பிரச்சினை அல்ல, இது, சபையின் நலனைக் காக்க வேண்டிய பிரச்சினை. இதை நன்றாகச் சிந்தித்து நோக்கி, இந்தச் சபையின் எதிர்காலத்தையும் இறையாண்மையையும் காக்கக்கூடிய பொறுப்பு சபாநாயகருக்கு உள்ளது. பேரவைத் தலைவர் இந்தச் சபையின் நாயகர் மட்டுமல்ல. இந்தச் சபையின் நீதிபதியும் ஆவார். இந்தச் சபையின் பாதுகாவலரும் ஆவார். அவரது தீர்ப்பில், நீதித்துறை, மட்டுமல்ல, மற்ற துறைகளின் குறுக்கீடுகளும் இல்லாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பும் அவருக்கு உண்டு. அதேபோல மற்ற இரு துறைகளின் இறையாண்மையையும் மதிக்கும் பொறுப்பும் அவருக்கு உண்டு என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கடந்த 22 ஆம் தேதி நம்முடைய சட்டமன்றத்திலே நடந்த நிகழ்வைப் பற்றி சட்டமன்றத்திலே பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்புக்கும் நீதிமன்றத்திலே நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புக்கும் இடையே இன்று சவாலாக இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையிலே, இன்றைக்கு நாம் இதை விவாதித்துக் கொண்டிருக்கிறோம். சட்டமன்ற நிகழ்ச்சிகளில் தவறாமல் கலந்துகொள்ளவேண்டுமென்று எண்ணக்கூடியவனாக நான் இருந்தாலும்கூட, 22 ஆம் தேதி அன்று என்னுடைய துணைவியார் அவர்களின் நினைவு நாளில் கலந்துகொள்ள வேண்டியிருந்ததால், அன்றைக்கு நான் அவைக்கு வரவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். அன்றைய நிகழ்வு என்பது சட்டமன்ற வரலாற்றிலே மிகுந்த வேதனைக்கும் வருத்தத்துக்கும் உரிய ஒன்றாகும், துரதிருஷ்டவசமானதாகவும் இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். காரணம் என்னவென்று சொன்னால், இதற்கு முன்னாலே இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற சட்டமன்றங்களிலே நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றம் என்பது சற்று வேறுபட்டதாகவே இருந்து வந்திருக்கிறது. இந்த நாட்டினுடைய புனிதராகப் போற்றப்படக்கூடிய காமராஜர் அவர்களும், பிறகு பேரறிஞர் அண்ணா அவர்களும் வீற்றிருந்த அவை இது. நேர்மையின் சின்னங்களாக விளங்கிய அமரர் கக்கன் அவர்களும், அமரர் கோவிந்தசாமி போன்றவர்களும் பணியாற்றிய மன்றம் இது. அப்படிப்பட்ட தூய்மை நிறைந்த, அப்பழுக்கில்லாத இந்த மன்றத்திலே இப்படிப்பட்ட நிகழ்வு நடந்தது என்பதைப் பற்றி வேதனையாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம்; வருந்தத்தக்கது என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

அதே நேரத்தில் நம்முடைய மாமன்றம் என்பது மாண்பு நிறைந்த, மரபுகள் நிறைந்த, இறையாண்மையைக் கட்டிக்காக்கக்கூடிய ஒன்றாக இருக்கக்கூடிய வகையிலே, இந்த அவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலே, பேரவைத் தலைவர் அவர்களால் இங்கே இந்த மன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. ஆகவே, நாட்டினுடைய ஜனநாயகத்தைக் கட்டிக்காக்கக்கூடிய தூண்களாக இருக்கும் அமைப்புகள் சட்டமன்றமும், நீதிமன்றமும என்ற வகையில், சட்டமன்றத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அளித்த தீர்ப்புக்குச் சோதனை என்று சொல்லக்கூடிய அளவில், அதையும் நாம் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். நீதிமன்றம் வழங்கியிருக்கிற தீர்ப்பு எந்த வகையில் பொருத்தமானது என்று



பார்க்கவேண்டிய ஜனநாயக மரபும் நமக்கு இருக்கிறது. ஆகவே, இந்த இரண்டுக்கும் சவால் என்று சொல்லி, ஜனநாயகத்திற்குச் சோதனை என்று மக்கள் பேசக்கூடிய நிலை உருவாகிவிடக்கூடாது என்பது மிகவும் முக்கியமானது. ஒரு ரயில்வண்டி போகவேண்டுமானால், இரண்டு தண்டவாளங்கள் வேண்டும். இந்தத் தண்டவாளம் இல்லாமல் அந்தத் தண்டவாளம் இயங்கமுடியாது. அதைப்போல ஜனநாயகத்தில் சட்ட மன்றமும் நீதிமன்றமும் அளித்த தீர்ப்புகளிடையே சவால் ஏற்பட்டுள்ளது என்று சொல்லக்கூடிய வகையில் மக்கள் பேசுகின்ற சூழ்நிலை உருவாகக்கூடாது என்ற காரணத்தாலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த இரண்டையும் கருத்தில் கொண்டு ஒரு சரியான தீர்வை வழங்கவேண்டுமென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

*பிற்பகல் 12-05*

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, an untoward incident has taken place in the House on 22-3-1999. I am sorry to note that, Hon. Member Thiru R. Thamaraikani, M.L.A. of A.I.A.D.M.K. has assaulted the Hon. Minister for Agriculture, Thiru Veerapandi S. Arumugham. It is an unfortunate thing. At that time the Hon. Speaker has consulted all the Opposition party Leaders in the House and the Hon. Speaker has taken a good decision. We follow the British Parliament, i.e. the House of Commons, in England. According to them, judiciary cannot interfere with the Legislature. It is clearly mentioned in the British Constitution. Therefore, there is no need for the Court to interfere in the decision taken by the Hon. Speaker. Certain verdicts have already been given in the Courts of England.

Our House will not function properly if you allow this. I want to bring to your notice an incident that took place during the last Budget session, When a small quarrel arose between Thiru. R. Thamaraikani and Dr. K. Krishnasamy, Thiru Thamaraikani trespassed both—Thiru C. Velayuthan and myself. But we both caught hold of him. I was myself assaulted in the incident, but we were able to control Thiru Thamaraikani. We have done so only to safeguard the interest of the House and to maintain the dignity of the House. Some of our friends asked me "why have you done so? Thiru Thamaraikani has done lot of mistakes previously; you should have let him off." But we did so only to maintain the dignity of the House.

I am really very happy that our Hon. Speaker has correctly taken a decision. Thiru R. Thamaraikani deserves the punishment. The judiciary should not have interfered in this affair. They have no right according to the House of Commons. However, they have interfered and it is only a kind of encouragement to the anti-social elements in the House.

When I went to the Parliament along with a Committee, I could see only Chaos in the Parliament and the Speaker there could not control any Member. But here, I am very happy to see that our Hon. Speaker is able to control the House and he is running the House very very properly, even better than the Parliament. We must be proud to have such a Speaker. Through this House, I request the High Court also not to interfere in the affairs of the Legislature. The dignity of the House should be restored. I request that the punishment given to Thiru R. Thamaraikani should be carried out according to Law. Thank you very much, Sir.

**HON. SPEAKER**: Thiru M. Abdul Latheef.

*பிற்பகல் 12-10*

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Speaker Sir, when I rise to participate in the debate that is going on a very important constitutional issue, I rise with a greater sense of sobriety, responsibility and restraint because it is a matter which has got a far reaching implication, even though we have met such situations in different times in different legislatures including the Tamil Nadu Legislature. But every time when we take such issues for our deliberations, we must exercise greater restraint and greater sense of responsibility. What I say is our Constitution has certain basic schemes. Under that constitutional scheme, we have accepted and acknowledged three pillars of our democracy as is well known by all, the judiciary, the Legislature and the Executive.

The fourth Estate that is now accepted, as the democracy grows, is the Press. But as the Constitution has visualised, we have three important wings delineated, demarcated with exclusive separation of powers. Generally, the Constitution contemplates full and exclusive separation. But at the same time, I would like to submit to the Hon. Speaker that they are not opposed



to each other. They are not functioning in a domain which is completely free from the influence of other two domains. Each domain is influenced by other two important domains. They are complementary and supplementary to each other. For example, Legislature. It has got a separate consitutional entity, a separate comprehension and a separate sphere of its activities. But at the same time we know that without executive, the Constitutional entity, viz., the Legislature will not be a living entity. In the Constitution, inseparable part of the Legislature is Executive. Executive has profound influence upon our Legisalture also. But at the same time the Legislature controls, conditions, and guides the Executive including the Head of the Government, including the Bureaucratic machinery. They are completely conditioned by the Legislature.

The Hon. Chief Minister is an important Constitutional functionary around whom the Executive revolves. Because of the presence of the Executive only, the Legislature works. Without Executive, the Legislature has no function. Similarly whatever we enact here in this House, the full power, the constitutional responsibility and the privilege of enanctment of Law is all with the Legislature. Implementation of the same is through Executive. But at the same time, Law is interpretated by the Judiciary, whether it is about the Constitution, whether it is about any statute or whatever it may be. The Constitution has also got a spirit, a pith and substance as interpreted by the Court. Ultimately the Court is the constitutional authority which culls out the inner meaning of words and sentences that are used in various statutes. So, even though they are separated, in practice, they are dependent upon each other to accomplish a common goal of providing a general governance to the people of this country; to translate what is stated in the Constitution we give them way and they provide us guidelines. So, they are complementary-Supplementary to each other. So, we must have, what is called, mutual respect and consideration. Unless and until all these 3 wings have mutual respect and consideration towards each other a much cherished and secured sovereignty as has been pointed out by the Consitution cannot be safeguarded. Therefore, in this matter, Legislature has its own responsibility. The Judiciary has restraint, rational approach not only to the Judicial function but they must have a commitment to the social aspirations also.

பிற்பகல் 12-15

My friend, Thiru A.L. Subramanian has talked about Judicial activism. I submit, Mr. Speaker, I am afraid, I should not be misunderstood. Judicial activism is being misinterpreted by the very judiciary which is expected to ensure that ready and speedy justice is made available to the needy. Whoever seeks justice, speedy justice must be made available. It is only from this point of view judicial activism has become all the more important and relevant to this developing age. I am afraid that an analysis, correct judicial analysis has not been made.

I am responsible. As has been pointed out by my learned advocate, friend here. I am also a Court Officer and I am also responsible to safeguard the dignity of the Judiciary. So, the highest body reflects and represents the entire social, economic and judicial aspirations of the people of this country. of the people of this State as reflected by the common and collective wisdom expressed by this Legislature. This is an accepted fact. They must understand. The word 'they' do not refer to any Judiciary or Judicial Officer. Everybody should understand that in our democracy it is the only body which can truly reflect and represent the social, economic and judicial aspirations of the entire community in Tamil Nadu. Whether they are in ruling party, whether they are in opposition or whether they are politicians or otherwise it is the reflective body, representative body and the entire authority of this Legislature is exercised through you, the Hon. Speaker—Who is the Speaker? The question is answered as 'the Speaker is one, who doesn't speak'. The Speaker is the one who doesn't speak. When he speaks, it is the Law unto not only to the House. (Thumbing of desks). You do not speak. When you speak, it is the law. Any word you speak, any sentence or whatever you speak, that becomes law and law unto every member, individually and all Members collectively and also all the machineries connected with the general administration of this State. Including, I am sorry to say, subject to correction with a sense of responsibility I say, your word is a law unto judiciary also.

There are two distinct parts of your order. One part is that it was not a warrant as has been pointed out. I differ. You have announced 7 days confinement in order to meet the ends of justice and you wanted that the delinquent should not flee or go away. Therefore, you wanted the appropriate



authority to keep him under their safe custody. That is the first part of your order. The second part of your order is not your order. It is the decision of the entire House. The first part is the order of the Speaker which is also legal. I don't think it is legally weak. It is also valid and it has the same force as the intention of the House because you always represent the House, carry the authority of the House; you don't see anything which is not seen by the House; you don't hear anything which is not heard by the House; what you see is the vision of the House and what you hear is the intention of the House; you don't have any independent existence. Your existence is connected, intricately connected with the existence of the House and whatever you say cannot be challenged. If it is challenged then we have to accept that our country has ceased to be a controlled democracy. You need a controlled democracy. This House is a controlled entity. The democracy is aided by the House. Whatever you said is the decision of this House which is activised and put into operation by the Speaker. Now the Speaker's intention is challenged.

பிற்பகல் 12-20

My friends have given a lot of judicial *obiter dicta*, a lot of cases which have already been adjudicated upon, which deal not only with articles 32, 226,19(1)(A), but also Article 21 which deals with this problem. Therefore, what I say with a great sense of respect to the High Court—any respect given to the High Court is a respect given to this House—that they have not been properly apprised. We don't show any disrespect towards the Judiciary, because we are all one. The Judiciary, the legislature and the Executive all have a common goal and we are all working together as a team to further the cause of administration. As I hear, the Judges have not been properly apprised. The order for safe custody of one person who is under the authority of the Speaker should not be confused with a final decision of the House which awarded the punishment. The punishment is awarded by the entire House. It was decided in tune with democratic traditions. Mr. Speaker, I owe rich encomiums to you, because in the midst of all the confusion you have been very restrained. You thought that it should be consulted with all the leaders eventhough you have an independent power and privilege to do so. But inspite of that, keeping the traditions of democracy you have consulted all the Members and then only you have announced the collective decisions

of the House. Therefore, the first order should not be mingled with the second one.

Anna said, "சட்டம் ஒரு இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு".

I think we have not lighted that விளக்கு before that dark-room. Those who are in-charge of adjudication would have seen the light of the day and they would have come to some correct decision and the darkness would not have been there if we have lighted the விளக்கு. Therefore, I would request the Executive to see that whatever has taken place in this House, the facts and figures and the reality should be taken to the Court by their Officers and the Court must be apprised. Under any circumstances, we don't want to have any confrontation with the judiciary. With that sort of cordial relationship and complementary relationship, in order to serve the constitutional purpose, we must give them proper light.

*பிற்பகல் 12-25*

At the same time, ultimately my opinion is, you are the supreme authority; you are the fountain of justice; you are the custodian of the Constitution; you are the conscience-keeper of this House and nobody else, however high they may be, however important they may be, can interfere with the jurisdiction of your domain. So whatever action you have taken, we subscribe to and we support. It is our collective request to the Hon. Speaker to abide by what the House has decided and to abide by the Speaker's decision. We support all the actions that the Speaker has taken. Thank you very much.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 22 ஆம் தேதி இந்த சபையிலே நடந்து இருக்கிற சம்பவத்தில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரை மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி தாக்கியதன் மூலமாக, அவர் படுகாயம் அடைந்து இருக்கிறார். இது தங்களுடைய நேர் பார்வையில் நடந்து இருக்கிற சம்பவம். பேரவையிலே இருக்கிற அனைத்து உறுப்பினர்களும் இந்த நிகழ்வைப் பார்த்து இருக்கிறோம். அன்றைய தங்களுடைய தீர்ப்பும், 23 ஆம் தேதி தாங்கள் அறிவித்த தீர்ப்பும், உயர்நீதி மன்றத்தினுடைய



தீர்ப்பால் மறுக்கப்பட்டு வெளி வந்திருக்கிற செய்தியால், தவறான தீர்ப்பை இந்த அவையும் தாங்களும் வழங்கி விட்டீர்களோ என்கிற செய்தி இன்றைக்கு நாடு பூராவும் பரப்பப்பட்டு இருக்கிறது.

சட்டப் பேரவை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுக்கிறபோதே மிகக் கண்ணியமான இந்த அவையினுடைய இறையாண்மையைப் பாதுகாக்கக்கூடிய அளவில், பிரதானமான உறுப்பினர்களும், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கக்கூடிய ஒவ்வொருவரும் நடந்து கொள்ளக்கூடிய முறையைப் பற்றி நம்முடைய அரசமைப்பும், சட்டமன்ற விதிகளும் நமக்கு வழிக் காட்டுகின்றன. அதற்கு மாறாக, மாண்புமிகு தாமரைக்கனி அவர்கள் இந்த அவையிலே நடந்து இருக்கிற பல்வேறு சம்பவங்களைத் தங்களுடைய தீர்ப்பிலே சுட்டிக்காட்டி, அதற்கான தீர்ப்பை நீங்கள் வழங்கி இருப்பது என்பது மிக மிகச் சரியானது. பல்வேறு சட்ட நுணுக்கங்களை அறிந்த வழக்கறிஞர்கள் பலர் நீதிமன்றத்திலேயும் இதே சட்டப் பேரவையிலேயும் இருந்து பணிகளை ஆற்றக்கூடியவர்கள் எல்லாம் இதுபற்றி உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து இருக்கிறார்கள். ஒன்றை நான் குறிப்பிடுவது, இந்தப் பேரவையிலே நடக்கின்ற ஒரு சம்பவத்தில் ஓர் உறுப்பினர் கண்ணியக்குறைவாக நடந்து கொண்டார்; ஓர் உறுப்பினர் தன்னுடைய பேச்சுக்கு இடையூறாக இருந்தார்; இதுபோன்ற அடிதடிகளை, கலவரங்களை உருவாக்கினார்; அதற்கு தாங்கள் வழங்கி இருக்கிற தீர்ப்பு என்பதில், இந்த அவைக்கூட்டம் முடிகிற வரைக்கும் நீதிமன்றம் தலையிடக் கூடாது; அதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரமும் கிடையாது. ஆனால், இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிகிறவரை. அந்த உறுப்பினருக்கு வழங்கப்பட்டு இருக்கிற தீர்ப்பை இந்த அவைதான் மறுபரிசீலனை செய்து இருக்க வேண்டும், செய்ய வேண்டும். ஓர் அவைக்கூட்டம் நிறைவு பெற்றதற்குப் பிறகுதான் நீதிமன்றம் தலையிடுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றனவே தவிர, இந்தச் சபை நடந்து கொண்டிருக்கிறபோதே, ஓர் உறுப்பினர் மீது சுமத்தப்பட்டு இருக்கிற, வழங்கப்பட்டு இருக்கிற தீர்ப்பிலே நீதிமன்றம் தலையிடக்கூடாது என சரியாக நம்முடைய விதியிலே இருக்கிறது.

*பிற்பகல் 12-30*

நீதிமன்றத்தில் இந்த நேரத்திலே இப்படி ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதால் நீதிமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் மிகப் பெரிய போர் நடைபெறுவதைப் போல பத்திரிகைகளில் வந்திருக்கிற

செய்திகள் பூதாகாரமாக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போன்று, இந்தச் சபையினுடைய நீண்ட கால வரலாற்றை, இந்தச் சபையினுடைய இறையாண்மையைப்பற்றி—இதில் இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் போன்றவர்கள் அனுபவம் மிக்கவர்கள். அவர்கள் இந்தச் சபையிலே எதிர்க்கட்சி வரிசையிலும், ஆளுங்கட்சி வரிசையிலும் இருக்கிறபோது எவ்வளவு கண்ணியத்தோடு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பது இந்த நாட்டு மக்களுக்குத் தெரிந்து இருக்கிறது—இன்றைய தினமணி பத்திரிகையில் மிக அற்புதமாக தலையங்கத்தை எழுதியிருக்கிறார்கள். கடந்த கால வரலாற்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் தாமரைக்கனியின் தலைமையின் மீது மிகப் பெரிய குற்றச்சாட்டினை இன்றைய தினத்திலே சுமத்தியிருக்கிறார்கள். தாங்கள் இந்த சபாநாயகர் பதவிக்கு வந்த பின்னால் இந்த அவையினுடைய கண்ணியம் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பது மிக உயர்ந்த அளவுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தச் சபைக்கு இருந்த பக்குவம், மீண்டும் இந்த அவைக்கு வந்திருக்கிறது என்று சொன்னால், அது நம்முடைய சபாநாயகரால் வந்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நான் ஒரு சம்பவத்தை இன்றைய தினம் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த நிதிநிலை அறிக்கையைக் கிழித்தார் என்பதற்காக நீங்கள் தீர்ப்பு வழங்கிய போது இங்கேயிருக்கிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் நீங்கள் கொடுத்த தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாமல், இந்தச் சபை முடியும் வரையில் இந்த அவைக்கு திரு. சுந்தரம் வரக்கூடாது என்று நீங்கள் சொன்ன தீர்ப்பை இங்கே உட்கார்ந்திருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும், அவருடைய தார்மீகமான கடமை நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்காக, அவருக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒருவாரம்தான் சொன்னேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** அதைக்கூட 2, 3 நாட்கள் போதும் என்று சொன்னோம். ஜனநாயகத்தைப் பாதுகாப்பதிலே எந்த அளவுக்கு இந்த அவையிலுள்ள பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் நடந்து கொண்டார்கள் என்பதற்கு உதாரணமாக இது



அமைந்திருக்கிறது. ஆனால் அதற்கு மாறாக, அந்தக் கட்சியினுடைய தலைவி இந்தச் சட்டசபையைக் களங்கப்படுத்தியிருக்கிறார்கள். உங்களைக் களங்கப்படுத்தவில்லை. 5 ஆண்டு காலமாக இந்த அவையிலே முதலமைச்சராக இருந்தவர்கள் இந்த அவையைக் களங்கப்படுத்தியிருக்கிறார்களே என்ற வகையில், வேதனையளிக்கக்கூடிய வகையில் அவர்களுடைய வார்த்தைகள் இன்றையதினம் அமைந்திருக்கின்றன. உங்களையும் களங்கப்படுத்தியிருக்கிறார்கள்.

நேற்று ஓர் உன்னதமான தீர்ப்பை வழங்கினீர்கள். மாண்புமிகு திருநாவுக்கரசு போன்றவர்கள் அவர் மீது இந்த அவையிலே ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தபோது, இந்த அவையிலே தகாத முறையில் நடந்துகொண்ட உறுப்பினர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாறாக, முன்னாள் முதலமைச்சர் மீது உரிமைமீறல் கொண்டு வருவது சரியல்ல; இருந்தாலும் உங்கள் உணர்வுகளை மதிக்கிறேன் என்று எவ்வளவு பெருந்தன்மையோடு இந்த அவையினுடைய கண்ணியத்தை இந்த நாடு உணர வேண்டுமென்பதற்காக, மக்கள் உணர வேண்டுமென்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தீர்ப்பினை வழங்கினீர்கள்.

இந்த அவை வழங்கிய தீர்ப்பினை மறுபரிசீலனை செய்வதற்கு இந்த அவைக்கும், அவையினுடைய உறுப்பினர்களுக்கும் தான் அதிகாரம் இருக்கிறது. எனவே, அதுவரையிலும் உயர்நீதிமன்றம் பொறுத்திருக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கூறிக் கொள்கிறேன். உயர்நீதிமன்றம் மிக அவசர கோலத்தில் அள்ளித் தெளித்திருக்கிறது என்று சொல்லி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் போன்ற சட்டம் படிக்காதவர்களுக்கெல்லாம் இன்று நம்முடைய சட்டமன்றத்திலேயுள்ள நல்ல வழக்கறிஞர்கள் அருமையான பல விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் மிக நிதானத்தோடு, நல்ல முறையிலே அவையிலே நடந்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் தீர்ப்பையும்கூட மிக நேர்மையான முறையிலே அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற ஒரே பிரச்சினை என்னவென்று சொன்னால் நீதிமன்றமும்,

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1999 மார்ச் 24

சட்டமன்றமும் மோதக்கூடிய சூழ்நிலை வந்துவிடுமோ என்று வெளியிலே ஒரு பரபரப்பான சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

*பிற்பகல் 12-35*

The Hindu, Indian Express மற்றும் தினமணி போன்ற பெரிய தினப் பத்திரிகைகளிலெல்லாம் நம்முடைய சபாநாயகருடைய தீர்ப்பை மிக நல்ல முறையில் வரவேற்று, அருமையான கட்டுரைகளெல்லாம் எழுதியிருக்கிறார்கள். இந்த இரண்டு அவைகளும், இரண்டு பெரிய மன்றங்களும் மோதிக்கொள்ளாத ஒரு சூழ்நிலையை உருவாக்குவது நம்முடைய கடமை. அதிலும் குறிப்பாக, இந்த மன்றத்தினுடைய இறையாண்மையைக் காப்பாற்றுவதில் நம்முடைய முதல்வர் அவர்கள் 40 ஆண்டுகால அனுபவம் படைத்தவர். அதேபோல பேரவைத் தலைவர் அவர்கள் மிக நீண்ட வழக்கறிஞர் அனுபவம் பெற்றவர்கள். ஆகவே, இவர்கள் இருவரும் நம்முடைய உயர் நீதிமன்ற நீதிபதி, குறிப்பாக, தலைமை நீதிபதி அவர்களோடு கலந்து பேசி, இந்தச் சூழ்நிலையில் ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவது அவர்களுடைய பொறுப்பு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய பெருந்தலைவர் காமராசர் அவர்கள் இந்த நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, அப்பொழுது இருந்த தலைமை நீதிபதி இராஜமன்னார் அவர்களுக்கும், நம்முடைய சட்டமன்றத்தினுடைய சபாநாயகர் கிருஷ்ணராவ் அவர்களுக்கும் பெரிய, இதுபோன்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்ட நேரத்தில் முதலமைச்சர் தலையிட்டு இருவரையும் கலந்து பேச வைத்து, ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள் என்ற வரலாறு இருக்கிறது. அந்தவொரு நல்ல சூழ்நிலையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்துவார்கள் என்ற உறுதியோடு, நம்பிக்கையோடு, இந்தப் பிரச்சினையில் இன்று ஒரு நல்ல சந்தோஷமான செய்தி என்னவென்று சொன்னால், நம்முடைய சட்டமன்றத்திற்கு எவ்வளவு பெரிய பொறுப்பு இருக்கிறது. மரியாதை இருக்கிறது என்பதை இன்று நாம் எல்லாம் தெரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு விவாதம் மிகச் சிறப்பாக நடந்தது, ஆகவே, நம்முடைய உயர் நீதிமன்றத்தினுடைய இறையாண்மையிலேயும், நம்முடைய சட்டமன்றத்தினுடைய இறையாண்மையிலேயும், யாரும் தலையிடாதவாறு இரண்டு பேரையும் இணைத்து வைக்கிற ஒரு பெரும் பொறுப்பு முதல்வர் அவர்களுக்கு உண்டு என்பதைத் தெரிவித்து அவர்கள் இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பார்கள் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



1999 மார்ச் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர்.

* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்தில், சட்டமன்றத்தினுடைய நெறிமுறைகளைக் காப்பாற்றவும், சட்டமன்றம் தொடர்ந்து செயல்படவும், சட்டமன்றப் பணிகள் முடங்காமல் இருப்பதற்காகவும் பல விதிமுறைகளை நாம் ஏற்படுத்தி, சட்டமன்றத் தலைவர் மூலமாக அவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக இயங்கிக் கொண்டிருக்கிறோம்.

சட்டமன்றம் அதனுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு முழு உரிமை படைத்த அமைப்பு என்பதுதான் இறையாண்மை-Sovereignty- என்ற சொல் மூலமாக நாம் பெற்றிருப்பது. சட்டமன்றத்தினுடைய கடமைகளுக்கு அப்பாற்பட்டு சட்டமன்றத்தினுடைய உரிமைகளை பாதிப்பதாக நாம் கருதுகிற அந்தக் காரணம், சட்டமன்றத்திற்கு வெளியே உள்ளவர்களால் எழுப்பப்படுவதாக இருக்குமானால், அப்பொழுது அது சட்டமன்ற உரிமைகளை பாதிப்பதா, அல்லவா என்பதைச் சொல்வதற்கு நமக்கு உரிமை இருப்பதைப் போல, வெளியே உள்ள நீதிமன்றங்களுக்குக்கூட சில உரிமைகள் ஏற்பட்டுவிடுகின்றன. ஆனால் சட்டமன்றத்திற்குள்ளேயே நடைபெறக்கூடிய எந்தக் காரியமாக இருந்தாலும், எந்தச் செயலாக இருந்தாலும், எப்படிப்பட்ட நடைமுறையில் அந்த நிலையில் சட்டமன்றத்தைத் தொடர்ந்து நடத்துவது என்பதைப்பற்றி உடனுக்குடன் முடிவு எடுக்கக் கூடிய அந்தப் பெரிய பொறுப்பு, இன்னும் சொல்லப்போனால், இந்தச் சட்டமன்றத்தினுடைய உரிமைகளைப் பாதுகாக்கிற ஒரு பெரிய பொறுப்பு சபைத் தலைவரான தங்களுக்குத்தான் இருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் மிகத் திட்டவட்டமாகத் தெரிவித்ததைப் போல இந்தச் சட்டமன்றத்தினுடைய தலைவர், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், சட்டமன்ற உறுப்பினர்களுடைய முழு நம்பிக்கையைப் பெற்ற ஒரு தலைவர், நம்பிக்கையின்மைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் தவிர, மற்ற எல்லா நிலைகளிலும் முழு நம்பிக்கைக்குரிய தலைவர், அவர் மேற்கொண்டு செய்கிற அத்தனை செயல்களும் சட்டமன்றத்தினுடைய முழு உடன்பாடு உடைய செயல்தான் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்றத்திலேயிருந்து எவரையும் வெளியே அனுப்புகிற அதிகாரம் தங்களுக்கு இருக்கிறது. நியாயமான முறையில் நடந்துகொள்ளவில்லை என்று சொன்னால், சட்டமன்றத்திலிருந்து ஓர் உறுப்பினரை வெளியே அனுப்புகிற அதிகாரம், சட்டமன்றத்

தலைவருக்கு இருப்பதைப்போல, நீக்கி வைக்கிற அதிகாரத்தைக்கூட சட்டமன்றத் தலைவர் நிறைவேற்றுவதற்கான அந்த வாய்ப்பு சட்டமன்றத்தின் மூலமாக அவருக்குக் கிடைத்திருக்கிற நிலையில், சட்டமன்றத்தின் உள்ளே உறுப்பினர் தவறாக நடந்ததற்காக எடுக்கப்படுகிற எந்த நடவடிக்கையும், சட்டமன்றத்திற்குள்ளே நடந்த நிகழ்ச்சிக்காக எடுக்கப்படுகிற எந்த நடவடிக்கையும் சட்டமன்றத்திற்கு வெளியே கேள்விக்குரியதாக, வினாவிற்குரியதாக அமைய முடியாது. எனவே, நீதிமன்றத்தினுடைய தலையீடு என்பது, சட்டமன்றத்திற்கு உள்ளே நடைபெற்ற ஒரு காரியத்திற்காக அமைகிறபோது, அது உள்ளபடியே நீதிமன்றத்திற்கு இருக்கிற பெரும் தகுதியை, சட்டமன்றத்தினுடைய தகுதியோடு முரண்பாடாகச் செயல்படுத்துகிற ஒரு காரியமாக அமைந்துவிடுகிறது. அவர்களுக்கு இப்படி ஒரு நோக்கம் இருந்தது என்று நான் கருதாவிட்டாலும்கூட, நீதிமன்றத்திலே வெளியிடப்பட்ட ஆணை சட்டமன்றத்தினுடைய உரிமைக்குக் குறுக்கீடாக அமைகிறது என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

பிற்பகல் *12-40*

கடந்த 22 ஆம் தேதியன்று நம்முடைய சபையிலே நடைபெற்ற நிகழ்ச்சிக்காக ஒட்டுமொத்தமான உணர்வை அடிப்படையாக வைத்து தாங்கள் எடுத்த நடவடிக்கை, சட்டமன்றத் தீர்மானத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல என்று யாரேனும் சொல்வார்களேயானால் அது தவறு. சட்டமன்றத்தினுடைய ஒட்டுமொத்தக் கருத்தை சபைத் தலைவர் தானே உணர்ந்து செயல்படுத்துவதற்கு அதிகாரம் உடையவர்கள். சட்டமன்றத்திலே அதற்கு மாறுபட்ட கருத்து இல்லை.

இன்னும் ஒன்று, அப்படி நிறைவேற்றப்பட்ட அப்படிச் செயல்படுத்தப்பட்ட அந்த ஆணை, இதே சட்டமன்றத்தில் அந்த ஆணைக்குப் பின்னால் மறுநாள் நிறைவேற்றப்பட்ட தண்டனைக்கு உரிய அந்தத் தீர்மானத்தின் மூலமாகத் தங்களுடைய செயல் அத்தனையும் இந்தச் சட்டமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. சட்டமன்றம் அதற்கு மாறுபாடாக இல்லை. சட்டமன்றத்தினுடைய ஒட்டுமொத்த உணர்வைத்தான் சபாநாயகராகிய தாங்கள் நிறைவேற்றியிருக்கிறீர்கள். எனவே, இது சபாநாயகரா, சட்டமன்றமா என்று பிரித்துப் பார்ப்பதற்கு உரியதல்ல என்பது என்னுடைய கருத்தாகும்.



மற்றும் ஒன்று. சட்டசபையே இயங்காத காலத்திலும் சபாநாயகர் இயங்குகிறார். Sessions இல்லாதபோதும் சபாநாயகர் இயங்குகிறார். சட்டசபை கலைக்கப்பட்ட காலத்திலேயும், மறுபடியும் சட்டசபைக்கான தேர்தல் நடைபெற்று உறுப்பினர்கள் எல்லாம் புதிதாக வருகின்ற வரையில் சபாநாயகர் அவருடைய பொறுப்பில் நீடிக்கிறார். எதற்காக என்று சொன்னால், ஜனநாயகம் எந்தக் காலத்திலும் இயங்காமல் நின்றுவிட்டது என்ற நிலைமை ஏற்படக்கூடாது என்பதற்காக, எப்போதுமே, சபாநாயகர் மறுபடியும் இன்னொரு சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுகின்றவரையில் தொடர்ந்து சபாநாயகராக இருக்கிறார். இந்த உரிமை அரசமைப்புச் சட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, சட்டமன்றத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்காக சட்டமன்றத்தினுடைய நிரந்தரமான பாதுகாவலரான சபாநாயகர் எடுத்திருக்கின்ற ஒரு நடவடிக்கையை எந்த நீதிமன்றமும் கேட்கமுடியாது என்பதுதான் அரசமைப்புச் சட்டம் மூலமாக, நீதிமன்றங்களிலே ஏற்கெனவே வந்த வழக்குகளின் மூலமாக நாம் அறிந்திருக்கின்ற உண்மையாகும்.

மற்றும் ஒன்று. ஒரு சட்டமன்றத்தை தொடர்ந்து நடக்கச் செய்வதற்கு, சபாநாயகர் சட்டமன்றத்தைப் பாதுகாப்பதற்கு, தொடர்ந்து இயங்கச் செய்வதே ஒரு பாதுகாப்பு. சில இடங்களில், நாடாளுமன்றத்தில், சட்டமன்றங்களில் அவை இயங்க முடியாத நிலைமை அவ்வப்போது ஏற்பட்டு ஒவ்வொரு நாளும் ஒத்திவைக்கப்படுகின்ற நிலைமை ஏற்படுவதை நாம் ஏடுகள் மூலமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இங்கே இந்தச் சட்டமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்திலிருந்து—இந்தச் சட்டமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 ஆண்டு காலத்தில்—மிகவும் கண்ணியமான முறையில் எதிர்க்கட்சிகளுக்கு மிக முக்கியமான இடம் வழங்கி, ஏறத்தாழ 10 கட்சிகளைச் சார்ந்தவர்களும் ஒவ்வொரு விவாதத்திலும் பங்கு கொள்ளக்கூடிய வாய்ப்பளித்து, ஜனநாயக முறைக்கு ஒரு முன்னுதாரணமாக இயங்கி வருகிறது என்பதை நாடு முழுவதும் அறியும். அதிலும் குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சிகளினுடைய கருத்துக்கு எந்த அளவுக்கு அதிக இடம் தருகின்றோமோ அதைப் பொறுத்துத்தான் ஜனநாயகத்தில் நம்முடைய பங்கை முறையாகச் செய்ய முடியும் என்று உணர்ந்து செயல்படுத்துகின்ற ஒரு முறையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் ஆளும்கட்சியினரைவிட எதிர்க்கட்சியினருக்கு அதிகம் பேசுகின்ற வாய்ப்புக் கிடைக்கிறது. இது சட்டமன்றம் மிக அமைதியான, சுமுகமான ஒரு முறையில் நடக்கிறது என்ற எண்ணத்தை நாட்டிலே

ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் இந்தக் குறிப்பிட்ட குற்றத்தைச் செய்பவர்கள், அவர்களைச் சார்ந்தவர்கள், சட்டமன்றம் முறையாக இயங்கவில்லை, அங்கே கலவரம் நடைபெற்றது, வம்பு நடைபெற்றது. இன்னும் சொல்லப்போனால் இன்றைக்கு நடக்காமல் போய்விட்டது என்று சொல்வதற்கு உண்டான பல முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். சட்டமன்றத்தில் தங்களுடைய உணர்ச்சியை வெளிப்படுத்துவது கூட அல்ல. தங்களுடைய கருத்துகளை வெளிப்படுத்துவது கூட அல்ல, சட்டமன்றத்தில் குழப்பம் நடைபெற்றது; சட்டமன்றத்தில் நான்கு பேர் வெளியேற்றப்பட்டார்கள்; என்று இப்படிப்பட்ட செய்திகள் வருமானால் சட்டமன்றத்தினுடைய கண்ணியத்தைக் குறைப்பதன் மூலமாக, சட்டத்தை மீறி அதற்காகவே நடக்கலாம் என்ற எண்ணத்தோடு தொடர்ந்து செயல்பட்டு வந்திருக்கிறார்கள்.

உறுப்பினர் சுந்தரம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதைப் பற்றிக்கூட உறுப்பினர் தாமரைக்கனி தொடர்ந்து சபாநாயகரிடத்திலே, ஒரு முறை அல்ல, பல முறை—நடவடிக்கை எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுவிட்டது என்றபோதிலும்—வலியுறுத்தினார். நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரம் சபாநாயகருக்கு இருக்கிறது. திரும்ப அதுபற்றி மறுபரிசீலனை செய்வதாக இருந்தால் என்னுடைய அறையில் வந்து என்னிடத்தில் தெரிவிக்க வேண்டுமென்று சபாநாயகர் தெரிவித்திருந்தார். அதை மீறி, தொடர்ந்து நான்கு முறை, ஐந்து முறை எழுந்து எழுந்து, இந்த அவையில் தான் இருப்பதைக் காட்டிக் கொள்ள, இந்த அவையில் 'நாங்கள் நினைத்ததைச் செய்வோம்' என்று சவால் விடுவதைப்போல, தொடர்ந்து எழுந்து ஒரு கலவரச் சூழலை உருவாக்க அன்றைக்கே தாமரைக்கனி அவர்கள் முயற்சித்தார்கள்.

பிற்பகல் 12-45

அப்படி ஒரு நிலையில், எதிரிலே அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் இருக்கிறபோது, அவர்கள் சபாநாயகரை நோக்கி, "நீங்கள் என்ன சொல்வது; நான் என்ன கட்டுப்படுவது" என்றார். அப்படிச் சொன்னபோதுதான் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம், "அப்படியெல்லாம் பேசுவது முறையா. சட்டமன்றத்தில்" என்று கேட்டார். "அப்படியெல்லாம் பேசலாமா, முறைதானா" என்று கேட்டவுடன் அவர் தாக்கினார். அவர் கையிலே போட்டிருக்கக்கூடிய மோதிரத்தை, சபாநாயகருடைய அறையில், அவர் நம்மோடு வந்து அமர்கின்ற சில நேரங்களில் நான் பார்த்து, அவரையே



கேட்டிருக்கிறேன். இவ்வளவு பெரிய கேடயம் மாதிரி மோதிரம் போட்டிருக்கிறீர்களே என்று வேடிக்கையாக, நட்பு முறையிலே நான் கேட்டிருக்கிறேன். அந்த மோதிரம், அவர் விரலை மடக்கினால், மடக்கிய விரலுக்கு முன்னால் அரை அங்குலம் நீட்டிக் கொண்டிருக்கும், பழங்காலத்தில் குத்துச்சண்டை வீரர்கள் குத்துக் கட்டை என்று ஒன்றைக் கையிலே போட்டிருப்பார்கள். அதிலே சில கூர்மையான பகுதிகள் இருக்கும். அந்தக் குத்துக் கட்டையைப் போட்டுக்கொண்டு இடித்தால் எவனும் தாங்க மாட்டான். அப்படிப்பட்ட அந்த மோதிரத்தினுடைய வெட்டுப்பகுதி அவருடைய மூக்கைக் குத்தி, உள்மூக்கை உடைத்திருக்கிறது. அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தாக்கப்பட்டது, ஏதோ அவசரத்தில் கையால் அறைந்தது அல்லது தட்டியது என்பது போன்ற நிகழ்ச்சி அல்ல. கையில் மோதிரம் இருக்கிறதே, அந்த மோதிரத்தால் இடித்தால் எப்படிப்பட்ட காயத்தை உண்டாக்க முடியும் என்ற மனப்பான்மை அவருடைய இரத்தத்திலே ஊறியிருக்கிற காரணத்தால், அந்த விரலாலே இடித்த காரணத்தால் அவ்வளவு பெரிய பாதிப்பு அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களுக்கு ஏற்பட்டது. அரை அங்குலம் தள்ளி அந்தத் தாக்குதல் நடைபெற்றிருக்குமானால், ஒரு கண்ணையே அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் இழந்திருப்பார். அந்த நிகழ்ச்சியை நான் எந்தக் கண்ணோட்டத்திலே தெரிவிக்கிறேன் என்றால், ஆத்திரத்திலே செய்யப்படுகிற காரியம்: அவசரத்திலே கோபத்திலே செய்துவிட்ட காரியம் என்பது கூட வேறு. இந்தச் சட்டமன்றம் ஒழுங்காக, நிம்மதியாக, அமைதியாக நடைபெறுகிறது என்ற பெயருக்குக் களங்கம் உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்தில், நடைபெற்ற காரியம் அது. ஆகவே, இந்தச் சட்டமன்றம் அப்படி ஒரு நிகழ்ச்சிக்கு ஆளாகிறபோது, இந்தச் சட்டமன்றத்தில் உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்ற இடத்தில் சபாநாயகர் இருக்கிறார். இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிக்கு யாரிடத்திலேயும் போய் ஆலோசனை கேட்டுவிட்டு அதற்குப்பின்பு தீர்மானிக்கின்ற நிலை சபாநாயகருக்கு இல்லை. சபாநாயகருக்கு வானளாவிய அதிகாரம் கிடையாது என்பது உண்மை. ஆனால், இந்தச் சட்டமன்ற வளாகத்தினுடைய கூரைக்குள் முழு அதிகாரமும் சபாநாயகருக்குத்தான். வெளி உலகத்திலே அதிகாரம் கிடையாது என்று சொல்லலாமே தவிர, இந்தச் சபையை அவர் திட்டமிட்டு முறையாக நடத்தாவிட்டால், சபை நடைபெறாது; ஜனநாயகம் மெல்ல மடிந்து போகும். எனவே, அந்த ஜனநாயகத்தைப் பாதுகாக்க முழுக் கடமையைச் செய்பவர் என்ற முறையிலேதான் சபாநாயகருடைய செயலுக்கு வேறு யாரும் குறுக்கீடாக இருக்க முடியாது; இருக்கக்கூடாது.

மற்றும் ஒன்று. இதே சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் 1989 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், அன்றைக்கு முதலமைச்சராக, நிதியமைச்சராக இருந்து, நிதிநிலை அறிக்கையைப் படிக்க எழுந்திருக்கிறார். அவர் எப்பொழுதும், அவராக மற்றவரிடத்திலே மாறுபட்ட கருத்தை உருவாக்கமாட்டார். அதுவும், நிதிநிலை அறிக்கை படிக்கிற நாள். நிதிநிலை அறிக்கையைப் படிக்கிற போது, யாரும் எழுந்திருந்து குறுக்கிடுவது என்பது முறையல்ல என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபு. காமராஜர் காலத்திலேயிருந்து, 1957-லேயிருந்து மாறிமாறி சட்டமன்றத்திலேயும், மேலவையிலேயும், நாடாளுமன்றத்திலேயும் நான் இருந்திருக்கிறேன். நிதிநிலை அறிக்கை படிக்கப்படுவது சட்டமன்றம் முழுவதற்குமானது. ஒரு ஆளுங்கட்சிக்காக மட்டும் படிக்கப்படுவது அல்ல. அதைப் பற்றிய கருத்தை—எப்படிப்பட்ட கருத்தையும்—யாரும் தெரிவிக்கலாம். ஆனால், அதைப் படிப்பதற்கு அனுமதிக்க வேண்டும். படிக்க எழுந்திருக்கிறார் முதலமைச்சர். முதலமைச்சர் ஒன்றும் அரசியலில் திடீரென்று புகுந்து, எப்படியோ பதவியைப் பிடித்துக்கொண்டவர் அல்ல. பதவிக்காக ஓடி வந்தவர் அல்ல. இன்னும் சொல்லப்போனால், பதவிக்காக யார் பின்னாலும் சுற்றியவர் அல்ல. அவருக்கு இருக்கிற அவருடைய சொந்தத் தகுதியினால்தான் இந்தப் பதவியிலே அவர் இருக்கிறார். எனவே, அப்படிப்பட்ட தகுதியுள்ள ஒரு முதலமைச்சரைப் பார்த்து, "நீ இந்த அறிக்கையைப் படிக்காதே" என்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அம்மையார் சொல்கிறார். "படிக்காதே" என்கிறார். "படிக்க விடாதே" என்கிறார். நான் கலைஞருக்குப் பக்கத்திலேதான் அன்றைக்கும் அமர்ந்திருந்தேன். "படிக்க விடாதே" என்கிறார். நான்கு பேர் முன்னாலே வருகிறார்கள். வருகிறவர்கள், அவர் படிப்பதற்கு இருக்கிற அந்தச் சிறு மேடையிலே வைத்திருக்கிற புத்தகத்தைப் பிடித்து இழுக்கிறார்கள். கலைஞர் அவர்கள் அந்தப் புத்தகத்தை விடாமல், படிப்பதற்குத் தொடங்குவதற்காக இழுத்து, படிக்க ஆரம்பிக்கிறார். வேகமாக இழுப்பவர்கள், இழுத்த காரணத்தால், அவர் திரும்ப இழுத்த காரணத்தால் கையால் அவருடைய முகத்திலே இடித்து கண்ணாடி கீழே விழுந்தது. அவருடைய முகத்திலே கண்ணாடி இருந்த இடத்தில் தாக்கப்பட்டு கண்ணாடி உராய்ந்து கீழே விழுந்து, ஒரு முதலமைச்சர் நிதிநிலை அறிக்கையைப் படிப்பதற்கு முற்படுகிறபோது அவர் எந்த மாறுபாட்டையும் எழுப்பாத நிலையில் இன்னும் சொல்லப்பட்ட வார்த்தை "You criminal don't read the Budget" என்று அந்த அம்மையார் அன்றையதினம் சொன்னார். அதைக் கேட்டுக்கொண்டுதான் நாங்கள் பொறுமை காத்தோம்.



அப்போது ஏற்பட்ட நிகழ்ச்சியில் இன்னொரு பக்கம் மாண்புமிகு மூப்பனார் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். இன்னொரு பக்கம் குமரி அனந்தன் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சியை நடத்துவதற்கு எவ்வளவு துணிச்சல் வேண்டும் என்று நீங்கள் கருதிப் பார்க்க வேண்டும். அந்தத் துணிச்சலுக்குக் காரணம் சட்டத்தை மீறி இந்த நாட்டில் அரசியல் நடத்தலாம் என்று ஒரு கூட்டம் கருதிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

சட்டம் தேவையில்லை, சட்ட மன்றம் தேவையில்லை, நீதி மன்றம் தேவையில்லை, யாரும் எங்களை எதுவும் செய்யமுடியாது என்று காட்டவேண்டும் என்று கருதுகிறார்கள். இந்த நாட்டு மக்களுக்கு அது ஓர் அறைகூவல்; ஜனநாயகத்திற்கு ஓர் அறைகூவல், இன்னும் சொல்லப் போனால் மனிதப் பண்பை, மானிட நேயத்தைக் காப்பாற்றுகிறவர்களுக்கு எல்லாம் ஓர் அறைகூவல்; கொள்கை உள்ளவர்களுக்கெல்லாம் ஓர் அறைகூவல்—நான் இன்னொரு சொல்லைச் சொல்ல விரும்புகின்றேன்—மானம் மரியாதையைக் கருதுகிறவர்களுக்கு எல்லாம் அறைகூவல். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கால அதனுடைய தொடர்ச்சி இந்தச் சட்டமன்றத்திலேயே. திரு. பரிதிக்கு ஏற்பட்ட நிலைமைபோல, திரு. ஞானசேகரன் அவர்களுக்கு ஏற்பட்ட நிலைமைபோல, வேறு பல உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட நிலைமைபோல, இன்றைக்கும் தொடர்ந்து ஏதாவது செய்வதில் அவர்கள் தீவிரமான உணர்வு கொண்டு எதையாவது செய்து தீர வேண்டும், தண்டனையோ, சட்டத்தின்படி ஒரு நடவடிக்கையோ தங்கள் மீது எடுக்கப்படுவதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று திட்டமிட்டுச் செய்கிற காரியத்தில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட நிலையில் சபாநாயகர் உடனுக்குடன் பரிகாரம் காண வேண்டியவர். சபையைத் தொடர்ந்து நடத்த வேண்டும். அது அவருடைய பொறுப்பு. ஆகவே, அவர் எடுத்த எந்த நடவடிக்கையையும் எந்த நீதிமன்றத்திலும் கேட்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) குறுக்கிடுவது முறையல்ல.

இன்னொரு வகையிலே சொல்லப்போனால் 234 உறுப்பினர்கள் சம உரிமையுள்ளவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், மக்களுக்குப் பதில் சொல்கிறவர்கள், அவரவர்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கான இடமாகவும் இது இருக்கிறது. அவ்வளவு உணர்ச்சிகளுக்கிடையில் ஒரு சபைத் தலைவர், அவைத் தலைவர்

அந்த அவையை நடத்திச் செல்கிறபோது சில முடிவுகளை எடுத்துத்தான் ஆக வேண்டும். நீதிமன்றமாவது Cool head-ஆக இருந்து எதைப் பற்றியும் கவலைப்படாமல் நிம்மதியாக இருந்து பிரச்சினையை ஆராய்ந்து முடிவெடுக்கலாம். இங்கே சபாநாயகர் அவருடைய முன்னறிவு காரணமாக உடனுக்குடன் தீர்ப்பு வழங்க வேண்டியவர். எனவே, அவர் வழங்கிய அத்தனை தீர்ப்பும், முதல் நாள் எடுத்த அத்தனை நடவடிக்கையும் இந்தச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற காரணத்தால் அதுகுறித்து நீதிமன்றம் தலையிட முடியாது என்ற உண்மையை மட்டும் நான் இங்கே தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் காலையிலிருந்து இதுவரையில் எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களும், சட்டம் பயின்ற, சட்டம் தெரிந்த மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இறுதியாக எனக்கு முன்னால் பேசிய அவை முன்னவர் பேராசிரியர் அவர்களும், அவருக்கு முன்பாக இங்கே உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களும் வெளியிட்டுள்ள அந்தக் கருத்துகளோடு என்னுடைய கருத்துகளையும் நான் இணைத்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். முதலில் இன்றையதினம் இந்த அவையிலே உங்களைக் காணும்போது உங்களுடைய தோற்றத்தைப் பார்க்கும்போது நான் பல்வேறு உணர்வுகளுக்கு ஆட்படுகிறேன். என்றைக்கும் புன்னகை தவழுகின்ற முகத்தோடு, எந்தக் கடுமையான பிரச்சினைகள் வந்தாலும் அதை இலகுவாக எதிர்கொள்கின்ற திறத்தோடு அவையை நடத்தி வருகிற தாங்கள். - தாங்கள் அப்படிக் கருதுகின்றீர்களோ இல்லையோ நான் கருதுகிறேன்—இன்றைக்கு ஒரு சிக்கலான நிலையில் அமர்ந்திருக்கிறீர்களோ என்று கருதுகிறேன்.

எப்போதுமே அதிகமாக யாருக்குச் செல்லம் கொடுக்கிறோமோ, அவர்களால் ஒரு தொல்லை வருகிறபோது, அளவுக்கு மீறிய துன்பம் நம்முடைய நெஞ்சைத் துளைத்ததுண்டு. என்னுடைய அனுபவத்தைச் சொல்கிறேன். தங்களுடைய அனுபவமும் இந்த அவையைப் பொறுத்த அளவிலே சரியாக இருக்குமென்றே நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இன்றைக்குத் தங்களுடைய உயர்வை எடுத்துச்





சொல்லி, தங்களுடைய மேன்மையைப் புகழ்ந்து, தங்களுடைய சொல்தான் சட்டம் என்கிற அளவுக்குப் பாராட்டிப் பேசிய பல உறுப்பினர்களுக்கு, கட்சித் தலைவர்களுக்குக் கிடைக்காத சலுகையும், உரிமையும், யாருக்குத் தங்களால் கிடைத்ததோ, அவரால் இன்றையதினம் இந்த அவையில், நாட்டு மக்களுக்குத் தேவையான பல கருத்துகளை எடுத்துக்கூறக்கூடிய நிகழ்வு நடைபெறாமல், அவரைப் பற்றிய கருத்துகளை எடுத்துக்கூறக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதை நான் எண்ணிப் பார்த்து வருத்தப்படுகிறேன்.

*பிற்பகல் 12-55*

அவையினுடைய ஒவ்வொரு கணமும் விலையுயர்ந்தது. மக்களுடைய வரிப் பணம் செலவழிக்கப்பட்டு, இந்த அவையினுடைய ஒவ்வொரு கணமும் நகர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால், இன்றைக்குக் காலை கேள்வி நேரம் முடிந்து, 10-1/2 மணி முதல் இதுவரையில் அந்த மக்களுக்காக, அவர்களுடைய நன்மைகளுக்காக, அவர்களுடைய முன்னேற்றங்களுக்காக வடித்தெடுக்கப்பட்டு இந்த அவையின் முன்னே வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை, நிதிநிலை அறிக்கையைப் பற்றிய கருத்துகளை ஆதரித்தோ, எதிர்த்தோ அல்லது அரிய யோசனைகளைக் கூறியோ வெளிப்பட்டிருக்க வேண்டிய கருத்துகளைப் பெற முடியாத நாளாக இந்த நாள் ஆகிவிட்டது. ஆனாலும், இங்கு நாம் எல்லாம் வந்து அமர்வதற்குக் காரணமாக இருந்த ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டிய ஒரு நாளாக இந்த நாள், வேறுவகையிலே அமைந்திருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடவில்லை.

இன்று உருவாகியிருக்கிற பிரச்சினையை, சட்டப்பேரவையா, நீதிமன்றமா என்ற கேள்வியின் அடிப்படையிலே எழுந்துள்ள பிரச்சினையாக நான் எடுத்துக்கொள்ளவில்லை. மாண்புமிகு உறுப்பினர்களும் அப்படி எடுத்துக்கொள்ளமாட்டார்கள் என்றுதான் திடமாக நம்புகிறேன். இந்தப் பிரச்சினையை இலாவகமாகத் தீர்த்து வைக்க வேண்டும் முதலமைச்சர் என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மெத்தப் பெருந்தன்மையோடு, நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் பலம் வாய்ந்தவனோ, இல்லையோ, இந்தப் பிரச்சினையிலே, நீதிமன்றத்திற்கும், சட்டப்பேரவைக்கும்—நான் பலமாக உள்ளவன் அல்ல; இருந்தாலும்கூட — பாலமாக இருப்பேன் என்பதை எடுத்துக்கூறப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய பாலம் அமைக்கப்பட வேண்டும்; அமைந்திருக்கிற பாலத்தை யாரும்

தகர்த்துவிடக் கூடாது; பாழாக்கிவிடக் கூடாது என்ற தூய எண்ணத்தினுடைய அடிப்படையிலேதான், இங்கே உரையாற்றிய அத்தனை தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

இதே அவையில் நடைபெற்ற ஒரு நிகழ்வை நினைவூட்டுவது என்னுடைய கடமை. 1992 ஆம் ஆண்டு மே திங்கள் 4 ஆம் நாள், உயர்நீதிமன்றத்திற்கும் சட்டப் பேரவைக்கும் இடையிலே எழுந்த பிரச்சினை அல்ல; உச்சநீதிமன்றத்திற்கும், சட்டப்பேரவைக்கும் இடையிலே எழுந்த ஒரு பிரச்சினை; ஒரு பத்திரிகையின் மீது உரிமைப் பிரச்சினை வழங்கப்பட்டு, அதன் காரணமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின்பேரில், உச்சநீதிமன்றம் வரையிலும் வழக்குச் சென்று, அதைப் பற்றிய ஒரு தீர்மானம், தனித் தீர்மானமாக, அன்றைய அவையினுடைய முன்னவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கொண்டு வந்தத் தீர்மானம், அந்தத் தீர்மானத்தினுடைய வாசகங்களில் மிக முக்கியமான சில பகுதிகளை மாத்திரம் இங்கே நான் படித்துக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-00*

"தீர்மானம். 1992, மே 4, இந்திய அரசமைப்புச் சட்டம் 194-வது பிரிவின்படி, தமிழ்நாடு சட்டப் பேரவை, மற்ற பேரவைகளைப் போல தனித் தன்மை வாய்ந்த பொறுப்புகள், கடமைகள் மற்றும் உரிமைகள் ஆகியவற்றைப் பெற்றுள்ளது. பேரவையின் உரிமைகளையும், உறுப்பினர்களின் உரிமைகளையும் எல்லா வகையிலும் காக்க வேண்டிய முழுப்பொறுப்பும், கடமையும் இந்தப் பேரவைக்கு இருக்கிறது. இவற்றைப் பொறுத்தவரை, பேரவையின் உரிமைகளும் நடவடிக்கைகளும் நீதிமன்றங்கள், மற்றைய அமைப்புகள் தனி மனிதர் ஆகியோரின் தலையீட்டிற்கு அப்பாற்பட்டவையாகும். தமிழக சட்டமன்றப் பேரவை, அவைத்தலைவர், அவை உறுப்பினர்கள் ஆகியோரின் மதிப்புரிமைகளைப் பாதிக்கின்ற முறையிலும் புறக்கணிக்கின்ற வகையிலும் தவறான கருத்துகளையும் தவறான செய்திகளையும் வெளியிட்ட ஒருசில பத்திரிகைகள் மீது சட்டமன்ற விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய தீர்ப்புகளும் வழங்கப்பட்டன. இப்படிப்பட்ட நிலையில் இந்தச் சட்டமன்றப் பேரவையின் செயலாளர், உச்ச நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவர்கள் தொடுத்துள்ள வழக்கை ஒட்டி 5-5-1992 அன்று உச்ச நீதிமன்றத்தில் அவையின் நடவடிக்கை தொடர்பான சில குறிப்பிட்ட தகவல்களோடு



நேரில் வருகை தரவேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டுள்ளார்கள். 27-4-1992 அன்று உச்ச நீதிமன்றம் பேரவைச் செயலாளரை பிரதிவாதியாகச் சேர்த்து நோட்டீசை அனுப்பியதாக உள்ள பிரச்சினை சில செய்தித்தாள்களில் வந்தபோது பேரவைத் தலைவர், இப்பேரவை இடும் கட்டளை மற்றும் தெரிவிக்கும் அறிவுரை ஆகியவை தவிர வேறு எதையும் பேரவைச் செயலாளர் பொருட்படுத்தத் தேவையேயில்லை, வேண்டியதேயில்லை என்று தீர்ப்பு அளித்துள்ளார் என்று இந்தப் பேரவை நினைவுகூர்கிறது. மேலும், நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை ஆகியவற்றின் செயலாளர்களோ, இந்திய மாநிலங்களின் மேலவை, பேரவை ஆகியவற்றின் செயலாளர்களோ இதுவரையில் உச்ச நீதிமன்றம் அல்லது பிற நீதிமன்றங்கள் ஆகியவற்றின் வரம்பு கடந்து நிற்கும் ஆணைகளை ஏற்று எந்த ஒரு நீதிமன்றத்திலும் ஆஜரானதில்லை என்பதை இப்பேரவை தெளிவுபடுத்துகிறது. ஆகவே, பேரவையின் ஆணைகளை நிறைவேற்றி வைக்கின்ற பேரவைச் செயலாளர், உச்ச நீதிமன்றத்தின் ஆணையை ஏற்று 5-5-1992 அன்று உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டிய அவசியமேயில்லை என்று இப்பேரவை தீர்மானிக்கிறது. இதேபோல, அவை உரிமை மீறல் பிரச்சினைக்காக உச்ச நீதிமன்றத்திலேயுள்ள இப்பேரவை தொடர்பான அனைத்து வழக்குகளிலும் பேரவையின் எந்த ஓர் உறுப்பினரோ, செயலாளரோ, பேரவைச் செயலக ஏனைய அதிகாரிகளோ, எவ்வித நோட்டீஸ்களையும், அழைப்பு ஆணைகளையும், பிற ஆணைகளையும், அறிவுறுத்தல்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

இந்தத் தீர்மானத்தை அன்றைக்கு நிறைவேற்றி இந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே உரையாற்றியவர், அவையின் முன்னவர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் ஆவார்கள். ஆனால், இன்றைக்கு என்ன நிலை? அந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை அவைத் தலைவராகக் கொண்ட அந்தக் கட்சியினுடைய சார்பில் நீதிமன்றத்திலே தரப்பட்டுள்ள வக்காலத்தில், பேரவைத் தலைவர், தமிழக அரசின் தலைமைச் செயலாளர், சட்டமன்றச் செயலாளர், இந்த மூவரையும் இணைத்து, இவர்களுக்கு Notice அனுப்பப்பட வேண்டுமென்ற வகையிலே வக்காலத்து நீதிமன்றத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. நீதிபதியே பார்த்து இவர்களையெல்லாம் ஏன் சேர்த்தீர்கள், எனவே, இதை எடுத்துக்கொள்ள முடியாது என்று கூறியிருக்கலாம். என்ன காரணத்தாலோ அது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு

உள்ளே செல்ல நான் விரும்பவில்லை. அது நீதிமன்றப் பிரச்சினை என்ற காரணத்தால் செல்வது முறையாகாது. ஆனால், இவர்களையும் இணைத்து எந்தக் கட்சியினுடைய அவைத் தலைவராக இன்றைக்கு இருக்கின்ற நாவலர் அவர்கள் அன்றைக்கு அவையின் முன்னவராக இருந்தாரோ அன்றைக்குச் சொல்லப்பட்ட அந்தக் கருத்துகளுக்கு மாறாக அந்தக் கட்சியிலே உள்ளவர்கள் இன்றைக்கு நீதிமன்றத்திலே பேரவைத் தலைவர் மீதும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் மீதும், சட்டமன்றச் செயலாளர் மீதும், குறிப்பிட்டு அவர்கள் மீது இந்த வக்காலத்தை வழங்கி இருக்கின்றார்கள், சமர்ப்பித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. வழங்கப்பட்ட தீர்ப்பு 23 ஆம் தேதி அன்று பேரவைத் தலைவராகிய தாங்கள் இந்தப் பேரவை உறுப்பினர்களுடைய ஏகோபித்தத் தீர்மானத்திற்கிணங்க அறிவித்த அந்த ஆணையின் அடிப்படையிலே அல்ல—22 ஆம் தேதி தான் நடந்தது என்பது, எல்லாம் நடந்து முடிந்த பிறகுதான், நான் இங்கே கோட்டைக்கே வந்தேன். வந்தபோதுகூட அவைக்கு வரவில்லை நான். அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அடிபட்டு, இரத்தம் ஒழுகிக் கொண்டிருக்கிறது என்ற செய்தி உடல்நலமின்றி வீட்டில் இருந்த எனக்குக் கிடைத்தவுடன் ஓடோடி வந்தேன். வந்து, சிகிச்சை பெற்ற அவரை தங்களுடைய அறையிலே பார்த்து, அவருக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தேன். அப்போது அங்கே உள்ள ஒலிபெருக்கியினுடைய சத்தம்கூட கிடையாது. இங்கே என்ன நடந்தது என்பதுகூட எனக்குத் தெரியாது. இங்கே வருவதற்கு முன்பே தாமரைக்கனியின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு தாமரைக்கனி ஒரு வார காலம் அப்புறப்படுத்தப்பட வேண்டும் — அவர் காவலிலே வைக்கப்பட வேண்டும்—தண்டிக்கப்பட்டல்ல—என்ற முறையில் அவருக்குப் பாதுகாப்பாகக்கூட ஒரு உத்தரவைத் தாங்கள் பிறப்பித்ததாக பிறகு நான் அறியவுற்றேன். இதுதான் அன்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சி.

*பிற்பகல் 1-05*

அந்த 22 ஆம் தேதி நிகழ்ச்சிக்குப் பிறகு இந்த அவையிலே தாங்கள். எடுத்த அந்த முடிவு சரியானதுதான் என்பதை 23 ஆம் தேதி அன்று தாமரைக்கனிக்கு 15 நாள் சிறைவாச தண்டனை அளிக்கவேண்டும் என்று இந்த அவையிலே உள்ள அத்தனை உறுப்பினர்களும் ஏகோபித்து ஒரேமனதாக அதை ஏற்றுக்கொண்ட ஒன்றிலிருந்து அவர்களே வழிமொழிந்து அதாவது அவை முன்னவர்,



பேராசிரியர் முன்மொழிந்ததை அனைவரும் வழிமொழிந்து ஏற்றுக்கொண்டதிலிருந்தே அது 23 ஆம் தேதி மாத்திரமல்ல, 22 ஆம் தேதி எடுத்த முடிவையும் அத்தனை பேரும் ஏற்றுக் கொண்டார்கள் என்பதுதான் பொருள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நீதிமன்றம் 22 ஆம் தேதி எடுத்த அந்த முடிவு சரியில்லை என்பதைப்போல அவரை ஜாமீனிலே வெளியிலே விடவேண்டும் என்ற ஒரு கருத்தை தந்திருக்கிறது. இதற்கிடையிலேதான் இப்படிப்பட்ட ஒரு மோதல் ஏற்பட்டுவிட்டதாக பத்திரிகையிலே நண்பர்கள் எல்லாம் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல பரபரப்பான செய்திகள் வந்திருக்கின்றன. இது உள்ளபடியே பத்திரிகைகளுக்குப் பரபரப்பான செய்திதான். இன்றைக்குள்ள பத்திரிகைகளை நான் குறைகூற மாட்டேன். இன்றைக்குள்ள சூழ்நிலையை எந்தப் பத்திரிகையும் பயன்படுத்திக்கொள்ளாமல் இருக்கமுடியாது. எனவேதான், பத்திரிகைகளிலே இந்தச் செய்தி பல பக்கங்களில் இன்றைக்கு வெளி வந்திருக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில், நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாமன்றம், இன்றைக்கு அவர்கள் அளித்திருக்கின்ற அந்தத் தீர்ப்பை—நேற்று வெளிவந்த அந்தத் தீர்ப்பை அல்ல—இன்றைக்கு அறிவித்திருக்கின்ற அந்தத் தீர்ப்பை ஏதோ நமக்கு ஏற்பட்ட ஒரு தோல்வியாக யாரும் கருதிக்கொள்ளக் கூடாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களும் கருதிக்கொள்ள மாட்டீர்கள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஏனென்றால், இது தோல்வியே அல்ல. தோல்வி என்றால், அன்றைக்கு, இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் வரையிலே தாமரைக்கனி கூட்டத்திலே கலந்துகொள்ளக் கூடாது என்று எடுக்கப்பட்ட முடிவு ரத்துச் செய்யப்படவில்லை நீதிமன்றத்தால். எனவே, இது தோல்வி அல்ல. ஒரு சிறு சறுக்கல். நாம் சறுக்கினோமா அல்லது நீதிமன்றம் சறுக்கியதா என்ற அந்தக் கேள்விக்கும் நான் விடை காண விரும்பவில்லை. ஏதோ ஒரு சறுக்கல் எப்படியோ ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சறுக்கலின் காரணமாக, அவர் ஜாமீனிலே இன்றைக்கு வெளிவர வேண்டுமென்று நேற்றையதினம் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நேற்று —1¼ மணிக்கு—இந்த அவையில் எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து தாமரைக்கனிக்கு 15 நாள் சிறைவாச தண்டனை என்கிற கருத்தை அனைவருமே ஒருமனதாக ஏற்றுக்கொண்டு, அதைத் தாங்கள் ஏற்று அவரை அந்தத் தண்டனைக்கு உரியவராக ஆக்கியது 1 மணி 15 நிமிட அளவிலே. 2½ மணி அளவிலே நடைபெற்ற நீதிமன்ற

விசாரணையில் அவர்கள் அவரை வெளியிலே விட வேண்டும் என்கிற ஆணையைப் பிறப்பித்தார்கள். அந்த ஆணை 8¾ மணிக்கு மேல்தான் சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறது. சிறை அதிகாரிகளுக்குச் சென்றிருப்பதாக இன்றைக்கு பத்திரிகைகளிலே எல்லாம் செய்திகள் வந்திருக்கின்றன. ஆனால், இங்கிருந்து, மாமன்ற உறுப்பினர்கள் சார்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தாங்கள் இட்ட ஆணை 6 அல்லது 6½ மணி அளவிலே சிறைச்சாலைக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. இதிலே சிறை அதிகாரிகளுக்குப் பெரும் சங்கடம். எந்த ஆணையை நிறைவேற்றுவது என்று. ஆனால், அவர்களைப் பொறுத்தவரையிலே முன்னாலே வந்த ஆணை 15 நாள் தண்டனை என்கின்ற ஆணை மாமன்றத்தினுடைய ஆணை. ஆனால், நீதிமன்றம் வெளியிட்டிருக்கின்ற தீர்ப்பில், 7 நாள் அவர் காவலிலே வைக்கப்பட வேண்டும் என்பதைத்தான் அவர்கள் கருதிப் பார்த்து அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டிருக்கிறது. இதிலே எந்த ஆணையை நிறைவேற்றுவது என்ற சங்கடத்திற்கிடையிலே நீதிமன்றத்திற்கும் இந்த மாமன்றத்திற்கும் இடையிலே ஒரு மோதல் ஏற்பட்டுவிடுமோ என்று இந்தப் பிரச்சினையை வெகு ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும் என்றுதான் நானும் கருதுகின்றேன்.

பிற்பகல் 1-10

இங்கே பலப்பல உதாரணங்கள் எல்லாம் சொல்லப்பட்டன. இலை, துணி, தண்டவாளம் என்றெல்லாம் சொல்லப்பட்டன. இன்னும் சொல்ல வேண்டுமேயானால்,. நீதிமன்றம், இந்த மாமன்றங்கள் இரண்டுமே ஒரு மத்தளத்தினுடைய இரண்டு பக்கங்களைப் போன்றது. ஒரு பக்கத் தோல் கிழிந்தாலும் மத்தளம் ஒழுங்காக ஒலிக்காது. எனவே இரண்டு பக்கத் தோலையும் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்டுகின்றேன்.

தங்களைப் பொறுத்தவரையிலே எனக்கு நிறைந்த நம்பிக்கை உண்டு. பாரம்பரியம் மிக்க நீதிக் கட்சியினுடைய பெருந்தலைவர்களில் ஒருவரான பி.டி.ஆர். அவர்களுடைய மகன் மாத்திரமல்ல தாங்கள். நீதிக் கட்சியின் இன்றைய வாரிசுகளிலே ஒருவராக விளங்குபவர் தாங்கள். 'நீதிக் கட்சி'யிலே இருக்கிற, கட்சி இருக்கிறதோ, இல்லையோ, நீதி என்றைக்கும் உங்களுடைய நெஞ்சிலே நிலைத்து இருக்கும் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே இந்த அவையினுடைய



இறையாண்மையைக் காப்பாற்றுகின்ற, உரிமையைக் காப்பாற்றுகின்ற அத்தனை பொறுப்பும் உங்களுக்கு இருக்கிறது. நான் சொல்லுகின்றேன். உங்களுக்கு விட்டுக் கொடுக்கவும் தெரியும். விட்டுப் பிடிக்கவும் தெரியும், நிறைவேற்றுங்கள் என்று கூறி விடைபெறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவரும் மற்ற கட்சிகளின் தலைவர்களும், நம்முடைய அவையின் இறையாண்மை குறித்து ஏராளமான நல்ல கருத்துகளைச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்கு மேல் சொல்வதற்கு எனக்கு ஒன்றும் கிடையாது. ஆனால் சில விளக்கங்கள் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த வழக்கு தொடர்பாக முதலாவதாக நம்முடைய உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னதைப் போல, இறுதியாக முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, இந்த வழக்கிலே பிரதிவாதிகளாக, தலைமைச் செயலாளர், பேரவைத் தலைவர், பேரவைச் செயலர் மூன்று பேருமே சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். அரசு எடுக்க வேண்டிய முடிவு, தலைமைச் செயலாளர் இதிலே பிரதிவாதியாக ஆஜர் ஆவதா, இல்லையா என்பது. ஏனென்றால், பேரவைத் தலைவர் என்ற முறையில் எந்தக் காலகட்டத்திலும் எனக்கு உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் பேரவைதான். ஆகவே எந்த மன்றத்தின் உத்தரவையும் நான் பொருட்படுத்தப்போவதில்லை என்பதை மிகத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைச் தட்டும் ஒலி) அவருக்கும் இந்தத் தீர்ப்பிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. பேரவைத்

பேரவைச் செயலாளரைப் பொறுத்தவரையில், ஒரு விளக்கம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். எங்களுடைய சட்டப் பேரவைத் துறையிலே 400-க்கும் மேற்பட்டவர்கள் ஊழியர்களாகப் பணியாற்றுகின்றார்கள். அவர்கள் ஊதியம் சம்பந்தமாக, ஊழியம் சம்பந்தமாக வழக்கு உயர்நீதிமன்றத்திலே தொடுக்கின்ற நேரத்திலே செயலாளர்மீது தான் வழக்குத் தொடுப்பார்கள். அதிலே பல நேரங்களில் செயலாளர்மீது வழக்குத் தொடர்ந்தாலும், உத்தரவை பேரவைத் தலைவர்தான் போட்டிருப்பார். அது நீண்டகால மரபு, இப்படி ஊழியர்கள் தொடர்பான வழக்குகளிலே உயர்நீதிமன்றம்

என்ன தீர்ப்பைச் சொல்லுகின்றதோ, அந்தத் தீர்ப்பை பேரவைத் தலைவர் மட்டுமல்ல, செயலாளரும் ஏற்றுக்கொள்வதுதான் மரபு. ஆனால் இந்த வழக்கைப் பொறுத்தவரையில், நம்முடைய அவையின் உரிமையைப் பொறுத்த வழக்கு. ஆகவே இந்த வழக்கில் பேரவைச் செயலாளர் அவர்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். அந்த அடிப்படையிலே பேரவைச் செயலாளர் அவர்களும் இந்த உயர்நீதிமன்றத்திலே வரக்கூடிய பிரதிவாதி என்ற முறையிலே அனுப்பப்படுகின்ற summon-களுக்கோ, Notice-களுக்கோ பதில் சொல்ல வேண்டியதில்லை என்ற தீர்ப்பையும் இப்போது நான் வழங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

*பிற்பகல் 1-15*

அடுத்து, இந்த வழக்கைப் பொறுத்தவரையில், 3 உத்தரவுகளை நான் பிறப்பித்திருக்கின்றேன். 22-3-1999 அன்று சம்பவம் நடந்த பிறகு, இங்கே எல்லா கட்சித் தலைவர்களும் கருத்தைச் சொன்னீர்கள். கருத்துச் சொன்ன பெரும்பாலான தலைவர்கள் மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் கொடிய குற்றத்தைச் செய்திருக்கிறார்கள்; கட்டாயமாக குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று பெரும்பாலானவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அதனடிப்படையில், நான் அவைக்கு ஓர் அறிவிப்புச் செய்து, அவரைக் கைது செய்வதற்கு உத்தரவு இடுவேன் என்று சொன்னேன். அதன்படியே நான் முதலில் போட்ட உத்தரவு அவரைக் கைது செய்வதற்கு. இரண்டாவது உத்தரவு போட்டதற்குக் காரணம் \ மாநகரக் காவல் ஆணையர் அவர்கள் என்னிடம் ஒரு ஐயப்பாட்டைக் கிளப்பினார்கள். தாமரைக்கனி அவர்கள் கிடைப்பார்களோ, தலைமறைவாக இருப்பார்களோ தெரியாது. ஆனால் அவர்கள் பிடிபட்டால் நாங்கள் எங்கே அவரை ஆஜர்படுத்த வேண்டுமென்று நீங்கள்தான் சொல்ல வேண்டும். காரணம், காவல் நிலையத்திலே எந்தப் புகாரும் இல்லை. காவல் நிலையத்திலே புகார் இருந்திருந்தால் காவல் நிலையம் மூலமாக நீதிமன்றத்திலே remand report போட்டுக் கொடுக்கலாம். ஆனால் எந்தப் புகாரும் இல்லாமல் உங்கள் உத்தரவின் பேரிலேயே அவர் கைது செய்யப்படுகின்ற சூழ்நிலையில் அவரை எங்கே நிரந்தரமாக வைப்பது என்று கேட்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல பல சூழ்நிலைகளின் காரணமாக, அதிலே ஒன்று அவருடைய



பாதுகாப்புக்காகக்கூட, நான் 7 நாட்கள் அவரை மத்திய சிறையிலே வைக்க வேண்டுமென்று சொன்னேன். இந்த 7 நாட்கள் என்பது சிறைத் தண்டனை இல்லை என்பதைப் பலமுறை தெளிவாகச் சொல்லிவிட்டேன். இப்போதும் அவையிலே சொல்கின்றேன். நான் 7 நாட்கள் அங்கே சிறையிலே இருக்க வேண்டுமென்று சொன்னதற்குக் காரணம், தாமரைக்கனி அவர்களைப் பொறுத்தவரையில், நம்முடைய பேரவை என்ன முடிவு எடுக்கப் போகின்றது என்று எனக்குத் தெரியாது. தன்னிச்சையாக நான் முடிவு எடுப்பதாக இல்லை. கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினேன். ஒரு வேளை கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே இதை உரிமைக் குழுவுக்கு அனுப்புங்கள் என்று சொன்னால் ஒரு நாள், இரண்டு நாளிலே முடியக்கூடிய பிரச்சினை அல்ல. அதற்கு மாறாக, கட்சித் தலைவர்கள் அனைவருமே அன்று நானே உரிமைக் குழுவாக மாறி இந்தச் சம்பவம் நம்முடைய கண் முன்னாலே நடந்த காரணத்தால், உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை, நானே முடிவு எடுக்கலாம் என்ற முடிவை எடுத்தார்கள். ஆகவே, 23 ஆம் தேதி இந்த 15 நாள் காவல் என்று ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பேரவையின் மாண்புமிகு முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு, அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் காரணமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, 1¼ மணியளவிலே 22 ஆம் தேதி நான் போட்ட உத்தரவு தானாகவே இரத்தாகிவிட்டது. அதைப் பலபேர் மறந்துவிட்டார்கள். அது இரத்தாகிவிட்டது என்பதற்கு அடையாளம்தான் 1-30 மணியளவிலே, 15 நாள் காவல் என்று நான் அறிவித்த பிறகு Warrant of Arrest, Warrant of commitment for simple imprisonment என்று இந்த 3-வது உத்தரவை—23 ஆம் தேதி மாலை 6 மணியளவிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களே, இந்த உத்தரவை, இந்த warrant-ஐ—23 ஆம் தேதி நான் பிறப்பித்தேன். அதிலே ஒரேயொரு வரியை நான் இங்கே படிக்கின்றேன்.

"...and now, therefore, I, P.T.R. Palanivel Rajan, Speaker of the Tamil Nadu Legislative Assembly direct that the said Thiru Thamaraikani, has committed Breach of Privilege and Contempt of the House and, therefore, he be kept in prison for simple imprisonment for 15 days from the date of production in the Central Prison, Chennai in supersession of my direction dated 22nd March at Chennai." அதாவது, நான் 23 ஆம் தேதி அனுப்பி வைத்த உத்தரவிலே, இன்று அனுப்புகின்ற உத்தரவின் காரணமாக

நேற்றைக்கு 7 நாள் அவர் சிறையிலே இருக்க வேண்டுமென்ற உத்தரவு தானாகவே ரத்தாகின்றது என்பதை நானே குறிப்பிட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

அதற்காகத்தான் இதைப் படித்துக் காண்பிக்கின்றேன். ஆகவே, நீதிமன்றத்திற்கும் நமக்கும், ஒருவருக்கொருவர் என்ன நடக்கின்றது என்று தெரியாமல் நடந்த நிகழ்ச்சிதான் இது.

பிற்பகல் 1-20

நான் 23 ஆம் தேதி 15 நாள் காவல் என்று சொல்லி 22 ஆம் தேதி நான் போட்ட உத்தரவு 7 நாட்கள் உள்ளே இருக்க வேண்டும் என்ற உத்தரவு இரத்து ஆகிவிட்டது என்று தெளிவாக அறிவித்துவிட்டேன். இது $1\frac{1}{4}$ மணிக்கு நாம் எடுத்த முடிவு. $2\frac{1}{2}$ மணிக்கு உயர்நீதிமன்றம் கூடிய நேரத்தில், நான் எந்த உத்தரவை இரத்து செய்தேனோ அதற்குத் தற்காலிகத் தடை விதிந்து அவரை ஜாமீனிலே விட்டிருக்கின்றார்கள். அதை, பல உறுப்பினர்கள் சொன்னதைப்போல, அரசாங்கத்தின் சார்பிலே அங்கு எடுத்துச்சொல்லக்கூடிய சூழ்நிலை இல்லை. இன்று காலையிலே, அரசாங்கத்தின் சார்பாக என்றுகூடச் சொல்ல முடியாது, Additional Advocate-General அவர்கள் நீதிமன்றத்திலே ஆஜராகி இப்படியொரு சிக்கல் ஏற்பட்டுவிட்டது, ஏற்கெனவே பேரவைத் தலைவர் அவர்கள் இரத்து செய்த உத்தரவிற்குத்தான் தடை விதித்திருக்கிறீர்கள் என்று சொல்லிப் பார்த்தார்கள். மாண்புமிகு நீதிபதி இது அந்த நேரத்திலே எங்களுக்குச் சொல்லப்படவில்லை, ஆகவே நாங்கள் அவரை ஜாமீனில் விட உத்தரவிட்டுவிட்டோம். 30 ஆம் தேதி வழக்கு விசாரணை நடக்கின்ற நேரத்தில் இதைத் தெளிவாக எடுத்துச் சொல்லலாம் என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, இந்த விளக்கத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இது அத்தனையையும் காட்டிலும், நான் பத்திரிகைகளில் சொன்னதைப் போல, எனக்கு உயர் நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் இந்தப் பேரவைதான்; வேறு எந்த அதிகாரத்திற்கும் நான் உட்பட்டவன் அல்ல. தனிப்பட்ட முறையிலே ஒரு குடிமகன் என்ற முறையில், ஒரு சாதாரண Magistrate உத்தரவிற்குக்கூட நான் கட்டுப்பட்டவன். ஆனால், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்ற முறையில் எந்த அதிகாரமும் என்னைக் கட்டுப்படுத்த முடியாது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்த அவைதான் என்னைக் கட்டுப்படுத்த முடியும். இதை மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் தெளிவாக, அழகாக



ஆங்கிலத்திலே எடுத்துச்சொன்னார்கள். I shall listen only to this House and whatever be the directions of this House, as the servant of the House, I shall carry out the orders. ஆகவே, இந்தப் பேரவை ஒருமனதாக—மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் செய்த கொடுங்குற்றத்திற்காக 15 நாட்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக—நாம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றோம். நம்முடைய உயர்நீதிமன்றத்தோடு எந்தக் காரணம் கொண்டும் மோதல் செய்ய பேரவைத் தலைவர் என்ற முறையிலே நானோ, அரசாங்கத்தின் தலைவரான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ எந்த முயற்சியிலேயும் நிச்சயமாக ஈடுபடவில்லை என்பதை உங்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைப்போல சிறை அதிகாரிகளுக்கு இரண்டு உத்தரவுகள் இருக்கின்றன. ஒன்று, என்னுடைய உத்தரவு, 15 நாட்கள் தாமரைக்கனி உள்ளே இருக்க வேண்டும்; இன்னொரு உத்தரவு அவரை ஜாமீனில் விடவேண்டும் என்பது. நான் நீதிமன்றத்தோடு மோதல் செய்ய வேண்டும் என்று நினைத்திருந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிர்வாகத்தின் தலைவர் என்ற முறையில் இந்தப் பேரவையின் உத்தரவைத்தான் நீங்கள் அமல்படுத்த வேண்டும் என்று சிறை அதிகாரிகளுக்கு உத்தரவு போடலாம். அப்படிச் செய்திருந்தால், நீதிமன்றத்தோடு மோதுவதாக அர்த்தம். அதற்கு மாறாக நீதிபதி அவர்களைப் பார்த்து, இப்படிப்பட்ட இரண்டு உத்தரவுகள் இருக்கின்றன. இவற்றில் எந்த உத்தரவை சிறை அதிகாரிகள் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டு, அவர்கள் சொன்னபடி நாம் செய்திருக்கின்றோம். இதுவே ஒரு நல்ல உதாரணம்.

நீதித் துறையோடு மோதுவதற்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம் தயாராக இல்லை. நீதிபதிகளை மதிப்பவர்கள். பல பேர் எடுத்துச் சொன்னதைப் போல நான் 45 ஆண்டுகாலம் வழக்கறிஞராக இருந்திருக்கிறேன். நானே நீதிமன்றத்தை மதிக்காமல் இருந்தால், வேறு யார் மதிக்க முடியும் என்ற ஒரு உணர்வு எனக்கு எப்போதும் உண்டு. அதேநேரத்தில் இந்தப் பேரவையின் தலைவர் என்ற முறையில் இந்தப் பேரவையின் இறையாண்மையைக் காப்பாற்றுவது என்னுடைய தலையாய கடமை என்று நான் கருதுகின்றேன். 22 ஆம் தேதி போட்ட உத்தரவுக்கு—இடைக்கால உத்தரவுக்கு—தடை விதித்து,

மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களை ஜாமீனிலே விட்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், 23 ஆம் தேதி நம்முடைய பேரவை ஒருமனதாக எடுத்த முடிவின் அடிப்படையிலே இப்போது ஜாமீனிலே வெளியே வந்திருக்கக்கூடிய திரு. தாமரைக்கனி அவர்களை மீண்டும் கைது செய்து (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய சிறைச்சாலையிலே, 15 நாள் சிறைத் தண்டனைக்காக, மீண்டும் சிறைச்சாலையிலே அடைக்க வேண்டும் என்ற உத்தரவில் உங்கள் முன்னால்தான் கையெழுத்துப் போட்டிருக்கிறேன் என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எந்தக் காலத்திலும் இந்தப் பேரவைத் தலைவர் என்ற முறையில் நம்முடைய இறையாண்மையைக் காப்பாற்றுவது என்னுடைய தலையாய கடமை; அதை என்னுடைய தலைவரான மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எனக்கு வலியுறுத்தி எடுத்துச் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

## 3. அறிவிப்பு

### பேரவை அலுவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நிகழ்ச்சி நிரலில் ஒரு சிறு மாற்றம். இன்று முழுவதும் இந்த நிதி நிலை அறிக்கையைப் பற்றிய பொது விவாதம் நடைபெறவில்லை. ஆகவே, 27 ஆம் தேதி சனிக்கிழமை, பேரவை உண்டு. அன்றையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உரையும், மாண்புமிகு முதலமைச்சர் பதிலுரையும் இருக்கும் என்று இப்பொழுது அறிவிக்கின்றேன்.

இந்த அளவோடு இன்றைய கூட்ட நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் நாளை (25-3-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.





## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

85. ஈரோடு அங்காடிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள 23 அங்காடிகளின் அறிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிக்குள் எள் அல்லது பேய் எள் விற்பனையை முறைப்படுத்துவது குறித்து வேளாண்மைத் துறையின் 8-1-1998 ஆம் நாளிட்ட 9 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (c) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

86. சேலம் அங்காடிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள 19 அங்காடிகளின் அறிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியில் தேங்காய் (மட்டை உரிககப்பட்டது, மட்டை உரிக்கபபடாதது. கொப்பரை) விற்பனையை முறைப்படுத்துவது குறித்து வேளாண்மைத் துறையின் 8-1-1998 ஆம் நாளிட்ட 10 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (c) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

87. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-3) பதினாறாவது ஆண்டறிக்கை, [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

88. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்- 4) முதல் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

89. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-4) இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

90. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்-I) இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

91. 1997-98-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

92. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிட்டுக் கழகத்தின் பதின்மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

93. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிட்டுக் கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-

221072

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.